ஸ்ரீ

# பட்டர் வைபவம்.

With the be
complimen
the au

கும்பகோணம்காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

வை. மு. சடகோபராமாநுஜாசாரியர்

இயற்றியது.

MAHAMAHOPADHYAYA
DR U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

சே. கிருஷ்ணமாசாரியரால்

சென்னை

கணேச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு.

பிலவங்க௵

[All Rights Reserved.]

ஸ்ரீ

கடவுள்துணை.

# முகவுரை. 135

கல்விகேள்விகளிற் சிறந்த கனவான்களே!

நம்மாழ்வார்முதலிய ஆழ்வார்கள் அருளிச்செய்த செந்தமிழ்ப்பாமாலைகளாகிய திருவாய்மொழிமுதலிய திவ்வியப்பிரபந்தங்களின் ஆழ்பொருளில் ஈடுபட்டு அரிய பெரிய அப்பொருளை அனைவரும் கேட்டு ஆனந்தமடைந்து உய்யும்படி பரக்க உபந்யசிப்பதையே பொழுதுபோக்காகக் கொண்டவரும், தம் மாணாக்கரான நஞ்சீயரைக்கொண்டு திருவாய்மொழிக்கு ஓர்உரை செய்வித்தவரும், வடமொழிதென்மொழிக்கடல்களை நிலைகண்டு உணர்ந்தவரு மான ஸ்ரீபட்டருடைய வைபவம் எழுதலாயிற்று.

சுத்த ஸம்ஸ்கிருத நடையிலும் வடமொழி விரவிய தென்மொழியாகிய மணிப்பிரவாளநடையிலும் தமிழ்நடையிலும் பழமையாகவுள்ள பலநூல்களிலிருந்தும் உரைகளிலிருந்தும் தேடியெடுத்து விஷயங்களைச் சேர்த்துத் தொகுத்து இங்ஙனம் எளியவசனநடையில் ஒருசிறுநூலாகஎழுதினேனே யன்றி, ஆதாரமின்றிக் கற்பனையாக யாதொன்றையும் எழுதினேனில்லை. "முன்னோர்மொழிபொருளேயன்றியவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்"* என்பது இலக்கணமாதலால், ஆங்காங்கு ஆன்றோர் எழுதியுள்ள சொற்களும் சொற்றொடர்களும் இந்நூலிற் சிற்சிலவிடத்து எடுத்து ஆளப்பட்டுள்ளன. மற்றும் சில வைணவபரிபாஷைகளும் இன்றியமையாமையால் இந்நூலிற் காணப்படும்.

* நன்னூல் - பொதுப்பாயிரம் - க.

'குற்றமுணர்பவர்'என்னும் பொருள் பட வித்வான்களுக்கு'தோஷஜ்ஞர்'என்றொருபெயர் வடமொழியிலிருப்பதை நோக்குமிடத்து அவர்கள்முன்னிலையில் யாரும் எதனையுஞ் சொல்லத் தரமில்லை யாயினும்,'பாற்கடலினின்றுதோன்றிய விஷத்தையும்சந்திரனையுமெடுத்துக்கொண்டசிவபெருமான் அவற்றிற் கொடியதான விஷத்தை வெளிப்படுத்தாது தமது கண்டத்திலே அடக்கிவைத்து நல்லதான சந்திரனைத் தலைமேற் கொண்டாற்போல, ஒன்றினிடத்து உள்ள குணதோஷங்களிரண்டையும் உணர்கிற புலவோர் குற்றத்தை வெளியிடாது நெஞ்சகத்தேநிறுத்திக் குணத்தைச் சிரமேற் கொண்டு கொண்டாடுவர்' என முன்னோர் சொல்லியிருத்தலாலும், 'பாலைப்பார்த்தோ? பானையைப்பார்த்தோ?' என்று வழங்குகிற பழமொழிப்படி என்சொற்குற்றங்காரணமாக இகழ்ந்திடாது விஷயகௌரவங் காரணமாக அங்கீகரிப்பர் அறிவுடையார் என்னுந் துணிவினாலுமே, இதனை வெளியிடலானேன்.

"நாண்பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்கு உரைப்பாருளரென்று நாடுவோமே"* என்ற ஆன்றோரருளிச்செயலைச் சிரமேற்கொண்டுள்ளேனாதலால், உணர்வுடையார் உசிதமாகச்சொல்லுஞ் சீர்திருத்தங்களை நன்றியறிவுடன் ஏற்றுக்கொள்ளுதற்குச் சித்தனாயிருக்கிறேன்.

இப்புத்தகத்தை அபிமானித்து 1909 - ஆம் வருஷத்து யப் - ஏ பரீக்ஷைக்குப் பாடமாக நியமித்த கனம் பொருந்திய சென்னை யூநிவர்ஸிடியார்பக்கல் மிக்க நன்றியறிவுள்ளவனாயிருக்கின்றேன்.

கும்பகோணம்.
20 - 12 - 07.

வை. மு. சடகோபராமாநுஜாசாரியன்.

---

* தேசிகப்பிரபந்தம் - அம்ருதாஸ்வாதினீ - ௩௫.

ஸ்ரீ

# பட்டர் வைபவம்.

## (முதற்பாகம்.)

"தெண்ணீர் வயற்றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து"*என்று ஔவையார் கொண்டாடிக்கூறியபடி நீர்வள நிலவளச்சிறப்போடு அறிவொழுக்கங்களினா லான்றவர்பலர்க்குப் பிறப்பிடமும் உறைவிடமு மாகுஞ் சிறப்பையுமுடைய தான தொண்டைநாட்டிலே இராஜதானியாயும் "காசிமுதலாகிய நன்னகரியெல்லாங் கார்மேனியருளாளர் கச்சிக் கொவ்வா"† என்னும்படி முத்திதருநகரமேழனுள் முக்கியமானதாயுஞ் சிறக்கின்ற காஞ்சீபுரத்திற்கு அருகிலே மேற்றிசையிலுள்ள கூரமென்னும் அக்கிரகாரத்தில் அந்தணவருணத்திலே ஆழ்வானென்ற திருநாமமுடையராய் ஒரு பெரியவர் இருந்தார்.

இக்கூரத்தாழ்வான், ராமாநுஜாசார்யரென்றும் உடையவரென்றும் எம்பெருமானாரென்றும் வழங்கப்படுகிற ஸ்ரீ பாஷ்யகாரருடைய அந்தரங்கசிஷ்யர்களில் முதல்வர்.

‡ பஞ்சகாலமுறைமை தவறாமல் அநுஷ்டித்துவருகிற பாகவதோத்தமரான கூரத்தாழ்வான் தமது ஆசார்யரான உடையவரது சமீபத்தில் நிரந்தரவாஸஞ்செய்யக்கருதிக்

---

*"வேழமுடைத்து மலைநாடு மேதக்க, சோழவளநாடு சோறுடைத்துப்—பூழியர்கோன், தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற் றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து."—ஔவையார்.

† தேசிகப்பிரபந்தம் - அம்ருதாஸ்வாதிநீ - ௨௭.

‡ ஒருதினத்தின் பகற்பொழுதைப் பிராதக்காலம் ஸங்கவகாலம் மத்தியாஹ்நகாலம் அபராஹ்நகாலம் ஸாயங்காலம் என்று ஐந்தாகப்பகுத்து, சூரியோதயம்முதல் அவ்வாறுநாழிகை இவற்றிற்கு

கூரத்திலிருந்து ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளும் பொழுது அதிகவைராக்கியத்தால் தமது சகலசம்பத்துக்களையும் பரித்தியாகஞ் செய்துபோந்தன ராதலால், அதுமுதல் நாள்தோறும் உபாதாநகாலத்திலே ஸ்ரீரங்கத்தில் சிலதிருமாளிகைகளில் உஞ்சவ்ருத்திசெய்து அதுகொண்டு குடும்பகாரியத்

---

முறையே உரியன வென வரையறுத்து, அபிகமநம் உபாதாநம் இஜ்யா ஸ்வாத்யாயம் யோகம் என்ற ஐந்துஒழுக்கங்களையும் முறையே அந்தஐந்துசிறுபொழுதிலும்அநுஷ்டிக்கும்படி பாஞ்சராத்திரம் முதலிய ஆகமங்கள் கூறும். இரவில் ஆசரிக்க வேண்டுவதும் யோகாநுஷ்டாநமே. இவற்றின் விவரம் வருமாறு:—முதலாறுநாழிகையாகிய பிராதக்காலத்திலே, ஸ்நாநம் ஸந்த்யாவந்தநம் ஜபம் முதலிய காலைக்கடன்களைச் செய்துமுடித்துத் தாம் வழிபடுகடவுளின் சந்நிதிக்குச் சென்று பிரதக்ஷிணநமஸ்காரங்களால் எம்பெருமானை உகப்பிக்கவேண்டும்; இது, அபிகமநகாலநியமம். அதற்குஅடுத்த ஸங்கவகாலத்திலே பகவதாராதநத்துக்கு வேண்டிய சுத்ததீர்த்தம் சந்தநம் புஷ்பம் தூபதீபதிரவியங்கள் முதலியவற்றையும், திருமஞ்சனத்துக்குவேண்டிய பால் தயிர் நெய் தேன் முதலியவற்றையும், எம்பெருமானுக்கு அமுதுசெய்வித்தற்கு வேண்டிய அரிசி பருப்பு கறியமுது சர்க்கரை நெய் தயிர் பழம் முதலிய போஜநோபகரணங்களையும் சம்பாதித்துத் தொகுத்துச் சித்தஞ்செய்யவேண்டும்; இது, உபாதாநகால நியமம். மூன்றாவதான மத்தியான்னகாலத்திலே, மாத்தியான்னிகஸ்நாநமும் மாத்தியான்னிகசந்த்யாவந்தநமுஞ்செய்து விதிமுறைவழுவாது பகவானுக்குத் திருவாராதநம்பண்ணிப் பக்குவமான உணவுகளை அமுதுசெய்வித்து அங்ஙனம் நிவேதித்த உணவுகளை விருந்தினரோடும் பந்து மித்திரர்களோடும் புசிக்கவேண்டும்; இது, இஜ்யாகால நியமம். அதற்கு அடுத்ததான அபராண்ணகாலத்திலே, வீடுபேற்றுக்குஉரிய வேதவேதாங்கங்களையும இதிகாச புராணங்களையும் மற்றும் உரிய நூல்களையும் கற்றலும் கற்பித்தலும் வேண்டும்; இது, ஸ்வாத்யாயகால நியமம். ஈற்றதான ஸாயங்காலத்திலே, மாலைக்கடனாகிய ஸந்த்யாவந்தநத்தைச் செய்யத்தொடங்கிச் சூரியாஸ்தமநமான பின்பு ஜபத்தைப் பூர்த்திசெய்து இராத்திரி போஜநாநந்தரம் ஏகாந்தமாகஇருந்து ஐம்பொறிகளையடக்கிப் பிராணாயாமஞ்செய்து மனத்தைப் பரமாத்மாவினிடத்தே லயப்படுத்திப் பகவத்தியானத்தோடு படுத்து உறங்கவேண்டும்;இது, யோககாலநியமம். இவ்வாறு அநுஷ்டிக்கும் பாகவதர், 'பஞ்சகால பராயணர்' எனப்படுவர்.

தை நடத்திவரலாயினர்; ஒவ்வொருநாளும்கிடைக்கிற போஜனோபகரண பதார்த்தத்தில் மறுநாளைகென்று சிறிதும் மிச்சப்படுத்தி வைத்துக்கொள்வதில்லை. இப்படி அன்றன்றைக்கு ஜீவநஞ்செய்துவருகையில், ஒருநாள் விடாப்பெருமழைபொழிந்ததனால், வெளியேபோய் உபாதானஞ்செய்துவரக்கூடாமற் போயிற்று. அதனால், அவர், அன்றைக்கு வெறுந்தீர்த்தமாத்திரத்தை உட்கொண்டு,

" கண்ணாநான்முகனைப்படைத்தானே
காரணாகரியாயடியேன்நான்
உண்ணாநாள்பசியாவதொன்றில்லை
ஓவாதேநமோநாரணாவென்று
எண்ணாநாளுமிருக்கெசுச்சாம
வேதநாண்மலர்கொண்டுனபாதம்
நண்ணாநாளவைதத்துறுமாகில்
அன்றெனக்கவைபட்டினிநாளே "*

என்றபடி பட்டினிபாராட்டாமல், "உண்ணுஞ்சோறுபருகுநீர்தின்னும்வெற்றிலையுமெல்லாங்,கண்ணனெம்பெருமான்"† என்றவாறு திருவாய்மொழி யநுசந்தாநமே தாரகமாகக் கொண்டு வேறு உணவின்றியே இருந்திட்டனர். அன்றை யிராத்திரி திருவரங்கம் பெரியகோயிலிலே பெரியபெருமாள் அமுதுசெய்கிறபோது உண்டான திருச்சின்னவொலியைக் கேட்டவளவில், ஆழ்வானுடைய தேவியாரான ஆண்டாள் பெருமாளைக்குறித்து 'உம்முடைய அடியவர் பட்டினியிருக்க, நீர் குலாவிக்குலாவி அமுதுசெய்தருளுகிறீரோ?' என்று நினைத்தவளவிலே, முற்றுமுணர்ந்த முழுமுதற்கடவுளாய்

* பெரியாழ்வார்திருமொழி - ௪௧ - ஆம் திருப்பதிகம் - ௬.
† திருவாய்மொழி - ௬௭ - ஆம் திருப்பதிகம் - ௧.

எங்குமுளனாகிற ரங்கநாதன் அந்த ஆண்டாள்நினைப்பைத் திருவுள்ளம்பற்றி,உடனே தேவஸ்தாநகாரியநிர்வாஹகரான உத்தமநம்பிக்கு அர்ச்சகமுகமாகக் கட்டளையிட்டு,அப்பொழுது தாம்அமுதுசெய்த அக்காரவடிசிலை அவரைக்கொண்டு குடை கொடி சாமரம் முதலிய வரிசைகளோடும் நாநாவித வாத்தியமுழக்கத்தோடும் ஆழ்வான் திருமாளிகைக்குஅனுப்பியருள,ஆழ்வானும் பதறியெழுந்திருந்து'இதுஎன்?'என்று திகைத்து எதிர்கொள்ள, உத்தமநம்பியும் 'நம்பெருமாள் தேவரீர்க்கு அக்காரவடிசில் அனுப்பியருளினர்: அங்கீகரிக்க வேணும்' என்றுசொல்லிப் பெருமாளுடைய நியமநத்தைத் தெரிவித்தனர். ஆழ்வான் 'மகாப்பிரஸாதம்' என்று அதில் தமக்கும் தமது பத்தினிக்குமாக இரண்டுதிரளைகளை யெடுத்துக்கொண்டு உத்தமநம்பியை அனுப்பிவிட்டு 'பெருமாள் இப்பொழுது இப்படி அடிசில்அனுப்பியருளியது என்னோ?' என்று சிந்தித்து, ஆண்டாளை நோக்கி 'நீ ஏதேனும் நினைத்ததுண்டோ?' என்று வினவ, அந்தப் பதிவிரதாசிரோமணி "அடியேன் வேறொன்றும்நினைக்கவில்லை: பெருமாள் இராத்திரி அமுதுசெய்தருளியபோது திருச்சின்னம் பணிமாறியவளவிலே, 'உமதுஅடியவர் இபபடி பட்டினியாயிருக்க, நீர் குலாவிக்குலாவி அமுதுசெய்கிறீரோ!' என்று நினைத்தேன்: இவ்வளவே" என்று விண்ணப்பஞ்செய்தனள். அதுகேட்டவுடன் ஆழ்வான் 'நீ இப்படி பெருமாளைக்குறித்து நிட்டூரமாக நினைக்கலாமோ?'என்று அவளுக்கு நல்லறிவுகூறி,பக்தவத்ஸலனை பகவானுடைய வரம்புகடந்த கருணைத்திறத்தை வியந்து, அந்த அடிசிலில் ஒருபகுதியைத் தாம் உட்கொண்டு மற்றதை மனைவிக்குக் கொடுத்தருளினர். முன்பு தசரதசக்கரவர்த்திக்குப் புத்திரகாமேஷ்டியிற் கிடைத்த பாயசத்தின் கூறுகளை ஸ்ரீராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்க

ளின் திருவவதாரத்துக்குக் காரணமானதுபோல, இப்பொழுது ஆழ்வானுக்கு இரண்டுகுமாரர்கள் அவதரிப்பதற்கு ஏது இத்திரளைகளிரண்டுமே.

அதுவேவியாஜமாக ஆண்டாள் கர்ப்பவதியாகிப் பத்து மாசங்கழிந்தவாறே பராசராம்சமும் வியாஸாம்சமுமான இரண்டுகுமாரரை யீன்றாள். இப்படி ஆழ்வானுக்கு இரட்டைப்பிள்ளைகள் திருவவதரித்த தினம்—கலிவருஷம் சஉஉச-ஆவதும், சாலிசகம் கoசரு - ஆவதுமான சுபகிருத் வருஷத்து வைகாசிமாதத்திற் பௌர்ணமிதிதியும் அநுஷ நக்ஷத்ரமுங் கூடிய புதன்கிழமையாகும். நம்மாழ்வாரால் வெளியிடப்பட்ட திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களின் விசேஷார்த்தங்களை உள்ளபடி யுணர்ந்து வெளியிட வல்லராகுபவரிவரென்பதற்கு அறிகுறியாக,இவரது திருவவதாரதினம் அந்த ஆழ்வாருடைய திருவவதார தினமாகிய வைகாசிவிசாகத்துக்கு அடுத்ததாக அமைந்ததென்னலாம்.

ஆசாரிய பரதந்திரரான ஆழ்வான் அக்குழந்தைகட்கு நாமகரணம் முதலியன செய்விப்பதற்கு உடையவர் கடவரென்று எண்ணித் தாம் ஒன்றுஞ் செய்யாதிருக்க, நம்பெருமாள் திருவருளால் ஆழ்வானுக்கு உபயகுமாரர்கள் உதித்ததற்காகப் பெருமகிழ்ச்சிகொண்டிருந்த ஸ்ரீபாஷ்யகாரர் அக்குழந்தைகள்பிறந்த பதினோராநாளிலே சிஷ்யவர்க்கத்துடன் ஆழ்வான்திருமாளிகைக்கு எழுந்தருளித் தமது பிரதான சிஷ்யர்களில் ஒருவரான எம்பாரை நோக்கி 'குழந்தைகளை எடுத்துக்கொண்டுவாரும்' என்ன, அவர் அங்ஙனமே பிரபந்நகுலக்கொழுந்தான அக்குழந்தைகளை யெடுத்துவரும்போது திருஷ்டிதோஷாதிகள் தாங்காதபடி ரக்ஷையாக த்வயமென்னும் மந்திரரத்தினத்தை அநுசந்தித்து வாழ்த்திக்

கொண்டேவந்து குழந்தைகளை எம்பெருமானார்க்குக் காட்டினர். அவர் மிக்ககளிப்புடனே ஆனந்தக்கண்ணீர் துளிக்கத் தம் திருக்கண்களாற் குளிரக்கடாக்ஷிக்கும்போது அத்தெய்விக சிசுக்களின் தேஜோவிசேஷத்தைக் கண்டு வியப்புக்கொண்டு 'எம்பாரே! இக்குழந்தைகளிடம் த்வயம் பரிமளிக்கின்றதே! இங்ஙனம் ஆகுமாறு என்செய்தீர்?' என்று வினவ, எம்பார் 'குழந்தைகட்குக்காப்பாக த்வயாநுசந்தாநஞ்செய்துகொண்டுவந்தேன்' என்றுசொல்ல, உடையவர் அப்படி எம்பார்காப்பிட்டதற்கு உகந்து அவரைப்பார்த்து 'இக்குழந்தைகள் உய்யும்வகையை நாடிச்செய்தற்கு முற்பட்டீ ராதலால், இவர்கட்கு நீரே ஆசார்யராகக்கடவீர்' என்று நியமித்து, குழந்தைகளுக்குத் தம்திருக்கையாற் பஞ்சாயுதத் திருவாபரணம்சாத்தி, நாமகரணசமயத்திலே, பராசரபகவானது திருவவதாரமானமூத்தகுழந்தைக்கு'பராசரபட்டர்'என்றும்,வேதவியாசரது திருவவதாரமான இளையகுழந்தைக்கு 'வேதவியாசபட்டர்' என்றும் திருநாமஞ் சாற்றியருளினர். வியாசபராசரர்கள்பக்கல்நன்றியறிவுகாட்டவேண்டுமென்று ஆளவந்தார்க்கு இருந்ததொரு நினைவு இதனாற் பூர்த்திசெய்யப்பட்டது.

இக்கூரத்தாழ்வான்குமாரர்களிற் பராசரபட்டர்,பெரியபட்ட ரென்றும், பட்ட ரென்றும் வழங்கப்படுவர். பாட்டனார்பெயரைப் பேரனுக்கு இட்டுவழங்கும் முறைப்படி பிதாமகரான ஸ்ரீராமஸோமயாஜியாரின திருநாமத்தைத் தழுவி ஸ்ரீராமப்பிள்ளையென்று ஒரு திருநாமம் வேதவியாச பட்டர்க்கு வழங்கும்.

பிறகு ஸ்ரீரங்கநாதன் இளங்குழந்தைப்பருவத்திலேயே பட்டரைத் தமதுபுத்திரனாக அங்கீகரித்துத் தம்முடைய சந்நிதியிலே திருமணத்தூணினருகே தொட்டிலிடுவித்து

ஸ்ரீரங்கநாச்சியாரும் தாமுமாகச் சீராட்டி வளர்க்க, அங்ஙனம்வளர்கிற அக்குழந்தை தவழ்ந்துசென்று, பெருமாள் அமுதுசெய்வதற்குத் திருமுன்பே கொணர்ந்து சமர்ப்பிக்கப்படுகிற அடிசிலைக் கைகளால் அள்ளி யளைந்து துழாவ, பெருமாள் அதுகண்டு உகந்தருளி "அமிழ்தினு மாற்றவினிதே தம்மக்கள், சிறுகை யளாவிய கூழ்"* என்றபடி அந்த இன்னடிசிலை மிகவும் பிரியமாக அங்கீகரித்தருள்வராம். இப்படி ரங்கநாதன் தம்மை அபிமானித்துப் புத்திரஸ்வீகாரஞ் செய்தருளப்பெற்ற பாக்கிய முடைமையால், பட்டர், 'ரங்கநாதபுத்ரர்' எனபபடுவர்; "வானிட்டகீர்த்திவளர்கூரத்தாழ் வான்மகிழ வந்த,தேனிட்டதார்நம்பெருமாள்குமாரர்.......பட்டர்" † என்று இவர்சிஷ்யரான பிள்ளைப்பெருமாளையங்கார் கூறியிருத்தலுங் காண்க.

இவ்வாறு பட்டர் கருவிலேதொடங்கி எம்பெருமானுடைய திருவருளுக்குப் பாத்திரமானதனால், திருத்துழாய் அங்குரிக்கும்போதுதொடங்கியே பரிமளத்தோடு கூடியிருத்தல்போலப் பிறந்ததுமுதலாகவே அனைவருங் கண்டு அதிசயிக்கத்தக்க லோகாதீதமான அற்புதஞானத்தோடு கூடியிருந்தனர்.

மிக்க சிறுபிராயத்திலே ஒருநாள் ஆழ்வான் திருவாய்மொழி யநுசந்திக்கும்போது

"உறுமோபாவியேனுக்கிவ்வுலகமூன் றுமுடனிறையச் [ன்
சிறுமாமேனிநிமிர்த்தவென்செந்தாமரைக்கட்டிருக்குறள
நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதலன்றியவனடியார்
சிறுமாமனிசராயென்னையாண்டாரிங்கேதிரியவே" ‡

* திருக்குறள் - புதல்வரைப்பெறுதல் - ச.

† திருவரங்கக்கலம்பகம் - காப்பு - ச.

‡ திருவாய்மொழி - அo - ஆம் திருப்பதிகம் - ௩.

என்ற பாசுரத்தைக் கேட்டுப் பட்டர் அதில் 'சிறுமாமனிசர்' என்றதைக்குறித்து ஆக்ஷேபங்கொண்டு தந்தையாரைநோக்கி 'ஒன்றுக்கொன்று எதிரான சிறுமை பெருமை யென்கிற குணங்க ளிரண்டும் ஒருபொருளினிடத்து ஒருங்கே இருக்குமோ? ஆழ்வார் 'சிறு மா மனிசர்' என்று இரண்டையும் ஒருவரிடத்தே சேர அருளிச்செய்தது பொருந்துவது எங்ஙனே?' என்று வினவினர். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து "பிள்ளாய்! நன்கு வினவினாய்: உனக்கு உபநயநமாகாமையால், இப்பொழுது வேதசாஸ்திரங்களைக்கொண்டு விடை சொல்ல லாகாது; ஆயினும், பிரதியக்ஷத்திற் காட்டுகிறோம்; காண்' என்று சொல்லிச் சிலபெரியோர்களைக் காட்டி. 'திருமேனிசிறுத்து ஞானம்பெருத்திருக்கின்ற சிறியாச்சானும் அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் போல்வாரை 'சிறுமாமனிசர்' என்னத் தட்டில்லையே: முதலியாண்டான் எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோடொக்க அந்நபாநாதிகள் கொள்வதோடு, எம்பெருமான்பக்கல் ஈடுபடுவதிற் பரமபதத்துநித்யசூரிகளைப் போலுதலால், இப்படிப்பட்டவர்கள் 'சிறுமாமனிசர்' என்னத் தக்கவரன்றோ? இங்ஙனமே வடிவுசிறுத்து மகிமைபெருத்தவர்களும், மனிதரென்றுபார்க்குமிடத்துச்சிறுமைதோன்றினும் பகவத்பக்தியைநோக்குமிடத்து நித்யமுக்தர்களினும் மேன்மைபெறுகின்றவர்களுமான மகாபுருஷர்களையே ஆழ்வார் 'சிறுமாமனிசர்' என்று குறித்தருளினர்" என அருளிச்செய்ய, அது கேட்டுப் பட்டர் 'தகும் தகும்!' என்று இசைவுகொண்டனர்.

பட்டர் ஐந்தாவதுபிராயத்தில் ஒருநாள் திருவரங்கம் பெரியகோயில்திருவீதியிலே புழுதி யளைந்து விளையாடுகிறபோது, அநேகசாஸ்திரங்களில் வல்லவனான ஒருவித்வான் ஸர்வஜ்ஞபட்டனென்று பட்டப்பெயர் வைத்துக்கொண்டு

அங்ஙனமே தன்பெயரைக்குறிப்பிட்டு 'ஸர்வஜ்ஞபட்டர் வந்தார்'என்பதுமுதலாகத் தன்பரிஜநங்களைக்கொண்டு விருதுசொல்லிக் காளமூதுவித்துக்கொண்டு அதிகஆடம்பரத்துடனே சிவிகைமீது வர, அதுகண்ட பட்டர் 'உடையவர், கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார் முதலான பலபெரியோர்களிருக்கிற இவ்விடத்திலே ஸர்வஜ்ஞபட்டனென்று பெரும்பெயர்சொல்லி விருதூதிப் பல்லக்கேறிவருகிறான்! இவன் ஆரடா!!' என்றெண்ணித் தாம் அவனெதிரிற்சென்று கையிற் புழுதியை அள்ளியெடுத்து அவனைநோக்கி 'நீ ஸர்வஜ்ஞனன்றோ? இது எவ்வளவு? சொல், பார்ப்போம்' என்று வினவினார். அவன் அதனைக்குறித்து அதிதீர்க்காலோசனை செய்தும் அது இத்தனையென்று தெரியாமையால், ஒன்றும்விடைசொல்லமாட்டாதே தியங்கி வெட்கத்தால் தலைகவிழ்ந்து மௌனத்தோடு நின்றிட்டான். பட்டர் அவனைப் பார்த்து "இது ஒரு கைப்பிடிமண்' என்றுசொல்லி நீ கொண்ட பெயரைப் பொருளுள்ளதாக நிலைநிறுத்தி 'ஸர்வஜ்ஞன்' என்ற விருதை மெய்ப்பித்துக்கொண்டுபோகமாட்டாதே அஜ்ஞனாய்விட்டாயே! இனி உன்னுடைய விருதும் மற்றைச்சம்பிரமங்களும் எதற்காக?" என்றுசொல்லி ஏசி, 'காளம் முதலியவற்றைப் பறியுங்கள்' என்று தம்முடன் விளையாடுஞ்சிறுவர்களுக்குக் கூறினார். அந்த மழலைச்சொலை அப்பண்டிதன் கேட்டு ஆச்சரியப்பட்டு 'இவர் ஆருடைய குமாரரோ?' என்று அங்குள்ளாரை வினவி 'கூரத்தாழ்வான்குமாரர்' என்று அவர்கள்சொல்ல உணர்ந்து, 'பறப்பதன்குட்டி தவழுமோ?' என்றும், 'விளையும் பயிர் முளையிலே தெரியுமன்றோ?' என்றும் நினைத்துப் பட்டரைத் தன்தண்டிகையிலேற்றிவைத்துக்கொண்டு கூரத்தாழ்

வானுடைய திருமாளிகையின் வாயிலிற் சென்றவளவிலே, பிள்ளையுறங்காவில்லிதாசருடைய பாரியையான பொன்னாச்சியார் கண்டு பட்டர்செய்த சிறுச்சேவகத்தைக் கேட்டு அவரைச் சிவிகையினின்று எடுத்துக்கொண்டு திருஷ்டி-தோஷபரிகாரத்தின்பொருட்டு மந்திரரத்தினததால் ரக்ஷையிட்டு ஆழ்வான் திருமாளிகையினுள்ளே கொண்டு புக்கு 'கண்ணெச்சில் தாங்கும்படி இவரைத் திருவீதியிலேபோக விடலாமோ?' என்று அன்போடுசொல்லி அக்குமாரரைத் திருத்தாயாரான ஆண்டாளுடைய கையிலே கொடுத்து 'இவர் இவ்வுலகத்தில நெடுநாள் தங்குமவரல்லர் போலும்!' என்று எண்ணி இரங்கினள் "பலகற்றோமு யாமென்று தற்புகழவேண்டா, அலர்கதிர ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும், சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்கு, அச்சாணி யன்னதோர் சொல"* என்னும நீதிக்கு இவ்வரலாறு தக்கதொரு திருஷ்டாந்தமாம்.

மற்றொருசமயத்திலே, பாஷ்யகாரர, பாலப்பிராயததராயிருக்கிறபட்டருடைய கையிலே ஆளவந்தார் ஸ்தோத்ரததைக் கொடுத்து ஒருசுலோகத்தை யெடுதது வாசிக்கச் சொல்ல, அவ்வாறே பட்டர் ஒருசுலோகத்தை அழகிதாக வாசிதது அதன்பொருளையும விவரிததுச்சொல்ல, அநத அர்த்தவிசேஷங்களைக் கேட்ட உடையவர் மிகவும்உகநது அடியவரனைவரையும்நோக்கி 'நீங்களெல்லாரும் நமமிடததிலிருப்பதுபோலவே இவரிடததிலும் இருக்கக்கடவீர்கள்' என்று நியமித்தருளினார்.

அன்றியும், இளமைதொடங்கி இளையாழ்வாருடனே இருந்து சகலகலைகளையுங் கற்றுத் தேர்ந்து பின்பு அவரிடத்தில் அநேகவிசேஷார்த்தங்களை உபதேசம்பெற்று உணர்

* அறநெறிச்சாரம் - ௪௬.

ந்து நெடுநாள் அவருடன்பழகித் தேர்ச்சியுற்ற எம்பார், பட்டர் ஸ்தோத்திரபாடம்வாசிக்கிறவிதத்தைக் கேட்டு அதிசயித்து 'இக்குழந்தை நம்தரிசனத்திற்குக் கீர்த்திகொண்டு வரும்' என்று அருளிச்செய்தார்.

பிறகு ஆழ்வான் குமாரர்களுக்குச் சாஸ்திரோக்தமாக ஏழாவதுபிராயத்திலே உபநயநஞ்செய்வித்து வேதமோதுவித்தற்பொருட்டு அத்தியயனஞ்சொல்லுமிடத்திற்கு இவர்களைக் கொண்டுபோய்விட, அங்கு உபாத்தியாயர் கிரமப்படி ஓதுவிக்கலானார். அவ்வாசிரியர் அற்றைநாள் சந்தை சொல்ல, பட்டர் ஓதிவந்து, மறுநாள் ஓதுகைக்குச் சென்றபோது, ஆசிரியர் முந்தினநாளிற் சொன்னதையே சந்தையிடப்புக்கவளவிலே, பட்டர் அவ்விடத்தினின்று எழுந்துபோந்து வெளியே விளையாடிக்கொண்டிருக்கலானார். எல்லாரும் ஓதாநிற்க இவர்மாத்திரம் புறப்பட்டுவந்திட்டதையுணர்ந்த தந்தைதாயாரான ஆழ்வானும் ஆண்டாளும் அருகில்வந்து 'பிள்ளாய்! எல்லாரும் ஓதாநிற்க, நீமாத்திரம் என் ஓதுவதைவிட்டு விளையாடுகின்றாய்?' என்ன, அதற்குப் பட்டர் 'அவர்கள் நேற்றுஓதினதையே இன்றைக்கும் ஓதுகிறார்கள்: ஆகையால், விட்டுவந்தேன்' என்று மறுமொழிகூறியவளவிலே, ஆழ்வான் 'ஆகில் நேற்றுச்சந்தையிட்ட பாகத்தைச் சொல்லு, பார்ப்போம்' என்ன, பட்டரும் முந்தினநாளிற் சந்தை சொன்னபடியே வர்ண ஸ்வர உச்சாரணமுறைமை அணுவளவுந்தவறுமற் சொல்லிக்காட்ட, இருமுதுகுரவரும் அதுகேட்டு அதிசயமும் அச்சமுங் கொண்டு 'இனி இவரை வெளியேஓதவிடவொண்ணாது' என்று எண்ணினார்கள். இங்ஙனம் பட்டர் ஏகசந்தைக்ராஹியாவர்.

பிறகு ஆழ்வான் தாமே பட்டர்க்கு வேதசாஸ்திரங்களைக்கற்பிக்க, எம்பார் பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாக மந்திரங்

களையும் அவற்றின் அர்த்தங்களையும் உபதேசிக்க, இவ்விருவரும் திருவாய்மொழிமுதலிய திவ்வியப்பிரபந்தங்களையும் அவற்றின் வியாக்கியானங்களையும் சொல்லியருள,* பின்பு பட்டர் ஆழ்வானிடமிருந்து ஸ்ரீபாஷ்யத்தை உபதேசக்கிரமமாகப்பெற்று உபயவேதாந்தப்பிரவர்த்தகராய் விளங்கினார்.

ஒருநாள் பட்டர் நம்பெருமாளைச் சேவிக்கச் சென்றபோது, பெருமாள் வளையவிட்டதிருத்திரையினகத்தே பிராட்டியும் தாமுமாய் ஏகாந்தமாக எழுந்தருளியிருக்க, பட்டர் உரிமைபாராட்டித் திரையினுள்ளே நுழைந்து திருவடி தொழப்புக்கவளவிலே, பெருமாள் முனிந்து இவர் வெளியே போய்விடும்படி திருவுள்ளமாக, அக்குறிப்பை நோக்கியவுடன் இவர் புறப்பட்டுவிட்டார். உடனே பெருமாள் இரங்கி அர்ச்சகர்மீது ஆவேசித்து 'நம் பட்டர்க்கு அருளப்பாடு' என்று சொல்லி அவரை அழைக்க, அது கேட்டலும் அச்செல்வக்குமாரர் உள்ளேபுக்குத் தண்டனிட்டு நின்றவளவிலே, பெருமாள் அவரைநோக்கி 'நாம்

---

*பட்டர், ஸ்ரீராமப்பிள்ளை என்ற குமாரரிருவர்க்கும் கூரத்தாழ்வான் திருவாய்மொழிக்குப் பொருள்சொல்லிவரும்போது "எண்பெருக்கந்நலத், தொண்பொருளீறில, வண்புகழ்நாரணன், திண்கழல்சேரே" என்ற பாசுரம் வந்தவளவிலே, அது திருமந்த்ரார்த்தத்தை விவரிக்கிறதாதலாலும், மந்த்ரார்த்தம் ஆசார்யரிடத்திலேயே கேட்டறியவேண்டியதாதலாலும், அதனை அவர்கட்குச்சொல்லாது நிறுத்தி, 'இதனை உங்கள்ஆசார்யர்பக்கலிலே கேட்டுக்கொள்ளுங்கள்' என்றுசொல்ல, அதனை விரைவில் அறிந்துகொள்ளவேணுமென்னும் அவாவினால் உடனே அவர்கள் எழுந்து தங்கள் ஆசார்யரான எம்பார் எழுந்தருளியிருக்கிற இடத்தைக்குறித்துப் போகப்புக்கவளவில், ஆழ்வான், யாக்கைநிலையாமையைத் திருவுள்ளத்திற்கொண்டு அவர்களையழைத்து 'இன்னபோது இன்னாரிருப்பர் இன்னார்போவரென்று தெரியாது; ஆதலால், இருந்துகேளுங்கள்' என்று திருமந்த்ரத்தைச்சொல்லி, இப்பாட்டின்பொருளையும் விவரித்து, 'இப்பாசுரத்தைத் திருமந்த்ரத்தின்அர்த்தமாக நினைத்திருங்கள்' என்று பணித்தருளினார்.

புறப்படவிட்டபோது என்ன நினைத்திருந்தாய்?' என்ன, பட்டர் 'பெருமாளும் நாச்சியாருமாக நினைத்திருந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, 'முன்பு நம்மை நினைத்திருந்த படி எங்ஙனே?' என்று பெருமாள் கேட்டருள, பட்டர் 'ஆழ்வானும் ஆண்டாளுமாக நினைத்திருந்தேன்' என்று விஜ்ஞாபிக்க, பெருமாள் 'நம்ஆணை: நம்மை முன்போலவே நினைத்திரு' என்று திருவுள்ளமாயருளினார். பட்டர் அவ்வாறே பெருமாளையும் பிராட்டியையும் தந்தைதாயராகவே எப்பொழுதும் எண்ணியிருந்தனர்.

பட்டரும்ஸ்ரீராமப்பிள்ளையும் ஸாங்கோபாங்கமாக வேத வேதாங்கங்களையெல்லாம் அப்பியசித்துச் சகலவித்தியாபாரங்கதர்களாய் விவாகத்திற்குரிய பருவத்தை யடைந்தவளவிலே, ஆண்டாள் ஆழ்வானைப்பார்த்து 'இவர்கட்குக் கல்யாணஞ்செய்விக்கவேண்டாவோ?' என்றுவிண்ணப்பஞ்செய்தாள். அதுகேட்ட ஆழ்வான், யானெனதென்னுஞ்செருக்குச் சிறிதுமின்றி ஆசாரியபரதந்திரராதலால், உடையவர் திருமுன்பேசென்று 'இவர்கட்கு மணஞ்செய்விக்கவேண்டுமே' என்று விஜ்ஞாபிக்க, உடையவரும் தமது ஆசாரியராகிய பெரியநம்பியின் உறவினர்களைக் குறிப்பிட்டு அவர்களிடத்து இவர்கட்குப் பெண்கொண்டால் உசிதமாயிருக்குமென்று தெரிவிக்க, அக்கருத்தை மேற்கொண்டு ஆழ்வான் அவர்களிடத்திலேசென்று பெண்கேட்க, அவர்கள் கொடுப்பதாக முதலிற்சொல்லிப் பின்பு நூதனசம்பந்தமென்று இசையாதிருந்தார்கள். இப்படி சிலநாள் கழிந்தவளவிலே, பிள்ளைகள்விவாகத்தைக்குறித்து ஆண்டாள் ஆழ்வானை மீண்டுந்தூண்ட, அவர் 'ஈச்வரகுடும்பத்துக்கு என்னை இருந்து கரையச் சொல்லுகிறாயோ?' என்றுசொல்லி, அற்றைநாள் பெரியபெருமாளைத் திருவடிதொழுது

மீள்கிறபொழுது 'இப்புதல்வர்க்கு மணம்புரிவிக்கவேண்டு மென்று சொல்லுகிறார்களே!' என்று பகவத்ஸந்நிதியிலே விண்ணப்பஞ்செய்தனர். பெருமாள் அதனை ஏற்றுக்கொண்டு 'அதற்கு நீரோ கடவீர்? நாமே தகுதியாகச் செய்விக்கின்றோம்' என்று திருவுள்ளமாய், பெண்கொடுக்கும்படி பெரியநம்பிசம்பந்திகளுக்குச் சொப்பனங்காட்டியருளினர். அங்ஙனம் பெருமாள் தாமே கனவிலெழுந்தருளி ஆழ்வான் குமாரர்களுக்குக் கன்னிகைகளைக் கொடுக்கும்படி கட்டளையிட்டதைக்குறித்து அவர்கள் மிகவியந்து அதற்குச் சம்மதித்து மற்றைநாள் தாஙகளாகவே ஆழ்வான்பக்கல் வலியவந்து பெண்கொடுக்கிறோமென்று சொல்லித் தங்கள்குமாரிகளைப் பட்டர்க்கும் ஸ்ரீராமப்பிள்ளைக்கும் உதகதாராபூர்வமாகக் கன்னிகாதானஞ்செய்து வெகுசிறப்பாக விவாகம் நடத்தினார்கள்.

இங்ஙனமிருக்கையில் ஒருநாள் ஸ்ரீபாஷ்யகாரர் பட்டருடைய வேதாந்தோபந்யாஸவைபவத்தைக் கேட்டு உகந்து அவர்க்கு 'வேதாந்தாசார்யர்' என்ற சிறப்புப்பெயரைக் கொடுத்தருளினர். அன்றுமுதல் பட்டர்க்கு வேதாந்தாசாரியரென்று ஒருதிருநாம மாயிற்று.

இப்படி ஸ்ரீபாஷ்யகாரரும் பட்டரும் உலகமுழுதும் உய்யும்படி வடமொழிதென்மொழி மறைமுடிவுகளை வியாக்கியானித்துக்கொண்டு உபயவேதாந்தப்பிரவர்த்தனஞ் செய்கிற திறத்தைக்குறித்து நம்பெருமாள் மிகவும் திருவுள்ளமுவந்து 'ஆசார்யாதிபத்யத்தில் உடையவர்க்குப் பட்டாபிஷேகமும் பட்டர்க்கு யுவராஜபட்டாபிஷேகமுஞ் செய்யுங்கள்' என்று அடியார்கட்கெல்லாம் அர்ச்சகமுகமாக ஆஜ்ஞாபித்துத் திருப்பரியட்டம் திருமாலை முதலிய வரிசைகளை அனுப்பியருள, அந்தப்பெருமாள்நியமநத்தின்படி தொண்

4478 (7283)



டார்களனைவரும் கூடிப் பெருமகிழ்ச்சியுடன் ஸ்ரீபாஷ்யகாரரையும் பட்டரையும் ப்ரஹ்மரதத்திலேற்றித் திருவரங்க நகர்வலம்வந்து திவ்விய சிங்காதனங்களில் எழுந்தருளப் பண்ணி, பலஇடங்களிலிருந்து வருவித்த புண்ணியதீர்த்தங்களைக்கொண்டு மந்திரபூர்வமாக அபிஷேகஞ்செய்து, முன்பு திருவயோத்தியிலுள்ளார் ஸ்ரீராமபிரானுக்குப் பரதாழ்வானுக்கும் பட்டாபிஷேகஞ் செய்ததுபோல வெகுசம்பிரமமாக எம்பெருமானாருக்கு ஆசார்யாதிபத்யப்பட்டமும், பட்டர்க்கு இளவரசுப்பட்டமும் கட்டிக் களிகூர்ந்தார்கள்.

இத்தன்மைக்கான மகாவிபவத்துடன் எம்பெருமானாரும் பட்டரும் வாழ்ந்த நளுங்காலத்திலே ஆழ்வான் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீரங்கத்து நிகழ்ச்சி இங்ஙனமாக மேல்நாட்டிலே திருநாராயணபுரத்திலே கலிவருஷம் ௪௨௧௫ ஆவதும், சாலிசகம் ௧௦௩௯ ஆவதுமான விஜயவருஷத்திற் பங்குனிமாதத்து உத்தரநக்ஷத்திரத்திலே அந்தணவருணத்தில் அவதரித்த மாதவசூரியென்பவர், இளமைதொடங்கிப் பல ஆசாரியர்களையடுத்து அநேகசாஸ்திரங்களிற் பயின்று தேர்ந்து, பற்பல ராஜசபைகளிற் சென்று சமயவாதஞ் செய்து தம் கல்வித்திறத்தைக் காட்டி, அதுபற்றி வியந்து அவ்வரசர் அளித்த விசேஷ வெகுமானங்களைப் பெற்றுப் பெருஞ்செல்வமுடையராய், வேதாந்தபாண்டித்தியத்தால் **வேதாந்தி** யென்று பெயர்படைத்து, கங்கோரையென்கிற ஊரைத் தாம் வாழுமிடமாகக் கொண்டு, ஆறுசாஸ்திரங்களையும் தாம்கரை கண்டமைக்கு அறிகுறியாக அந்தந்தச்சாஸ்திரங்களின் பெயரால் ஆறு ஆசனங்களை ஒன்றன்மேலொன்றாக இடுவித்து அந்த அடுக்குப்பீடத்தின்மீது பெருமிதந் தோன்ற வீற்றிருந்து, அநேகசிஷ்யவர்க்கங்கள் புடைசூழ, தம்மிடம் வரு

கிற வித்வான்களையெல்லாம் வாதப்போரில்வென்று, மாயாவாதமதத்தி லூன்றி அதனை நிர்வகித்துக்கொண்டு அதிப்பிரசித்திபெற்றவராயினர்.

இப்பால்; ஆழ்வானுக்குச்சரமகைங்கரியங்களெல்லாஞ் செய்தானபின்பு,உடையவர் பட்டரைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்று நம்பெருமாளைச் சேவிக்கப்பண்ணுவித்து அவரைக் கையைப்பிடித்துக்கொண்டுபோய்ப் பெருமாள் திருவடிகளிலே ஒப்பிக்க, பெருமாள் தாம் அவரை முன்பு புத்திரஸ்வீகாரம் பண்ணிக்கொண்டமை தோன்ற விசேஷகடாக்ஷஞ் செய்து 'ஆழ்வானை யிழந்தோமென்று ஆகுலப்படவேண்டா;நம்மை ஆழ்வானாக நினைத்திரு'என்று அர்ச்சகமுகமாக அருளிச்செய்து, வேதாசார்யபட்டரென்று ஒருதிருநாம மிட்டருளினர்.

பிற்பாடு பாஷ்யகாரர் ஒருகால் பெருமாளுடைய வீரசரித்திரமாகிய ஸ்ரீராமாயணத்தைத் திருச்செவிசார்த்தத் திருவுள்ளமாய் இதிஹாஸஜ்ஞரான பட்டரையும் ஸ்ரீராமப்பிள்ளையையும் அழைத்துத் தம்முன்னிலையில் ஆதிகாவியத்தைப் படிக்கும்படி நியமிக்க, முன்பு திருவயோத்தியில் இராமசந்நிதியிலே இராமபுத்திரர்களான குசலவர்கள் இராமாயணத்தைக் காநஞ்செய்தாற்போல இராமஸோமயாஜியாரின் பௌத்திரர்களாகிய வியாஸபராசரபட்டரிருவரும் லக்ஷ்மணாம்சமான இராமாநுசர் திருமுன்பே ஸ்ரீவால்மீகத்தைத் தமது குயிலின்குரல்போன்ற திவ்வியசாரீரத்தைக் கொண்டு இன்னிசையமைத்து வாசிக்க, உடையவர் செவிக்கினிதாகக்கேட்டு ஆனந்தமடைந்து அவர்கட்கு நல்லசிறப்புக்கள் செய்தனுப்பினர்.

அநந்தரம் எம்பெருமானார் திருமேனிதளர்ந்தவராய்ப பரமபதமடையத் திருவுள்ளமாகி, அடியவரனைவரையும்

அழைத்துப் பட்டரைக் காட்டிக்கொடுத்து 'இவரை நம்மைப்போலவே பார்த்துக்கொள்ளுங்கள்' என்று நியமித்து, பட்டரைப் பெரியபெருமாள்சந்நிதிக்கு அழைத்துக் கொண்டுபோய்த் தமக்குமுன்னகை அவர்க்குத் தீர்த்தப்பிரஸாதங்கள் கொடுப்பித்து அவரைநோக்கி 'மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒரு பெரிய வித்வான் இருக்கின்றதாகக் கேள்விப்படுகிறோம்; நீர் அங்கேபோய் அவனைத்திருத்தி நம் தரிசனப்பிரவர்த்தகனுக்கும்' என்று அருளிச்செய்து திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

பிறகு அடியார்களெல்லாரும் பட்டரைச் சேவித்து எம்பெருமானாரையிழந்ததனாலாகிய நிலைசம் ஒருவாறு தீர்ந்தவர்களாய் இவரையே அவராகக்கொண்டு அர்த்தவிசேஷங்களை இவரிடங்கேட்டு உணர்ந்து, அந்த சம்பின்மிகுதியாலே, "ஸ்ரீபராசரபட்டரென்னுஞ் சிங்கமானது, பிரதிவாதிகளாகிய யானைகளுடைய மஸ்தகத்தை வேதாதிப்பிரமாணங்களாகிய நகங்களால் நன்றாகப் பிளந்துகொண்டு வேதாந்தகர்ஜநஞ்செய்து விளங்குகின்றது" என்பது முதலாகப் பற்பல துதிமொழிகளைக் கூறி அவரநுமதிப்படி நடந்துவந்தார்கள்.

"மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன், ஆறங்கங்கூற"* என்றபடி வடமொழிவேதங்கள் நான்குக்கும் ஆறுசாஸ்திரங்கள் அங்கமாக அமைந்திருக்கின்றது போல அவ்வேதங்களின்உட்பொருள்கொண்டு நம்மாழ்வார் அருளிச்செய்த நான்குதிவ்வியப்பிரபந்தங்களுக்கும் அங்கங்களாகத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஆறு திவ்வியப்பிரபந்தங்களுள் திருநெடுந்தாண்டகத்திலே பட்டர் மிகவுங்கருத்தூன்றி அதன்ஆழ்பொருளில் ஈடு

* உபதேசரத்தினமாலை - கூ.

பட்டு 'திருநெடுந்தாண்டகசாஸ்திரம் வல்லவர்' என்று ஒரு பெயர்பெற்றவராய், அப்பிரபந்தத்தின்அர்த்தத்தைத் தமது திருவோலக்கத்திலே பலகாலும் பரக்க உபந்யஸிப்பர். அதிலும், இருபத்தோராவதுபாசுரமாகிய

"மைவண்ண நறுங்குஞ்சிக் குழல் பின்தாழ
மகரஞ்சேர்குழை யிருபாடிலங்கியாட
எய்வண்ணவெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தா ரென்முன்னே நின்றார்
கைவண்ணந் தாமரை வாய் கமலம்போலும்
கண்ணிணையு மரவிந்த மடியு மஃதே
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டுந் தோழீ
அவரை நாம் தேவரென் றஞ்சினோமே"

என்பதற்கு அதிவிஸ்தரமாக உபந்யாஸம் அருளிச்செய்வர். அதுகேட்டு ஸ்ரீபாஷ்யகாரருடைய பஞ்சாசாரியரி லொருவரான திருவரங்கப்பெருமாளரையர், மிகவியந்து, 'முன்பு ஓர் ஆசாரியரிடத்திலும் இப்படி பொருள்கேட்கப் பெற்றதில்லை; இப்பொழுது இவரிடத்திலே இது கேட்கப்பெற்றோம்!' என்றுகொண்டாடிப் பட்டரை மிகவும்நன்குமதிக்கலானார். இந்த ஒருபாடலின் வியாக்கியானம்மாத்திரம் தனியே எண்ணூறுகிரந்தவளவுள்ளதாக வழங்குகின்றது.

ஒருசமயத்தில் அநேக வித்துவான்கள் திரண்டுவந்து பட்டருடனே பலவகையாகத் தர்க்கஞ்செய்ய, அவர் தமது ஒப்புயர்வற்ற வாதசக்தியால் அவர்களெல்லாரையும் வாயடங்கும்படிசெய்து வென்றிட்டார். பின்னும் அவர்கள் இவருடைய ஸர்வஜ்ஞதையைப் பரீக்ஷிப்போமென்று எண்ணிச் சென்று ஒருகுடத்தினுள்ளே பெரியதொருபாம்பை யடைத்து அக்குடத்தின்வாயைக் கட்டி அதனைக்கொண்டுவந்து பட்டரெதிரிலே வைத்து 'இக்குடத்தினுள்ளே யிருக்கும்

பொருள் யாது? சொல்லவல்லீராயிற் சொல்லும், பார்ப்போம்' என்று வினவ, பட்டர், 'திருவெண்கொற்றக்குடை இருக்கிறது' என்றுசொன்னார். அதற்கு அவர்கள் பரிகாசமாகச்சிரித்துக் குடத்தின் வாய்க்கட்டை அவிழ்த்துவிட்டவளவிலே, அதனுள்ளேயிருந்த மகாநாகம் புறப்பட்டது. அவர்கள் அதனைச்சுட்டிக்காட்டி 'இது திருவெண்கொற்றக்குடையோ?' என்று ஏச, பட்டர் 'அன்றோ? "சென்றால் குடையாம் இருந்தாற்சிங்காதனமாம், நின்றால்மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும், அணையாம் திருமாற்கு அரவு"* என்று ஸ்ரீபொய்கையாழ்வார் அருளிச்செய்ததை நீங்கள் அறிந்ததில்லையோ? ஸ்ரீமந்நாராயணனுக்குச் சகலவிதகைங்கரியங்களையுஞ்செய்கிற சர்ப்பஜாதியான ஆதிசேஷனாகிய திருவனந்தாழ்வான், அப்பெருமான் உலாச்செல்லும்போது அவன்மேல்மழைவெயில்படாதபடி அவனுக்குக் குடையாகின்றனனன்றோ?' என்று காரணங்காட்டித் தமது கொள்கையை ஸ்தாபிக்க, அப்புலவர்கள் இவருடைய முற்றுணர்வையும் புத்திசாதுரியத்தையுங் குறித்து ஆச்சரியப்பட்டுத் தமது தோல்விக்கு வெள்கி இவர்திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு இவர்க்குச் சிஷ்யராகிக் கிருதார்த்தரானார்கள்.

பட்டர் திருவடித்தொண்டர்களுடனே பெருங்கூட்டமாக எழுந்தருளியிருந்து உபயவேதாந்தப்பிரவசனஞ் செய்கிறபோது, ஸ்தலயாத்திரைசெய்யுமியல்பினனான ஒருபிராமணன் வந்து பட்டர் வேதாந்தோபந்யாஸஞ் செய்கிற திறமையையும் அவரது கோஷ்டியின் வைபவத்தையுங் கண்டு அதிசயித்து அவரை நமஸ்கரித்து 'மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒரு மகாவித்துவான் இருக்கிறார்; அவருடைய

* இயற்பா - முதற்றிருவந்தாதி - ருஅ.

வித்யையும் கோஷ்டியும் போலே உமக்கும் இருந்தது' என்று கொண்டாடிப்பேசினன். அதுகேட்டுப் பட்டர்,'அப்படியும் ஒருவித்துவான் உண்டோ?' என்ன, யாத்ரிகன் 'உண்டு' என்று சொல்லிப் போய், மற்றும் தலயாத்திரையாகச்செல்லுகையில்மேல்நாட்டையடைந்து அவ்வேதாந்தியின் கோஷ்டியிற் சென்று 'வேதாந்திகளே ! உம்முடைய வித்யைக்கும் கோஷ்டிக்கும் நிகராகப் பட்டரென்பவரொருவர் உபயகாவேரிமத்தியில் ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கிறார்' என்றான். அதுகேட்டுத் திடுக்கிட்டு வேதாந்தி அந்த அந்தணனைநோக்கி 'அவர் நமக்கு ஈடோ?' என்ன, வேதியன் 'அவர் உம்மிலும் எடுப்பாயிருப்பர்' என்று உரைக்க, 'அவர்க்கு எந்தச்சாஸ்திரம் வரும்?' என்று வேதாந்தி வினவியதற்கு, மறையவனும் 'தர்க்கம் வியாகரணம் மீமாம்சை வேதாந்தம் என்கிற சாஸ்திரங்களெல்லாம் வரும்' என்றான். அதுகேட்ட பின்னர் வேதாந்தி 'இவ்வுலகத்தில் நமக்கு ஒருவரும் எதிரில்லையென்று ஆறுசாஸ்திரங்களுக்கும் ஆறு ஆஸந மிட்டு அதன்மேல் உயர இருந்தோமே; பட்டர் நம்மிலும் அதிகரென்று இந்தப்பிராமணன் சொல்லுகின்றானே; என்றைக்கு என்னாகுமோ!' என்று அன்றுதொடங்கி அகத்தில் அச்சமுற் றிருந்தனர். மற்றும் ஒருமுறை அந்த மறைவலாளன் தலயாத்திரையாக ஸ்ரீரங்கத்துக்கு வந்து பட்டர்சந்நிதியில் நின்று 'உம்முடைய வைபவங்களையெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன்'என்றான். 'அதற்கு அவர்சொன்னது என்ன?' என்று பட்டர்கேட்க, பிராமணன் "பட்டர்க்கு என்னசாஸ்திரம் வரும்?' என்று வேதாந்தி என்னைக் கேட்டதற்கு,'தர்க்கம் வியாகரணம் மீமாம்சை வேதாந்தம் என்கிற சாஸ்திரங்களெல்லாம் நன்றாகத் தெரியும்' என்று சொன்னேன்" என்றான். அதுகேட்ட பட்டர் 'பிராமணா! தீர்த்தயாத்திரை தலயாத்திரை நிமித்தமாய்த்

தேசமெங்குந் திரிந்து பற்பலர்கல்விப்பெருமைகளை யறிந்து நாகரிகனாயிருக்கிற நீ, நமக்குத்தெரிந்திருக்கின்ற சாஸ்திரங்களையெல்லாம் அறிந்து வேதாந்திக்குச் சொல்லாமல், அவற்றிற் சிலவற்றையே குறித்துச் சொல்லினையே!' என்ன, பூசுரன் 'இவ்வுலகத்திற் பிரசித்தமாய் வழங்குகிற இச்சாஸ்திரங்கள் தவிர உமக்கு மற்றும் எது வரும் என்று சொல்லக்கடவேன்?' என்றான். பட்டர், 'திருநெடுந்தாண்டகம்வரும்' என்று வேதாந்திக்குச் சொல்லாமற் போயினையே!' என்று அவனுக்குக் கழிவிரக்கமுண்டாம்படி கூற, அவன் 'அதனையுஞ் சொல்லக்கடவேன்' என்று பின்னரும் யாத்திரைமுறையிற்சென்று மேல்நாடுசேர்ந்து வேதாந்தியைக்கண்டு 'பட்டர்க்குத் திருநெடுந்தாண்டகமும் வரும்' என்று தெரிவித்தான். அவர் அந்தநூற்பெயரைக் கேட்டுமறியாதவராதலால், 'அப்படியும் ஒருசாஸ்திரமுண்டோ! அதனையும்வல்ல அவர் எப்படிப்பட்ட வித்துவானோ!' என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்.

பிறகு பட்டர் 'முன்பு உடையவர் நியமித்தபடி நாம் சென்று வேதாந்தியைத்திருத்திப்பணிகொண்டு நமதுதரிசனத்தவராகும்படி செய்யக்கடவோம்' என்றுநினைத்துப் பெரியபெருமாள்சந்நிதியிற் சேவித்து 'மேல்நாட்டிலுள்ள வேதாந்தியென்ற பெரியவித்துவானைத் திருத்தி நம்தரிசனப்பிரவர்த்தகனாம்படி பண்ணவேண்டுமென்று அவ்விடத்திற்கு விடைகொள்வதாக இருக்கின்றேன்; அவன் நன்றாகத்திருந்தி இராமாநுஜசித்தாந்தத்திற்கு நிர்வாஹகனாம்படி திருவருள் புரியவேண்டும்' என்று வேண்ட, பெருமாள் 'அவன் அப்படியே ஆகக்கடவன்; விரைவிற் போய்வருக' என்று திருவுள்ளமாய்த் தீர்த்தம் திருப்பரியட்டம் திருமாலை முதலிய வரிசைகளை அருளி, தம்குமாரரென்னும் வாசி தோன்ற விலையுயர்ந்த பல ஆடையாபரணங்களையும் வாத்தியவர்க்கங்

களையும் அநேக பரிஜநங்களையும் உடன்கொண்டுபோகும் படி கொடுத்து விடையளித்தருளினர்.

ஸ்ரீரங்கராஜகுமாரரான பட்டர் குடை கொடி சாமரம் ஆலவட்டம்முதலிய பலவரிசைகளுடனே அநேகசிஷ்யவர்க்கம் புடைசூழக் காண்பவர்க்கு இராஜகுமாரரென்று தோன்றும்படி வெகுசம்பிரமத்தோடு புறப்பட்டு மேல்நாட்டில் திருக்காவேரிக்கரையிலே சிறுப்புற்றூரினருகிலே எழுந்தருளியபோது, அவ்வூரிலெழுந்தருளியிருக்கின்றவரும் உடையவர்சிஷ்யருமான அனந்தாழ்வான் பட்டரெழுந்தருளிய செய்தியைக் கேள்வியுற்றுச் சடக்கெனப் புறப்பட்டுப் பட்டரை எதிர்கொண்டு சேவித்து 'அந்தோ! சுகுமாரரான தேவரீர் காடும் மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளிற்றே!' என்று சொல்ல, பட்டர் அனந்தாழ்வான்திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு 'முன்பு எம்பெருமானார் நியமித்தருளியபடி வேதாந்திகளைத் திருத்திவைப்பதற்காக நம்பெருமாள் விடைகொடுத்து அடியேனை அனுப்பியருளினர்' என்று விண்ணப்பஞ்செய்ய, அனந்தாழ்வான் மிகவும் உகந்து 'எங்கள் குடிக்கரசே! வருக' என்று பட்டரை அணைத்துக்கொண்டார்; அதனால், பட்டர்க்கு, பிரபந்நகுலத்தலைவரென்னும்பொருளமைய 'எங்கள் குடிக்கரசு'என்று ஒரு சங்கேதநாம மாயிற்று.

அநந்தரம் அநந்தாழ்வான் எம்பெருமானார்திருவுள்ளத்திற்கு மிகப்பாங்கான யதுகிரியென்னுந்திருநாராயணபுரத்திற்குப் பட்டரை அழைத்துக்கொண்டுபோக, அங்குள்ள அடியார்களெல்லாரும் எதிர்கொண்டுவந்துசிறப்புக்கள்செய்து வரவேற்க,பட்டர் அந்நகரினுட்சென்று அங்குக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற யதுகிரிநாச்சியாரையும், திருநாராயணப்பெருமாளையும்,செல்வப்பிள்ளையென்னும்இராம

ப்பிரியரையும், அர்ச்சாவிக்கிரகரூபியாகிய எம்பெருமானை யும் தொழுது, விடைபெற்று, அனந்தாழ்வானுடனே புறப்பட்டு, வேதாந்தியிருக்கிற ஊர்க்கு அருகே 'ஆழ்வான் குமாரர் வந்தார், அணியரங்கன்புதல்வர் வந்தார், வேதாசாரியபட்டர் வந்தார், வேதியர்கள்தனித்தலைவர் வந்தார், வேதாந்தாசாரியர் வந்தார், பராசரபட்டர் வந்தார், பரவாதி மதஹஸ்தி பஞ்சாநநர் வந்தார்' என்பது முதலாகப் பல விருதுகூறிப் பரிஜநங்கள் திருச்சின்னமூதத் தூரியகோஷத்துடன்மகாசம்பிரமமாகமணிப்பல்லக்கிலெழுந்தருளலானார்.

அவ்வளவில், எதிரிலே வந்த இரண்டு பிராமணர்கள் பட்டரைநோக்கி 'நீர் ஆர்? இவ்வகைச் சம்பிரமத்துடனே எங்கேயெழுந்தருள்கிறீர்?' என வினவ, இவரும் 'நாம் ஸ்ரீரங்க பட்டர், வேதாந்திகளுடனே தர்க்கிக்கப்போகிறோம்' என்ன, அதற்கு அந்த அறுதொழிலாளர் உரைக்கலானார்:— 'நீர் இப்படி சம்பிரமத்துடனே எழுந்தருளினால், வேதாந்திகளை உமக்குக் காண இயலாதே; அவர் தமது கிருகத்தினுள்ளே இருந்துவிடுவர்; அவருடைய சிஷ்யர்களும் ப்ரசிஷ்யர்களும் தலைவாசலிலே இருந்து, வநதவித்துவான்களுடனே நாலாறு மாசம் தர்க்கித்து, அவர்களை எளிதில் உள்ளேபுகவொட்டார்கள்' என்றுசொன்ன முதற்குலத்தவரது மொழியைச் செவியேற்ற பட்டர் 'ஆனால், காலஹரணமில்லாமல் நாம் நேரிற்சென்று வேதாந்தியைக் காணும் உபாயம் என்ன?' என்று அவர்களையே கேட்டதற்கு, அந்த அந்தணாளர் 'வேதாந்திகள் தனவானாதலால், தேசாந்தரிகளாய்வருகிற பிராமணர்களையெல்லாம் தமது கிருகத்தினுள்ளே தடையின்றி வரச்செய்து அவர்கட்கு நல்லபோஜந மிடுவித்து, அங்ஙனம் புசிக்கிறவர்களை அருகிலிருந்து பார்த்துக்கொண்டிருப்பர்; அவ்வாறு சத்திரபோஜநத்துக்குச் செல்லும் பூசுரர்க்கு உரிய வேஷத்தைத் தரித்து அவர்களோடு கலந்து உள்ளே

சென்றுவிட்டால் அங்கு அவரை எளிதிற்காணலாம்' என்று சொன்னார்கள்.

அந்த விப்ரவாக்கியத்தை விஷ்ணுவாக்கியமாகக் கொண்டு, பட்டர் 'இவ்விரகு நன்றாயிருந்தது!' என்று கொண்டாடி, தமது பரிகரத்தையெல்லாம் அவ்வூர்க்கு வெளியிலேயே நிறுத்திவிட்டு, தாம் தரித்திருந்த திருவாபரணங்களையுங் களைந்துவைத்து, ஜராசந்தனைவெல்லுதற்கு வீமார்ச்சுனர்களை அழைத்துச்சென்ற வாசுதேவன் செய்ததுபோலக் காலத்துக்கேற்ற கோலங் கொள்பவராய்த் தண்டகமண்டலங்களைத்தரித்துப் பிக்ஷுகவேஷம்பூண்டு அனந்தாழ்வானும் தாமுமாய்ப் போஜனார்த்திகளானபிராமணர்களுடனே விரவித் தட்டுத்தடையின்றி வேதாந்தியின் க்ருகத்தினுள்ளே சேர்ந்து, அங்கு அவர் ஒரு மண்டபத்தில் ஆறு ஆசனமிட்டு அதன்மேலே பெருமதிப்புடன் வீற்றிருந்து பிராமணர்கள்புசிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றமை கண்டு, பட்டர் உடன்வந்த பிராமணர்களோடு போஜனசாலையிற்புகுதாமல் வேதாந்தியினருகி லெழுந்தருள, அவர் 'அந்தசாலை அங்கே இருக்கிறது; அங்குச் செல்லாது இங்கு என்வருகிறீர்?' என்ன, பட்டர் 'பிக்ஷைக்குவருகிறேன்' என்றார். 'எல்லாரும் உண்ணுகிறஇடத்திலே உமக்கும் அந்தபிக்ஷை கிடைக்கும்; அங்கேபோம்' என்று வேதாந்தி கூறியதற்கு, பட்டர் 'யான்வேண்டுவது சோற்றுப்பிச்சையன்று' என்றவளவிலே, வேதாந்தி 'இவர் சத்திரபோஜனத்துக்கு வந்தவராயினும் சிறிது வித்துவானாக இருக்கலாம்' என்றுஎண்ணி 'கா பிக்ஷா?' என்று வடசொல்லால் வினவ, பட்டரும் 'தர்க்கபிக்ஷா' என்று அம்மொழியாலேயே விடையிறுத்தார். அதுகேட்டு வேதாந்தி திடுக்கிட்டு 'முன்னே தீர்த்தவாஸிப்பிராமணன் சொன்ன பட்டரல்லது வேறு எவரும் துணிந்து நம்முன்னிலையில் வந்து கூசாது நின்று இப்படி தர்க்கபிக்ஷை கேட்

கத் தரமுடைய ரல்லர்; ஆகையால், வேஷம் எளியதாயிருந்தாலும் இவர் அந்தப்பட்டரேயாகவேணும்' என்று நிச்சயித்து 'நம்மை வாதபிக்ஷைகேட்டீர்; நீர் பட்டரோ?' என்று கேட்க, இவர் 'ஆம்' என்று சொல்லி அதிகம்பீரமாக வேதாந்தவிஷயங்களை யெடுத்து உபந்யசிக்கலானார் அவ்வளவிலே அவர் முன்னமே பட்டர்மகிமையைக் கேள்வியுற்றறிந்திருந்தும் இவரது கல்விப்பெருமையை நேரிற்காணவேண்டுமென்று எதிர்வாதஞ்செய்யவே, இப்படி இருவரும் மதயானைகள் பொருமாறுபோல ஒன்பதுநாள் வாதப்போர் நிகழ்த்த, பின்பு பத்தாவது நாளிலே பட்டர் மாயிஸித்தாந்தத்தைப் பலவாறு கண்டித்துத் தமது கொள்கையை நிலைநிறுத்தினார்.

அதுகண்டு வேதாந்தி அதியாச்சரியப்பட்டு எழுந்து நின்று 'உம்மை மநுஷ்யமாத்ரமென்று எண்ணியிருந்தேன்; அங்ஙனன்று: நம்பெருமாளோடு உம்மோடு வாசியில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள் நீர்' என்று சொல்லிப் பரபரப்போடு பட்டர்திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு 'திருவுள்ள மிரங்கி அடியேனை ஆட்கொண்டருளவேணும்' என்று மிகவும் பிரார்த்தித்தார். பட்டர் தாம் வந்த காரியம் விரைவிலே எளிதிற் கைகூடியதனால் மனமகிழ்ந்து அவரை அங்கீகரித்து அவர்க்குப் பஞ்சஸம்ஸ்காரங்களை அருளி மந்திரமந்திரார்த்தங்களை உபதேசித்து, பரப்ரஹ்மஸ்வரூபமும், ஜீவாத்மாவின் தன்மையும், ஜீவாத்மா பரமாத்மாவையடையும் உபாயமாகிற சரணாகதியும், அங்ஙனம் அடைதலின் பயனாகும் முத்தியின் இயல்பும், அச்சரணாகதிக்குப் பகையாகிற கர்மத்தின் நிலைமையும் என்று சகலவேத சாஸ்திரங்களிலும் சாரமாகச் சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தைப் பற்றிய ஞானத்தை அவர்க்கு உண்டாக்கி அவரைப் பாகவதோத்தமராகச்செய்து, அவரைநோக்கி 'நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; ஆகையால் நாம் உமக்குப் பரக்கச்

சொல்லவேண்டிய தில்லை; திருமகள்கொழுநனை திருமாலைச் சரணமடைந்து உய்ந்து இராமாநுஜதரிசநத்தை நிர்வகித்துக்கொண்டிரும்; இதுவரை வேதசாஸ்திரங்களையெல்லாம் மாயாவாதபரமாக யோஜித்துத் தான் அவனென நினைந்திருந்ததை விட்டு, இனி அவற்றையெல்லாம் விசிஷ்டாத்வைதபரமாகயோஜித்துத் தான் அவனுக்கு அடிமையென்று எண்ணிவாழக்கடவீர்' என்று அருளிச்செய்து, ஆழ்வார்களருளிச்செயலான திவ்வியப்பிரபந்தங்களை யெல்லாம் ஓதியுணரும்படியாகவும் நியமித்து, 'இனி நாம் நம்பெருமாளைச் சேவிக்கப்போகிறோம்' என்று சொல்லிப் பிரயாணமானார்.

அவ்வளவிலே, முன்பு ஊருக்குவெளியேநிறுத்திய பரிகரங்களெல்லாம் நிகழ்ந்தசெய்தியையுணர்ந்து ஊரினுள்ளே வந்துசேர்தலும், பட்டர் அணிகலங்கள் பலவற்றைஅணிந்துகொண்டு பொற்பட்டாடை யுடுத்து இரத்தினச்சிவிகையிலேறிக் குடை கொடி சாமரம் ஆலவட்டம் முதலிய வரிசைகளுடனே வாத்தியங்கள்முழங்கத் திருச்சின்னம் பணிமாற மகாசம்பிரமத்தோடு புறப்பட்டபோது, வேதாந்தி பட்டருடைய பெருமையையும் செல்வச்சிறப்பையும் நன்றாகக் கண்குளிரநோக்கி 'இந்த ஸ்ரீமான் காடும் மலையுங் கடந்து எனக்காக இவ்வளவுதூரம் எழுந்தருளி அடியேனை அங்கீகரித்தருள்வதே!' என்று அவருடைய கருணைத்திறத்தில் ஈடுபட்டுக் கண்ணுங் கண்ணீருமாய் அவர்திருவடிகளில் விழுந்து தண்டனிட்டு 'சௌந்தரிய சௌகுமாரியங்களையுடையரான தேவரீர், அகங்காரியாயிருந்தஅடியேனை ஆட்கொள்ளுதற்காக, இங்ஙனம் எளிய பிக்ஷுகவேஷத்தைத் தரித்து எழுந்தருளிய சௌலப்பியத்தை நினைக்கநினைக்க, எனக்குக் கிலேசம் பொறுக்கப்போகிறதில்லை' என்று சொல்லி நெடுந்தூரம் வழிவிட, பட்டர் அவரைத் தேற்றி நிறுத்தி 'பாகவதாராதனஞ் செய்துகொண்டிரும்' என்று சொல்லிப் பிரயா

ணப்பட்டு வரும் வழியிலே சிறுப்புற்றூரிலே அனந்தாழ்வானை நிற்கச்செய்துவிட்டுத் திருவரங்கத்துக்குளெழுந்தருளுமளவில், அவ்விடத்து அடியார்கள் எதிர்கொண்டு 'வேதாந்தியை வென்ற வீரர் வந்தார்' என்று விருது கூறக் கோயிலினுட்சென்று பெரியபெருமாளைச்சேவித்துத் தம் திருமாளிகையிலெழுந்தருளித் தரிசனநிருவாகஞ் செய்துகொண்டு இனிது வீற்றிருந்தனர்.

அப்பால் சிலகாலங்கழித்தபின்னர் வேதாந்திகள் சம்சாரத்தில் வெறுப்புற்று வைராக்கியமிகுதியால் துறவறமடையத் துணிந்து தந் தேசாரையைவிட்டுத்திருவரங்கத்தைக் குறித்துப் புறப்படுமளவில், இல்லறத்தை நீத்துச் செல்லலாகாதென்று சுற்றத்தவர் சூழ்ந்து தகைய, வேதாந்திகள் தமக்கு உள்ள பெருஞ்செல்வத்தை மூன்றுகூறிட்டு இரண்டு கூறுகளைத் தம்மனைவிய ரிருவர்க்குங் கொடுத்து அவர்கள் தொடர்பை நிவிருத்திசெய்து மற்றொரு பகுதியைத் தமது ஆசாரியர்க்கென் றெடுத்துக்கொண்டுஅவ்விடத்தைப்பற்றற விட்டுச் சந்நியாஸாச்சிரம மடைந்து 'நிகமாந்தயோகி' என்று பெயர்பூண்டு கோயிலைநோக்கியெழுந்தருளும்வழியிற் சிறுப்புற்றூரிலே அனந்தாழ்வானைக் கண்டு சேவித்துநிற்க, அவர் 'வேதாந்திகளே! சுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுதுசெய்து கிருகஸ்தாச்சிரமத்திலேயே நின்று 'பட்டர்திருவடிகளே சரணம்'என்றிருந்தால், உம்மைப் பரமபதத்தினின்று தள்ளிவிடுவாருண்டோ? இனி யாதுசெய்வது! மந்திரமந்திரார்த்தங்களிலூன்றித் திருவரங்கநாதன்திருவடிக்குத் தொண்டுபூண்டொழுகிய பட்டர்திருவுள்ளத்துக்குப்பாங்காகநடந்து உய்யக்கடவீர்' என்று வாழ்த்தி விடைகொடுத்தருளினார்.

பிறகு வேதாந்திமுனிவர் ஸ்ரீரங்கத்துக்குளெழுந்தருளிப் பட்டரைச் சேவித்துத் தாம் கொண்டுவந்த செல்வத்தைத்

தமதென்ற அபிமானமின்றித் தம் ஆசிரியரான அவர்க்கே உரியதாம்படி அவர்திருவடிகளிற் சமர்ப்பித்துத் தொழுது நிற்க, அவரைக் கண்டமாத்திரத்திலே பட்டர் மிகமகிழ்ந்து 'நம்முடைய சீயர் வந்தார்' என்று அணைத்துக்கொண்டு கொண்டாடினர்; அதனால், அவர்க்கு 'நஞ்சீயர்*' என்று திருநாமமாயிற்று.

அன்றைமுதலாக நஞ்சீயர் பட்டரைப் பிரியாமல் அடிமைசெய்துகொண்டு அவர்திருவுள்ளத்துக்கு மேன்மேல் உகப்பை விளைக்க, பட்டரும் இவர்க்குச் சம்பிரதாய ரகசியார்த்தங்களையெல்லாம் அருளிச்செய்து திருவாய்மொழிமுதலிய திவ்வியப்பிரபந்தங்களின் விசேஷார்த்தங்களையும் விவரிக்க, நஞ்சீயர் அவற்றை ஆதரத்துடன்கேட்டுத் தம் நன்னெஞ்சிற் பூரித்துக்கொண்டு அவரருகிலே யிருந்தார்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள், நஞ்சீயர் பட்டரைநோக்கி 'நம்பெரியபெருமாள் சந்திரபுஷ்கரிணிக்கரையிலே கண்வளர்ந்தருளுகிறதற்குத் திருவுள்ளக்கருத்து யாது?' என்று வினவ, அதற்குப் பட்டர், 'ஒருமுதலையின்வாய்ப்பட்ட கஜேந்திராழ்வான் ஆதிமூலமேயென்று கூப்பிட்டபின்பன்றோ எம்பெருமான் அந்தமடுவின்கரையி லெழுந்தருளி அதனைத் துயர்தீர்த்தருளியது? நான் ஐம்பொறிவாய்ப்பட்டுத் துயருற்று அங்ஙனங் கூப்பிடாத முன்னமே என்னைப்பாதுகாத்தருளுதற்காகவே,நாள்தோறும் நான் இறங்கி நீராடுகிற இப்பொய்கையின் கரையிலே பெருமான் எழுந்தருளி அறிதுயிலமர்கின்றுா னென்று நினைத்திருக்கின்றேன். நீர் இங்ஙனம்

* சீயர் என்பதற்கு - சிங்கம்போன்றவ ரென்பது பொருள். சிங்கம் முதலிய சிலமொழிகள் ஆடவரில் தலைமையையுணர்த்துஞ் சொல்லாய் வழங்குதல் மரபு. உத்தம ஆச்சிரமமான சந்யாசத்தை யடைந்தவர்களைச் சீயரென்பது, சம்பிரதாய சங்கேதநாமம்.

விறைவியது உமதுவசத்திலென்றுகாணும்; இதுவியாஜமாக எம்பெருமான் என்நினைவை வெளியிட்டருளினன்போலும்' என்று அருளிச்செய்தார். என்றது, பகவான் செய்தருளுஞ் செயல்களெல்லாம் அவன் தனக்குஒருபயனைநோக்கிச்செய் வனவல்லவாதலால், அவற்றையெல்லாம் தம்மைப்போன்ற அடியார்களின்பொருட்டாகவே செய்வனவாகக் கொள்வர் ஞானநலமுடையவ ரென்றவாறு. "அகமகிழுந்தொண்டர் வாழ அன்பொடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கன்"* என்று குலசேகராழ்வார் அருளிச்செய்த தும் காணத்தக்கது.

பரமபதத்திலுமுட்பட எம்பெருமான் பக்தபராதீநனு யிருக்கிற நிலைமையை யெடுத்துக்காட்டுமிடத்து, 'திருவனந் தாழ்வான்மடியிலும், ஸ்ரீசேனைபதியாழ்வான்பிரம்பின்கீழி லும், பெரியதிருவடிசிறகின்கீழிலு மாய்த்து, இத்தத்வம் வளர்வது' என்று பட்டர் அருளிச்செய்வர்.

ஒருசமயத்தில் நஞ்சீயர் பட்டரைநோக்கி 'சருவேச்வ ரனைச் சரணமடைந்தால் அவன் பயனளிக்கிறன்; பிராட்டி யைப் புருஷகாரமாகப் பற்றவேண்டுகிற தென்?' என்று வினவ, பட்டர் ""நம் திருவுடையடிகள்தம் நலங்கழல் வண ங்கி"† என்றவிடத்து 'பிராட்டி முன்னுகப் பெருமானை அடையவேணும்' என்று ஆழ்வார் அருளிச்செய்தது கண் டீரே? ஒருவன் எம்பெருமானை ஆசிரயிக்கப் புக்கால் அப் பொழுது அவன்குற்றம்பாராமல் அவனைத் தன்நிழலிலே வைத்துச் சமயமறிந்து எம்பெருமான்திருமுன்பேகொண்டு விட்டு இவன்குற்றத்தைப் பொறுப்பிப்பதற்குப் பிராட்டி புருஷகாரம் இன்றியமையா தாதலால், அவள் முன்னுகவே பற்றவேணும்' என்று விடையளித்தருளினர்.

---

* பெருமாள்திருமொழி - முதல்திருப்பதிகம் - ௧0.
† திருவாய்மொழி - மூன்றாந்திருப்பதிகம் - அ.

"முந்தை வினையகல முன்னருளு மாரியனால்
எந்தையெதிராசனின்னருள்சேர்ந்து—அந்தமில்சீர்ப்
பொற்பாவைதன்னருளாற்பொன்னரங்கர்தாள்பணிந்து
நற்பா லடைந்துய்ந்தேன் நான்"

என்ற விவரணமாலையும்,

"செய்யவளைக்குருவின்னருளால்திருத்தாள் வணங்கிச்
செய்யவளைக்குலஞ்சூழரங்கேசன்சிறிதமுது
செய்யவளைக்கும்புவிக்குமநாதசெவ்வாய்முகுந்தன்
செய்யவளைக்குஞ்சிலம்பணிபாதங்கள்சேர்ந்தனமே"

என்ற திருவரங்கத்தந்தாதியும் இக்கருத்துப்பற்றியனவே.

நஞ்சீயர்முதலிய அடியார்கள் பலருடனே பட்டர் பெரிய திருவோலக்கமாக வீற்றிருந்து திருவாய்மொழிவியாக்கியானம் உபந்யசிக்கிறபோது "என்னீர்மை கண்டிரங்கி யிது தகாதென்னாத, என்னிலமுகில்வண்ணற்கு"* என்ற இடம் வந்தவளவிலே, ஒரு புலவர் "தலைவன் தலைவியைப் பிரியாதிருக்கிறநிலையில் அவள் வருநதா ளாதலாலும், அவன் அவளைப் பிரிந்திருக்கின்ற பொழுது அவள் படும வருத்தத்தை அவன்காண வகையில்லை யாகையாலும், 'என்னீர்மைகண்டிரங்கி' என்றல் பொருந்துமோ? 'என்னீர்மைகேட்டிரங்கி' என்றலன்றோ பொருந்துவது?" என்று ஆக்ஷேபிக்க, அதற்குப் பட்டர் 'தொட்ட கை விட்டவளவிலே தலைவியின்உடம்பு நிறம்மாறி வெளுத்தலைக் கண்டால், தலைவன், இவளைத் தான் பிரியத்தகாதென்று நினைக்கவேண்டாவோ?

† "ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்

* நான்காந்திருப்பதிகம் - ௪.

† குறுந்தொகை - ௩௯௯. (தலைமகன் வரைவுநீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது. பரணர்.)

தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரந்த லானே"

என்பதுபோன்றுள்ள தமிழ்வழக்குக்களை அறியீரோ?' என்று விடைகூறி அந்தச்சங்கையை நீக்கியருளினர்.*

பிறகு "பரிவதிலீசனைப்பாடி
விரிவதுமேவலுறுவீர்
பிரிவகையின்றிநன்னீர்தூய்
புரிவதுவும்புகைபூவே"†

என்ற பாசுரத்துக்குப் பட்டர் வியாக்கியானம் உபந்யசிக்கும் போது, 'அகிற்புகை கருமுகைப்பூ என்றாற்போல விசேஷித்துச் சொல்லாமையால், எந்தப்புகையைக்கொண்டாயினும் எந்தப்பூவைக்கொண்டாயினும் எம்பெருமான் திருவடிகளில் அடிமை செய்தாலும் அவன் அதனை அங்கீகரித்தருள்வன்' என்று அருளிச்செய்து, மற்றும் அதன் விவரணமாக 'சருகையிட்டுப் புகைத்துத் தூபம் சமர்ப்பிக்கவும் அமையும்; கண்டங்கத்தரிபூவையிட்டு அருச்சிக்கவும் அமையும்' என்று சொன்னவளவிலே, நஞ்சீயர் ""ந கண்டகாரிகாபுஷ்பம் தேவாய விநிவேதயேத்" என்று கண்டங்கத்தரிப்பூவைப் பகவதர்ச்சனைக்கு உதவாதாகச் சாஸ்திரம் விலக்கியிருப்பதற்குக் கருத்துத்தான் என்னோ?' என்றுகேட்க, பட்டர் 'அதன்கருத்து, அவனுக்கு ஆகாதென்கிற தன்று; ஆவலோடு சென்றுபறிக்கின்ற அடியவர்கையிலே முள்தைக்கு மென்பதுபற்றியே தவிர்த்ததாகாணும்;

---

*"குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே"
என்ற கலித்தொகையும் (நெய்தற்கலி - ௧௮) காணத்தக்கது.

† திருவாய்மொழி - ௯ - ஆம் திருப்பதிகம் - ௧.

"கள்ளார்துழாயுங்கணவலருங்கூவிளையும்
முள்ளார்முளரியும்ஆம்பலும்முன்கண்டக்கால் [று
புள்ளாயோரேனமாய்ப்புக்கிடந்தான்பொன்னடிக்கென்
உள்ளாதாருள்ளத்தையுள்ளமாக்கொள்ளோமே"*

என்ற பெரியதிருமொழிப்பாசுரத்தில் திருத்துழாயோடு காகணம்பூவோடு வில்வதளத்தோடு தாமரைமலரோடு ஆம்பற்பூவோடு ஒருவாசியற அனைத்தையும் திருமங்கையாழ்வார் அருளிச்செய்கையாலே, அர்ச்சிக்கின்ற உபகரணம் பிரதானமன்று; அர்ச்சிக்கின்றவனது அன்பே முக்கியம்; அன்பில்லாதவன் இடில் திருத்துழாயும் ஆகாது; அன்புடனே இடின் காகணம்பூவும் ஆகும் என்பது விளங்குகின்றதன்றே? இங்ஙனமன்றியே, அப்பிராகிருதவஸ்துவான பரமாத்மாவின் அருச்சனைக்கு ஏற்றதொரு பிராகிருதவஸ்துவும் உண்டோ?' என்று சொல்லியருளினார்.

பின்னர், "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்"† என்ற பாசுரத்துக்குப் பட்டர் வியாக்கியானம் உபந்யசிக்கிறபோது, 'உலகத்திற் காண்கின்ற ஆண் பெண் அலி என்னும் இம்மூன்றின் படியு மன்றாகில், அவ்வஸ்து சூந்யமோ?' என்று ஒருபுலவர் ஆக்ஷேபிக்க, அதற்குப் பட்டர் 'இலக்கணவழக்கை அறிந்ததில்லையோ? ஆணல்லது பெண்ணல்லது அல்லா அலியு மல்லது' என்று சொல்லவில்லையே; 'ஆணல்லன் பெண்ணல்லன் அல்லாஅலியுமல்லன்' என்று அன்மையைத் துணிந்தபொருளின்மேலேற்றி ஆழ்வார்அருளிச்செய்தவகையினாலேயே, உலகத்திற் காணப்படுகிற ஆணின்தன்மையனு மல்லன், பெண்ணின்தன்மையனு மல்லன், அலியின்தன்மையனு மல்லன்; ஸ்த்ரீபுந்நபும்ஸகாதி

* ௧0எ - ஆம் திருப்பதிகம் - ௬.

† திருவாய்மொழி - ௧௫ - ஆம் திருப்பதிகம் - ௧0.

ஸர்வவஸ்து விலக்ஷணன் புருஷோத்தமன் என்ற கருத்து விளங்கவில்லையோ?' என்று விடையிறுத்தருளினார். இது,

"தன்மைசுட்டலுமுரித்தெனமொழிப
அன்மைக்கிளவிவேறிடத்தான"*

"மெய்தெரிபொருண்மேலன்மையும் விளம்பும்"†

என்றாற்போன்ற தமிழிலக்கணமுறையைத் திருவுள்ளம் பற்றி யுரைத்தவாறும.

"பிறந்தவாறும் வளர்ந்தவாறும் பெரியபாரதங் கைசெய்தைவர்க்குத், திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களும், நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண்கின்றவிச், சிறந்தவான்சுடரே யுன்னையென்றுகொல் சேர்வதுவே"‡

என்ற பாசுரத்துக்கு வியாக்கியானம் உபந்யசிக்கும்போது 'ஆழ்வார்கள் கிருஷ்ணாவதாரத்திலே மிகவும் ஈடுபட்டிருப்பர்கள்; இதற்கு ஏது என்?' என்று நஞ்சீயர் கேட்க, அதற்குப் பட்டர் 'ஒருவன் ஒருபொருளை யிழந்து பலநாள் ஆய்விட்டால்; அதனை யிழந்தோமென்ற துன்பம் அவனை அவ்வளவாக வருத்துவதில்லை; அவன்தானே சிலநாளைக்கு முன் ஒருபொருளையிழந்திருப்பானாயின் அவனால் அத்துன்பம் பொறுக்கமுடிவதில்லை. அவ்வாறே மற்றையவதாரங்கள் ஆழ்வார்களவதரிப்பதற்கு நெடுநாளைக்கு முன்னமே நிகழ்ந்து முடிந்தனவாக, கிருஷ்ணாவதாரமோ, இவர்கள் தோன்றுவதற்குச் சிறிதுமுன்னாக நிகழ்ந்ததாதலால், கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற்போயிற்றே யென்று கண்ணபிரானைத் தாம் காணாமற்போனதைக் குறித்து இரங்கி ஈடுபடுவார்கள். அன்றியும், மற்றை யவதாரங்கள் போல

---

* தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கிளவியாக்கம் - உரு.
† நன்னூல் - பொதுவியல் - உரு.
‡ திருவாய்மொழி - ருO - ஆம் திருப்பதிகம் - க.

வன்றி இராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் பூர்ணாவதார மாக, அவற்றுள் இராமாவதாரத்திலே, தந்தையோ இந்திராதிதேவர்களை வென்றிட்ட சம்பராசுரனைச் சங்காரஞ்செய்த ஏகவீரனான தசரதசக்கரவர்த்தி; இராமன் முதலிய மைந்தர்கள் நால்வருமோ ஆண்புலிகள்; தங்கள் குணங்களால் நாட்டாரனைவரையும் தம்வசப்படுத்தியவர்கள்; பிறந்தகுலமோ கொடும்பகைஞரை வேரறுக்கின்ற இக்ஷ்வாகு குலம்; மந்திரிகள் வசிஷ்டர்முதலிய பெரியோர்;ஊர் அயோத்தியை; காலம் நற்காலமாகிய திரேதாயுகம்: ஆகையால், அவ்வவதாரத்தைக் குறித்து அடியார்கள் அஞ்சிப் பரிய வேண்டுவதில்லை. கிருஷ்ணாவதாரத்திலே, பெற்றதந்தையோ சாதுவான ஒருகிழவன்; வளர்த்தவனும் வயோதிகனான ஓர் இடையன்; பிறந்தஇடம் பழம்பகையான கொடிய கம்ஸனுடைய சிறைக்கூடம்;வளருமிடமான கோகுலபிருந்தாவனங்களில் எழும் பூண்டுகளு முட்பட அசுரமயமாயிருக்கும்; கண்ணனோ துடுக்கன்; சிறிதும் பின்வாங்காது பாம்பின் வாயிலும் விழுந் துணிவுடையான்; வளர்ந்தகுலமோ இடைக்குலம்;காலமோ கலியுகத்தோடு தொடர்ச்சியுடைய துவாபர யுகாந்தம்: இங்ஙனமாகுமிடத்து, பரிவுடையார் கிருஷ்ணாவதாரத்தைக்குறித்து அஞ்சி யீடுபடாதிருக்கவிரகுண்டோ?' என்று திருவாய்மலர்ந்தருளினர்.

திருநெடுந்தாண்டகத்திலே, "கல்லெடுத்துக் கன்மாரி காத்தா யென்றும்"* என்ற இடத்திற்குப் பலவகையாக விசேஷார்த்தம் விவரிக்கிறபோது 'கன்மாரியாகையாலே கல்லையெடுத்துரக்ஷித்தான், நீர்மாரியாகில் கடலையெடுத்துரக்ஷிக்குங்காணும்' என்று பட்டர் அருளிச்செய்தார்.

ஸ்ரீவால்மீகிராமாயணத்து யுத்தகாண்டத்திலே இராமபிரான் விபீஷணாழ்வானுக்கு அபயமளித்த வரலாற்றைக்

---

* கஙு - ஆஞ் செய்யுள்.

கூறுகிற ஸர்க்கங்களின் சுலோகங்களுக்குப் பட்டர் அர்த்தம் உபந்யஸித்தபோது, கேட்டிருந்தவர்களில் ஒருவர் 'இந்த அபயப்ரதாநப்ரகரணத்தில் தேர்ந்த பொருளென்ன ?' என்று வினவ, "குற்றமுடையராயிருப்பார் அங்கீகரிக்கத் தக்கவரல்லர்' என்று சுக்கிரீவரபிப்பிராயத்தாலே பூர்வ பக்ஷஞ்செய்து, 'குணதோஷங்கள் பாராட்டத்தக்கனவல்ல: பிராணிகள் நின்றநிலையிலே சாணம்புகுதற்குஉரியர்' என்று பெருமாள் திருவுள்ளத்தாலே சித்தாந்தஞ் செய்தவாறும்" என்று பட்டர் உரைத்தருளினர்.

பட்டர், ஸ்ரீரங்கநாதனிடத்தில் மிக்கபக்தியுள்ளவராதலால், அப்பெரியபெருமாளைச் சிலகாலந் திருவாராதனஞ் செய்தமைபற்றி இராமபிரானிடத்திற் பேரன்புடையராயிருப்பர். அங்ஙனம் அவர் திருமாலின் தசாவதாரங்களுள் இராமாவதாரத்தினிடத்துப் பக்ஷபாதத்தாற் சொல்லும வார்த்தையைக் கேட்பதற்காகச் சிறியாத்தானென்பவர் ஒருநாள் பட்டரைநோக்கி, 'சக்கரவர்த்தித் திருமகனுக்கு எல்லாவேற்றங்களும் உண்டாயிருந்தாலும், பாண்டவர்க்காகத் தூதுபோன கிருஷ்ணனுக்கு உள்ள நீர்மை இல்லையே!' என்றார். அதற்குப் பட்டர், 'அங்ஙனமோ! முடியைத்தவிர்ந்து சடையைப் புனைந்து நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்ற பெருமாள் தூதுபோகாரென்பதில்லை; அபிஷிக்த க்ஷத்திரியரான இக்ஷ்வாகுகுலத்தவரைத் தூதுபோவென்னத்தக்க நாடுடைமன்னரெவரும் இலாத குறையேகாண். இதனால், இராமபிரான் அடியவர்க்கெளியவனல்லனென்றாகாது' என்று அருளிச்செய்தார்.

ஒருநாள், நம்பெருமாள் திருமஞ்சனங்கண்டருள்கிறபோது, அடியார்களெல்லாரும் சேவித்துநிற்கையில், அனைவரும் பட்டரைநோக்கி 'பெருமாள் நீராடி ஈரவாடையும் திருத்துழாய்மாலையுமாக எழுந்தருளியிருக்கிற இக்காட்சியைக்

குறித்து ஓர்உத்ப்ரேக்ஷை சொல்லவேண்டும்'என்று பிரார்த்திக்க, உடனே பட்டர் சொற்செறிவு பொருட்பொலிவு ஆழ்ந்தகருத்து முதலிய சிறப்புக்களெல்லாம் அமைய ஆசு கவியாக ஒரு சுலோகம் விண்ணப்பஞ்செய்தனர்; அதன் பொருள் வருமாறு:—பரமாத்மா ஜீவாத்மாவை நோக்கி 'நீ எனக்கு உரியை' என்பன்; அதனைமறுத்து ஜீவாத்மா 'நான் எனக்கு உரியேன் [அதாவது - உனக்குஅதீநனல்லேன், ஸ்வதந்த்ரன்]' என்பன்; பரமாத்மா 'உனக்கு அது எப்படி?' என்ன, ஜீவாத்மா 'உனக்கும் அது எப்படி?' என்பன்; 'வேதம்முதலிய பிரமாணங்களினால் அங்ஙனம் ஆகின்றது' என்று பரமாத்மா சொல்ல, 'தொன்றுதொட்டுவருகிற அநுபவத்தினாலே இங்ஙனமாகிறது' என்று ஜீவாத்மா எதிர் சொல்வன்; 'ஆனால், அந்த அநுபவம் இடையிடையே ஆக்ஷேபிக்கப்பட்டுள்ளதே!' என்று பரமாத்மா வியவகாரம் பேச, 'எவ்விடத்தில் யாருடைய ஆக்ஷேபம்?' என்று ஜீவாத்மா வினவும்; அதற்குப பரமாத்மா 'கீதை முதலிய நூல்களில் என்தொடர்பு பிரசித்தமன்றோ?' என்ன, மற்றும் ஜீவாத்மா 'இதற்குச் சாக்ஷி யார்?' என்று வழக்குஉரைப்பன்; 'நல்லறிவுடையவன் சாக்ஷி' என்று பரமாத்மா சொல்ல, ஜீவாத்மா 'அந்தோ! அவன் நின்பக்கல் பக்ஷபாதமுடையவன்' என்று குறைகூறுவான்: இங்ஙனம் ஜீவாத்மா நிகழ்த்தும் வியவகாரத்திலே பரமாத்மாவான நீ பிரமாணஞ் செய்யச்சித்தனாயிருப்பவன்போல விளங்குகின்றாய் என்று நம்பெருமாளை நோக்கிக் கூறியவாறும்.

வீரசிகாமணிப்பல்லவராயனென்பான் பட்டரைநோக்கி 'ஸ்வாமி! இராசகாரியஞ் செய்கையால், அடியேனுக்குப் பகவத்விஷய வைபவம் கேட்க அவகாச மில்லை; எளியேன் ஈடேறுமாறு தஞ்சமாயிருப்பதோ ரர்த்தத்தை எனக்கு அருளிச்செய்யவேணும்'என்று பிரார்த்திக்க,அதற்குப் பட்

டர் 'கடற்கரைவெளியை நினைத்திரும்' என்று சொல்லியருளினர். அங்ஙனம் மறைபொருளாகச் சொன்னதன் கருத்து விளங்காமையால், பல்லவராயன் கையைப்பிசைந்துநிற்க, அதுகண்டு இரங்கிப் பட்டர் அதன்பொருளை அடியில்வருமாறு விளக்கலாயினர்:—'கடற்கரையிலே ஓர் அமிருதக் கடல் போலே, ஸ்ரீராமபிரான் பெரிய வாநரசேனையுடனே தங்கியிருக்க, அக்கரையிலே இலங்கையில் பிணந்தின்னிப் பயலான இராவணன் இருக்க, எழுபதுவெள்ளம் வாநரசேனையும் இராத்திரிகாலத்தில் ஜாக்கிரதைகொண்டு ஸ்ரீராமனுக்குப் பாதுகாவல் செய்துவருகையில், அவ்வாநரர்கள் பிரகிருதிவசப்பட்டவர்களாகையாலே கண்ணுறங்கிக் காலோய்ந்து கைசோர்ந்தவளவிலே, தாமும் தம் திருத்தம்பியாருமாக, முதுகிலே அம்பறுத்தூணியைக்கட்டி, கையிலெடுத்துப்பிடித்துவளைத்து நாணேற்றி அந்நாணியைக் கைவிரலால் தெறித்து ஒலியெழுப்பி அம்புதொடுத்தற்குச் சித்தஞ்செய்யபபெற்ற வில்லுடனே, பறவைகள் முட்டையிட்டு அவற்றைத் தம் சிறகின்கீழே வைத்துக்கொண்டு அதுவே கருத்தாய் அடைகாக்குமாறுபோலே எழுபது வெள்ளம் வாநரசேனையையும் குறிக்கொண்டு பாதுகாப்பவர்களாய், நடையாடும் மதிள்கள் போலே அவ்விராமுழுவதும் அச்சேனையைச் சுற்றிவநதுகொண்டிருந்த சக்கரவர்த்தித்திருமகனுருடைய கையும் வில்லுமே தஞ்சமென்று கொண்டு இனிதுவாழ்வீராக'என்று திருவாய்மலர்ந்தருளினர்.' உறங்குகின்றபோது உயிர்களை ரக்ஷிப்பவனான எம்பெருமான்தானே உணர்ந்திருக்கின்றபோதும் அவற்றைரக்ஷிப்பன்'என்றுஎண்ணியிருத்தலே தகுதியா மென்பது,இதன் தாத்பரியம். இங்ஙனம் உபதேசம் பெற்ற பல்லவராயன் அவ்வாறே ஜகத்ரக்ஷண ஜாகரூகரான பெருமாள் இளையபெருமாளும் தாமுமாய் வாநரமகாசேனையைச் சிறிதும் ஊறுபடாதபடி பாலிப்

MAHAMAHOPADHYAYA

பதற்பாதக் கையில் வில்லேந்தி விறிப்புற்றுநின்ற திருவருள் நிலையையே கருதி அதில் எப்பொழுதும் ஈடுபட்டு 'அப்பெருமானே நம்மை ரக்ஷிக்கக் கடவன்' என்று தெளிந்துநின்று அதனால் எம்பெருமான் கருணைக்கு இலக்காகிப் பேறுபெற்று உய்ந்தனன்.

ஒருநாள், பட்டர் தொண்டர்குழாத்துடனே திருவரங்கப்பெருங்கோயிலினுள்ளே சென்று ஸ்ரீரங்கநாதனைக் கண்ணாரக் கண்டுகளித்து வணங்குகின்றபொழுது, அருகில்நின்ற அப்பிள்ளைபிள்ளையென்னும் அடியவரை நோக்கி "நம் பெரியபெருமாள் ஒருதிருக்கையை மடித்துத் திருமுடியோடு சேரவைத்து மற்றொருதிருக்கையைத் திருவடிகளைநோக்குமாறு நீட்டிவைத்துக் கண்வளர்ந்தருள்கிற ஆகாரத்தின் இங்கிதத்தை யறிந்துகொண்டிருந்தீரா? எம்பெருமானைச் சரணமடையாப் புத்தவர்கள் அநாதிகாலமாகத் தம்முயிரைத் தொடர்ந்து வருகின்ற தொல்லைப்பிறவிணையின் மிகுதியைக் குறித்து அஞ்சுவாராயின் அவர்களைப் பார்த்து 'நீங்கள் அங்ஙனம் அஞ்சவேண்டா; எல்லாவுயிர்களையும் பாதுகாப்பதற்கென்று தரித்த முடியன்றோ இது?' என்று, மடித்த வலத் திருக்கையின் விரல்கள் தேவாதிதேவனென்பதற்கு அறிகுறியான திருமுடியைத் தொட்டுக்காட்டுகின்றன. திருவடிகட்கு நேராக நீட்டிவைக்கப்பெற்றதான இடத்திருக்கையோ, 'எல்லாவுயிர்கட்கும் இத்திருவடிகள் புகலிடம்' என்றுகுறித்துக் காட்டுகின்றது காணும்" என்று அருளிச்செய்தனர். பட்டர் சிஷ்யரான அழகியமணவாளதாசரென்னுந் திவ்யகவிபிள்ளைப்பெருமாளையங்கார் இத்திருவார்த்தையை அடியொற்றி

"கதிராருநீண்முடிசேர்ந்தகைப்போது எக்கடவுளர்க்கும்
அதிராசனுமைகாண்மினென்றேசொல்லும் ஆயபொன்மா
மதிலாரரங்கர்பொற்றாளார்திருக்கரம் மற்றிதுவே
சதுரானனன்முதலெல்லாவுயிர்க்குஞ்சரணென்னுமே"

என்று திருவரங்கத்துமாலையிற்* கூறியிருப்பது கருதத்தக்கது.

ஒருசமயத்தில் நஞ்சீயர் பட்டரைநோக்கி 'பகவானுடைய திருநாமத்தைச் சொல்லும்போது ஆசாரநியமமுடையவனாய்க்கொண்டு சொல்லவேண்டுமென்ற நியதியுண்டோ?' என்றுகேட்க, அதற்குப் பட்டர், 'கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறொருதீர்த்தத்திலே நீராடி அதன்பின் போகவேண்டுமென்பதுண்டோ? இல்லையே. அங்ஙனமே திருநாமஞ்சொல்லுகைக்கு ஆசாரம் வேண்டாது; அதனையுடையாரே அதிகாரிகள்' என்று அருளிச்செய்தனர்.

ஒருநாள், பட்டர் பெரியபெருமாளைச் சேவித்து நின்றபோது, அத்திருவரங்கநாதன் அவரைக் கடாக்ஷித்து 'நாம் உடையவர் ஸ்ரீபாஷ்யமும் கீதாபாஷ்யமும் செய்தருளினர். நீர் ஸஹஸ்ரநாமத்துக்குப் பாஷ்யம் செய்யும்' என்று நியமிக்க, பட்டர் அந்தப் பகவதாஜ்ஞையைச் சிரமேற்கொண்டு வெகுசிறப்பாக ஸஹஸ்ரநாமபாஷ்யம் செய்தருளினர்.

மற்றும், பட்டர், அஷ்டாக்ஷரமென்னும் பெரியதிருமந்திரத்துக்கு விவரணமாக அஷ்டச்லோகியென்ற ஒரு நூலை அருளிச்செய்தனர். பின்புள்ள ஆசார்யர்கள் அநேகர் செய்த மந்திரவியாக்கியானங்களனைத்திற்கும் இது முன்னூலாயிருக்கும்.

தத்வரத்நாகரம், பிரமாணவிவரணம், ஸ்ரீகுணரத்நகோசம், ஸ்ரீரங்கராஜஸ்தவம், க்ரியாதீபம், தத்வத்ரயச்லோகம் முதலாக இவர்செய்தருளிய வடநூல்கள் பலவுண்டு.

எம்பெருமானுடைய திருக்கல்யாணகுணங்களைக் குறித்து நம்மாழ்வார் திருவாய்மொழியென்னும் திவ்வியப்பிரபந்

* ௯௯ - ஆஞ் செய்யுள்.

தத்தை அருளிச்செய்ததிலும், எம்பெருமானார் அதன்பொருளை அடியார்கட்கெல்லாம் வெளியிட்டும் வெளியிடுவித்தும் அதனைப்பாதுகாத்த செயலிலும் ஈடுபட்டு,பட்டர்,'நம்பெருமாள்விஷயமான திருவாய்மொழியாகிய அருமைக் குழந்தையைப் பெற்ற நற்றாய், நம்மாழ்வார்; அதனை அன்போடு குறிக்கொண்டுகாத்துப் போற்றிவளர்த்த செவிலித்தாய், எம்பெருமானார்' என்னுங் கருத்து அமைய

"வான்திகழுஞ் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல்
ஆன்ற தமிழ்மறைக ளாயிரமும் ஈன்ற
முதற்றாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமாநுசன்"* என்ற பாசுரத்தையும்,

அத்திருவாய்மொழிப் பிரபந்தத்திலே பரப்ரஹ்மஸ்வரூபம முதலாக அறியவேண்டிய அர்த்தங்களெல்லாம் விளங்க உரைக்கப்பட்டுள்ள திறத்தில ஈடுபட்டு அததிருவாய்மொழியின் ஏற்றம் விளங்க

"மிக்க இறைநிலையும மெய்யாம் உயிர்நிலையும்
தக்க நெறியுந் தடையாகித் —தொக்கியலும்
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதுங் குருகையர்கோன்
யாழினிசை வேதத் தியல்"*

என்ற பாசுரத்தையும் அருளிச்செய்தனர்.

திருவாய்மொழி முதலிய திவ்வியப்பிரபந்தங்களுக்கும், ஸ்ரீராமாயண பாரத பாகவத விஷ்ணுபுராணாதி வடநூல்களிற் சிற்சில சுலோகங்களுக்கும் பட்டர் வியாக்கியானம் உபந்யசிக்கின்றபொழுது உணர்த்திய விசேஷார்த்தங்கள் அநேகம் உண்டு; அவையெல்லாம்,'பட்டர்நிர்வாஹம்'என்று ஆன்றோரால் மிகவுங் கொண்டாடப்படுகின்றன.

* திருவாய்மொழியின் தனியன்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

# அரும்பதவுரை. (7243)

பட்டர் வைபவம்-பட்டருடைய வைபவம் என விரியும்;ஆறும் வேற்றுமைத்தொகை. பண்டிதரைக் குறிக்கின்ற 'பட்டர்' என்ற பொதுப்பெயர், சிறப்பாக இவர்க்கு இட்டுவழங்கப்பெற்றது; வடசொல். வைபவம் - மகிமை; வடசொல்.

பக்கம்—க.

தெள் நீர் - தெளிவான நீர் பாயப்பெற்ற, வயல் - கழனிகளையுடைய, நல் தொண்டை நாடு - சிறந்த தொண்டைநாடானது, சான்றோர் உடைத்து - நற்குணங்களால் நிறைந்த பெரியோர்களையுடையது என்று பொருள். 'தெள்நீர்' என்ற அடைமொழி நீர்வளச்சிறப்பையும், 'வயல்,' 'நல்' என்ற அடைமொழிகள் நிலவளச சிறப்பு முதலியவற்றையும் உணர்த்த, 'சான்றோருடைத்து' என்றது பெரியோர்களையுடைமையை யுணர்த்தி, "வேழமுடைத்து" என்றதொடக்கதது வெண்பாவிற் கூறிய பிறநாடுகளினும் இந்நாடு சிறந்ததென விளக்கும். இந்நாட்டினது இத்தகையசிறப்பு,தொண்டைமண்டலசதகம் முதலியவற்றாலும் நன்குவிளங்கும். இந்நாட்டின்எல்லையை. "மேற்குப்பவளமலை வேங்கடம்நேர்வடக்காம், ஆர்க்குமுவரியணிகிழக்குப்—பார்க்குளுயர், தெற்குப்பிணாகி திகழிருபதின்காதம், நற்றொண்டைநாடெனவே நாட்டு" என்றதனு லறிக. தொண்டைநாடு-தொண்டைமானாடு என்றதன் மரூஉ. 'தொண்டைமான்' என்றது, தன்குலத்துமுன்னோரில் ஒருவனது பெயராய் அந்நாட்டரசர்க்கெல்லாம் வழங்கும். இப்பெயரின்காரணம் வருமாறு:—தொண்டைநாட்டிராசதானியான காஞ்சீபுரத்தி லிருந்த தொண்டைமானிளந்திரையனைக்குறித்துப் பாடியதாகிய பெரும்பாணாற்றுப்படையில் "அந்நீர்த், திரைதருமரபின்.........பல்வேல் திரையன்" என்ற இடத்து 'நாகபட்டினத்துச்சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியை மணந்தகாலதது அவள் 'யான்பெற்றபுதல்வனை என்செய்வேன்?' என்றபொழுது, 'தொண்டையை [தொண்டை - ஓர்கொடி] அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட, அவன் வந்து கரையேறின்,அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சிகொடுப்பல்' என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம்வரவிட,திரைதருதலின். திரையனென்று பெயர்பெற்ற கதை கூறினர்' என்றும், "தொண்டையோர் மருக" என்றஇடத்து 'தொண்டையைச்சூடினோருடைய குடியிலுள்ளவனே!' என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றால் விளங்கும். இனி, 'தொண்டைநாடு' என்பதற்கு - நிலமகட்குத் தொண்டை[கழுத்துப்]போல முக்கியஸ்தானமாக வுள்ளது

என்றும், தொண்டர்கள்வசிக்கின்றநாடு என்றும் காரணப்பொருள் கூறுவாருமுளர். சான்றோர்—சால் - உரிச்சொல், பகுதி.

ஆன்றவர் - மிக்கவர், நிரம்பியவர்; சால்என்றதன் மரூஉவான ஆல் - பகுதி: அகன்றவரென்பது ஆன்றவரென மருவியதுமாம்.

உறைவுஇடம் - வசிக்கின்றஇடம்.

ராஜதாநீ - அரசனிருந்துஆட்சிசெய்யுமிடம்.

நல்நகரி - முத்திதரும்நகரங்களென்றபடி.

கார்மேனி அருளாளர் - காளமேகம்போன்ற திருமேனிநிறத்தையுடைய பேரருளாளப்பெருமாளென்னும் வரதராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற, கச்சிக்கு - காஞ்சீபுரிக்கு,ஒவ்வா - ஒப்பாகமாட்டா என்க. அருளாளர் - அருளைஆள்பவர். கச்சி - வடசொற்சிதைவு; இது, வைஷ்ணவசம்பிரதாயத்தில் 'பெருமாள்கோயில்' என்று வழங்கப்படும்.

"முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சிதன்னில், அத்திகிரியருளாளர்" என்றது, தேசிகப்பிரபந்தம் - அடைக்கலப்பத்து - க. முத்திதரும் நகரம் ஏழு - அயோத்தியை, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன. இவற்றினுட் காஞ்சீபுரத்திற்குப் பிராதானியமாவது-ஸர்வேச்வரன்அயோத்தியாநிநகரங்களில் அவதரித்துத் திவ்வியலீலாசேஷ்டிதங்களை நடத்தித் திரும்பவும் தன்னுடைச்சோதிக்குஎழுந்தருளியவாறுபோலவன்றிப் பிரமனது பிரார்த்தனையின்படி அங்குஅர்ச்சாவதாரமாய்நித்தியவாசம்பண்ணுகை.'க'எனப்படுகிற பிரமதேவனால் எம்பெருமான் பூஜிக்கப்பெற்ற நகரமாதல்பற்றி, காஞ்சீபுரமென்று பெயராயிற்று; இதற்குப் பிறவாறும்உரைப்பர்.

அக்ரஹாரம் - அந்தணர்உறையுமிடம்.

அந்தணவருணம் - பிராமணசாதி.

எம்பெருமானுடைய திருக்கலியாணகுணகணங்களாகிய அமிருதவெள்ளத்தில் முழுகி மிகவும்ஈடுபட்டு நன்றாகஆழ்பவராதலால், 'ஆழ்வான்' என்று பெயராயிற்று. நாமம் - பெயர்.

கூரத்தாழ்வான் - ஹாரீதகுலதிலகரான ஸ்ரீராமஸோமயாஜியாரின் குமாரர். இவர் - இராமாம்சம், சங்காம்சம், ஸர்வநேத்ராம்சம். இவரது வேறுதிருநாமங்கள்-ஸ்ரீவத்ஸசின்னர், ஸ்ரீவத்ஸாங்கர், திருமறுமார்பர், நடையாடுபதஞ்சலி, ஸஞ்சாரிமஹாபாஷ்யர், யதீந்த்ரசரணர் என்பன.

ராமாநுஜர் - ராம அநுஜர்; இராமபிரானது திருத்தம்பியார்: இராமனை அநுசரித்தவர்; லக்ஷ்மணர். 'இளையாழ்வார்' என்ற திருப்பெயரும் இப்பொருளதே. ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைதஸ்தாபநாசாரியரான ஸ்ரீபாஷ்யகாரர்க்கு, ஸர்வலக்ஷணஸம்பந்நராயிருத்தல்பற்றி, லக்ஷ்மணரதுதிருநாமமான 'இளையாழ்வார்' என்ற

பெயர், நல்லம்மானாகிய பெரியதிருமலைநம்பியால் இளமையில் இடப்பட்டது. பின்பு பஞ்சஸம்ஸ்காரஞ்செய்யும்போது பெரிய நம்பி 'ராமாநுஜன்' என்ற பெயரை இட்டனர். பிறகு இவர் ஸந்யாஸம்பெற்றபொழுது திருக்கச்சியத்திகிரிப்பேரருளாளப்பெருமாள் 'ராமாநுஜமுநி' என்று இவர்க்குத் திருநாமம் சாற்றியருளினர். லக்ஷ்மணரும் பாஷ்யகாரரும் ஆதிசேஷாவதாரமாதல்பற்றியும் இவர்கட்கு ஒருநிகரான பெயர் ஏற்கும்.

உடையவ ரென்ற பெயர் - எல்லாச்செல்வங்கட்குந் தலைவரென்று பொருள்படும். பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன் லீலாவிபூதி [இவ்வுலகம்] நித்யவிபூதி [முக்தி] என்னும் உபயவிபூதிஐசுவரியங்களையும் தந்தோமென்று இவர்க்கு அருள்செய்ததனால், இத்திருநாமமாயிற்று.

எம்பெருமானா ரென்ற பெயர்-எமதுதலைவ ரென்று பொருள்படும். பரமரஹஸ்யமாயிருந்த பெரியதிருமந்திரத்தின் விசேஷார்த்தத்தை இவர் வெகுசிரமப்பட்டுத் திருக்கோட்டியூர்நம்பிபக்கலுபதேசம்பெற்று உடனே அதனைப் பரமகிருபையால் வரம்பின்றிப் பலர்க்கும் வெளியிட்டபோது, அத்திருக்கோட்டியூர்நம்பி இவரது பெருவண்மையை நன்குமதித்து 'எம்பெருமானாரே! வாரும்' என்று கொண்டாடினராதலால், இவர்க்கு இத்திருநாமமாயிற்று.

வேதவியாசபகவான் அருளிச்செய்த வேதாந்தசூத்திரத்திற்கு விசிஷ்டாத்வைதபரமாக ஸ்ரீபாஷ்யஞ் செய்தருளியதனால், ஸ்ரீபாஷ்யகாரரென்றுதிருநாமம். காஸ்மீரதேசத்திலுள்ளபட்டிமண்டபத்துக்கு இவர் எழுந்தருளியபொழுது, அங்குக் கோயில்கொண்டிவீற்றிருக்கின்ற ஸரஸ்வதி இவருடைய ஞானவிசேஷத்தை உகந்து இவரது ஸ்ரீபாஷ்யத்தைக் கொண்டாடிச் சாத்தின திருநாமம், இது. பாஷ்யம்-வியாக்கியானவிசேஷம்; அதனைச் செய்தவர், பாஷ்யகாரர்.

இவர், தொண்டைநாட்டில் ஸ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்தவர். பகவானது அம்சமாதலால், பகவத்ராமாநுஜாசாரியரென்ப.

பஞ்சகாலமுறைமை - ஐந்துவகையாகப் பகுத்த காலங்கட்கு உரிய ஒழுக்கமுறை; இங்குக் கால மென்றது - சிறுபொழுது.

பாகவத உத்தமர்-பகவானது அடியார்களில் மிகச்சிறந்தவர்.

நிரந்தர வாஸம் - இடைவிடாது வசித்தல்.

பக்கம்—உ.

வைராக்யம் - ஆசையின்மை.

பரித்யாகம் - பற்றறவிடுதல்; பரி - உபசர்க்கம்.

உபாதாநகாலம் - பண்டங்களை நல்வழியால் இன்றியமையாதவளவு ஈட்டுதற்கு உரிய காலம்.

நெல்வயல்களில்உதிர்ந்துகிடப்பதும் உரியவர்கள்வேண்டாது விட்டிட்டது மாகிய தானியத்தை ஒவ்வொன்றாகப்பொறுக்கியெடுத்துக்கொள்வது, உஞ்சம். இவ்வகையான ஜீவநோபாயம் - உஞ்சவ்ருத்தி. சிற்சிலகிருகங்களின்வாயில்களில் தாம்செல்லும்போது அம்மாளிகையிலுள்ளாரால் குறிப்பறிந்துகொடுக்கப்படும் பண்டத்தைப் பெற்றுக்கொள்ளுதற்கு உபசாரமாக வழங்குகின்றது, இது.

பக்கம்—௯.

போஜந உபகரண பதார்த்தம் - உணவிற்குஉரிய பண்டம்.

காரணா-எல்லாப்பொருள்கட்கும்காரணமானவனே! நான்முகனை படைத்தானே-சதுர்முகனானபிரமனைச்சிருஷ்டித்தவனே! கண்ணா - கிருஷ்ணாவதாரஞ்செய்தருளியவனே! கரியாய்-கரியதிருநிறமுடையவனே! அடியேன் நான்-(உனக்கு)அடிமையாயுள்ளவனான யான், உண்ணா நாள்-உணவைஉட்கொள்ளாத நாளில், பசியாவது ஒன்று இல்லை - (அடியேனுக்குச்)சிறிதும் பசிப்பதில்லை; ஓவாதே - இடைவிடாமலே, நமோ நாராணா என்று எண்ணா - 'நாராயணனே! (உனக்கு)நமஸ்காரம்'என்றுநினையாத,நாளும்—. இருக்கு எசு சாமவேதம்(கொண்டு) - ருக்வேதமும் யஜுர்வேதமும் ஸாமவேதமு மாகிய மூன்றுவேதங்களைக்கொண்டும், நாள் மலர் கொண்டு - அன்றலர்ந்த மலர்களைக் கொண்டும், உன பாதம் நண்ணா-உன்னுடைய திருவடிகளை அடுத்துவழிபடாத, நாள் - நாளும் (ஆகிய), அவை—, தத்துறும் ஆகில் - நேரிடுமானால், அன்று அவை எனக்கு பட்டினி நாளே - அத்தகையஅந்நாள்களே அடியேனுக்குப் பட்டினிகிடக்கின்ற நாள்களாம் என்பது,பெரியாழ்வார் திருமொழிப்பாசுரத்தின் பொருள்.

'காரணா'என்றது - பிரமனுக்குமுன்பு உண்டான பிராகிருத சிருஷ்டியைச் செய்தவனே யென்றபடி. 'நான்முகனைப்படைத்தானே' என்றது - பரத்வத்தையும், 'கண்ணா' என்றது-சௌலப்பியத்தையும், 'கரியாய்'என்றது - நீலமணிபோன்றவடிவழகையுங் காட்டும். இவ்வளவும்-எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும்,'அடியேன் நான்'என்றது - தமது ஸ்வரூபத்தையும் சொன்னவாறாம். பிந்தின வாக்கியங்கள் - இவ்வுடம்புக்குத் தாரகம், தேஹாத்மாபிமானத்தைப்போக்கிப் பகவந்நாமத்தை அநுஸந்தித்தலும் அவன்திருவடிகளை வழிபடுதலுமே யென விளக்கும். நாரணனென்ற திருநாமம்- அனைத்துக்குந்தலைவனென்பதையுணர்த்தும். நான்குவேதங்களுள் அபிசாரம்முதலிய மந்திரப்பிரயோகத்துக்கு உரிய அதர்வணவேதத்தை விலக்கி மற்றைமூன்றையும் 'த்ரயீ'என்று சிறப்பாகவழங்கும் மரபு, இங்குஉணரத்தக்கது. ஓவாதேநமோநாராணாவென்றுஎண்ணுதல் - தொகுத்துச்சுட்டலும், இருக்கெசுச்சாமவேத நாண்மலர் கொண்டுஉனபாதம்நண்ணுதல்-வகுத்துக்காட்டலுமாம். 'திருமந்த்

ரம் - ஸங்க்ரஹமும், வேதம் - விவரணமுமாயிறே யிருப்பது.' "மாதவன்பேர்சொல்லுவதே யோத்தின்சுருக்கு." 'அவை தத்துறுமாகில்' என்றது - அவை தட்டுப்படாவென்பது தோன்ற நின்றது. நாண்மலர்கொண்டுநண்ணுகைக்குப் பிரமாணம் வேத மாகையால், அது முதலிற் கூறப்பட்டது. நாண்மலர் - வாடாதமலர். உன, அ - ஆறனுருபு. "நாடாதமலர்நாடி நாடோறும் நாரணன்றன், வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" என்றார் நம்மாழ்வாரும்.

தாரகமும் போஷகமும் போக்யமும் ஆகிய பொருள்களெனைத்தும் நமதுதலைவனை கண்ணபிரானே யென்பது, "உண்ணுஞ்சோறு" என்ற தொடக்கத்து மேற்கோளின் பொருள். பருகுதல்-குடித்தல்.

திருவாய்மொழி அநுஸந்தாநம் - (நம்மாழ்வார் அருளிச்செய்த ஸாமவேதஸாரமான) திருவாய்மொழி யென்ற திவ்வியப்பிரபந்தத்தை ஓதுதலும் அதன்பொருளையுணர்தலும்.

தாரகம் - உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

கோயி லென்ற பொதுப்பெயர் - சிறப்பினால், பூலோக வைகுண்ட மெனப்படுகிற ஸ்ரீரங்கத்தைக் குறிக்கும்.

பெருமாள் - இராமபிரான். (இளையபெருமாள் - லக்ஷ்மணன்.) இராமபிரானால் முன்பு திருவாராதனஞ்செய்யப்பெற்றமைபற்றி, ஸ்ரீரங்கநாதனுக்கு 'பெரியபெருமாள்' என்று திருநாமம்.

திருச்சின்னம் - ஒருவகைக்காளம்; வாத்தியவிசேஷம்.

தேவியார் - மனைவியார்; உயர்வுச்சொல்.

குலாவிக் குலாவி - மிகமகிழ்ந்து என்றபடி.

பக்கம்—கூ.

நிர்வாஹகர் - சரிவரநடத்துபவர்.

அர்ச்சக முகமாக - திருவாராதனஞ்செய்பவரது மூலமாக.

அக்காரவடிசில் - ஒருவகைச்சிறந்தவுணவு. அக்காரம்=இக்ஷுஸாரம்: கருப்பஞ்சாற்றின்பாகினாலாகிய வெல்லம் அல்லது சர்க்கரை; அதுகலந்த அடிசில் என்க.

வேணும்=வேண்டும்: மரூஉ. நியமநம் - கட்டளை.

மஹாப்ரஸாதம் - பேரருள்.

பணிமாறுதல் - ஊட்டுதல.

விண்ணப்பம்=விஜ்ஞாபநம்: வடமொழிச்சிதைவு.

நிஷ்டூரம் - கடுமை.

பக்த வத்ஸலன் - அடியார்கள்பக்கல் மிக்கஅன்புடையவன்.

நிறைந்த மகிமை, தைரியம், புகழ்,சம்பத்து, ஞானம், வைராக்கியம் இந்த ஆறுக்கும் பகமென்று பெயர்; இவற்றையுடையவன், பகவாந் - வடசொல்: வாந் - வடமொழிப்பெயர்விகுதி.

கருணைத்திறம் - அருளின்மேன்மை. பகுதி - பாகம்.

புத்ர காம இஷ்டி - புதல்வரைப்பெறும் விருப்பினுற்செய்யும் யாகம்; வடமொழித்தொடர்.

பயஸ் - பால்; அதுகொண்டுசெய்யப்பட்ட உணவு, பாயஸம்: வடமொழித் தத்திதாந்தநாமம். கூறு - பகுதி.

பக்கம்—ரு.

ஈன்ருள் - பெற்ருள்; ஈன் - பகுதி.

ஸம்ஸ்கிருதவேதம்போலவே தமிழ்மறையாகிய திவ்வியப்பிர பந்தங்களும் நித்திய மென்பது, ஆன்ருேர்கொள்கை. திவ்வியப்பிர பந்தங்களை ஆழ்வார்கள் இயற்றியதாகச் சொல்லுதல் என்னெனின்,—வடமொழிவேதங்களை ஹம்ஸவடிவங்கொண்ட திருமாலினிடம் உபதேசம்பெற்ற பிரமன் தனது வாக்கினுல் வெளியிட்ட மாத்திரத்தைக்கொண்டு "முன்னம் திசைமுகனைத் தான்படைக்க மற்றவனும், முன்னம் படைத்தனன் நான்மறைகள்" என்று பிரமன்தானே அவற்றைப்படைத்ததாகச் சொல்லுதலும், பின்பு அவ் வடமொழிவேதங்களின் ஒவ்வொருபகுதியை ஒவ்வொருமுனிவர் ஒவ்வொருசமயத்தில் வெளியிட்டதுகொண்டு அந்தந்தப்பகுதியை அந்தந்தமுனிவரியற்றியதாக அவரவர்பெயரையிட்டு வழங்குதலும் போலவே, எம்பெருமான் திருவருளால் உணர்த்த ஆழ்வார்கள் திவ்வியப்பிரபந்தங்களை யுணர்ந்து வெளியிட்ட மாத்திரத்தைக்கொண்டு அவர்கள்செய்ததாகச் சொல்லுதலும் உபசாரவழக்காம் என்பது, சம்பிரதாயம். ஆனதுபற்றி, 'நம்மாழ்வாரால் வெளியிடப்பட்ட' எனப்பட்டது. இதுதொடக்கத்து வாக்கியம்-தற்குறிப்பேற்றவணி.

அறிகுறி - அடையாளம்.

ஆசாரிய பரதந்திரர் - ஸ்வாதந்திரியங்கொள்ளாமற் குருவின் அதீநராய் நடப்பவர்.

நாம கரணம் - பேரிடுதல். கடவர் - உரியர்.

உபய குமாரர்கள் - இரண்டு பிள்ளைகள். வர்க்கம் - கூட்டம்.

எம்பார்-ஸ்ரீபாஷ்யகாரர்க்குச் சிறியதாயாரது குமாரர்; தொண்டைநாட்டில் மதுரமங்கலத்தில் அவதரித்தவர்; கருடாம்சமானவர்; கோவிந்தபட்டரென்னும்இயற்பெயருடையர். ஸ்ரீபாஷ்யகாரருடன் யாதவப்பிரகாசரிடத்தே சாஸ்திராப்பியாசஞ் செய்கின்றபொழுது, அக்குருவோடு கங்காயாத்திரைசென்று கங்கையில்நீராடுகையிற் கையிலே சிவலிங்கம் சேர்ந்ததனுல் 'உள்ளங்கைகொணர்ந்தநயினுர்' என்னும்பெயரினராகிக் காளஹஸ்தியிற் சிவபிரானுக்குத் தொண்டுசெய்துவரும்நாளில் தமதுநல்லம்மானுன பெரியதிருமலைநம்பியால் திருத்திப்பணிகொள்ளப்பெற்றுப் பிறகு ஸ்ரீபாஷ்யகாரரையடைந்து அவர்பக்கல் சன்னியாசாச்சிரமம் பெற்றபோது 'எம்பெருமானுர்'என்ற அவர்பெயரையே தமக்குப்பெயராக இடப்பெற்றனர்; அப்பொழுது அப்பெரும்பெயரைத் தமக்குச்சொல்லிக்

கொள்ளுதற்கு இவர் கூறியதனால், பாஷ்யகாரர் அதனைக்குறுக்கி 'எம்பார்' என்று பேரிட்டனர்.

பிரபந்நர் - எம்பெருமானைச்சரணமடைந்து உய்தலாகிய பிர பத்திமார்க்கத்தில் ஊன்றியொழுகுபவர். அவ்வடியார்களின் வர்க் கம் செழித்தற்கு மூலமானவர்கள் என்பது, 'பிரபந்ந குலக் கொழு ந்து' என்பதன் கருத்து.

திருஷ்டி தோஷம் - கண்பார்வையால் உண்டாகுங் குற்றம்; கண்ணெச்சி லெனப்படும். ரக்ஷை - பாதுகாப்பு.

இரண்டுவாக்கியமாகஉள்ளதனால், த்வய மென்று பெயர்.

மந்திர ரத்தினம் - சிறந்த மந்திரம். அநுசந்தித்து - சொல்லி.

பக்கம்—சா.

கடாக்ஷித்தல் - அருளொடு நோக்குதல்.

தெய்விக சிசுக்கள் - தெய்வத்தன்மையுடைய குழந்தைகள்.

தேஜோ விசேஷம் - ஒளிச்சிறப்பு. வியப்பு - ஆச்சரியம்.

பரிமளிக்கின்றது - விளங்குகின்ற தென்றபடி.

உகந்து - மகிழ்ந்து. உய்யும் வகை - உஜ்ஜீவிக்கும் உபாயம்.

நாடி - ஆராய்ந்து, விரும்பி.

பஞ்சாயுதத் திருவாபரணம் - சங்கம் சக்ரம் கதை வாள் வில் என்னும் திருமாலினதுஐந்துஆயுதங்களின்வடிவமாகப் பொன்னாற் செய்து மார்பில்அணியும் அணிகலம். காத்தற்கடவுளின்படைக் கலவடிவமான இவ்வணிகலம், குழந்தைகட்கு ரக்ஷையாம்.

பராசரபகவான்-வியாசமாமுனிவரது திருத்தந்தையார்; வசி ட்டமகாரிஷியினுடைய பௌத்திரர்; புலஸ்தியமுனிவருடைய அநு க்கிரகத்தால் ஸகலசாஸ்திரஞானமும் பெற்று, வசிஷ்டருபதேசத் தால் தத்துவஞானியாகி, பராசரஸ்மிருதியென்று வழங்கப்படும் கலியுகதர்மசாஸ்திரத்தையும், புராணரத்தினமெனப்படும் விஷ்ணு புராணத்தையும் உரைத்தருளினர்.

வேதவியாசர் - விஷ்ணுவின்அம்சமானவர்; சகலகலைஞானங் களிலுஞ்சிறந்தவர்;வேதங்களை வகுத்தவர்; மகாபாரதத்தையும்,பதி னெண்புராணங்களையும் செய்தருளியவர். சாற்றி - சொல்லி.

இராமாநுஜாசாரியர் சன்னியாசம்பெற்றுப் பெருமாள்கோ விலில் எழுந்தருளியிருந்தபொழுது ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவா சாரியராய் வீற்றிருந்த யாமுநாசாரியரென்னும் ஆளவந்தார் இவ் விராமாநுசரை அழைத்துவரும்படி பெரியநம்பியை அனுப்ப, இவர் கள் செல்லுமளவில், பரமபதமடைந்துவிட்ட ஆளவந்தாரது திரு மேனியைத் திருப்பள்ளிபடுத்துஞ் சமயமாயிருக்க, அத்திருமேனி யில் மூன்றுதிருவிரல்கள் மடங்கியிருந்தமை கண்டு'முன்னும் இவர் க்கு இப்படி உண்டோ?' என்று இராமாநுசர் வினவியதற்கு, அங் குள்ளார் 'முன்பு இல்லை; இப்போது கண்டது' என்ன, இராமா

நுசரும் அவர்திருவுள்ளத்திற் சிலகருத்துஉண்டாயிருத்தல்வேண்டு மென்று ஊகித்து 'முன்பு இவருடைய அபிமதஙஸல்லாபங்களைக் கேட்டிருந்தவர்கள் உண்டோ?" என்று வினவ, அங்கிருந்த அடியார் கள் 'வியாசபராசரர்களிடத்து உபகாரஸ்மிருதியும், நம்மாழ்வார் பக்கல் ப்ரேமாதிசயமும், வியாசசூத்திரத்திற்கு விசிஷ்டாத்வைத பரமாகப் பாஷ்யஞ்செய்யும்விருப்பமும் பலகாலும் ஆளவந்தார் அரு ளிச்செய்துகொண்டிருப்பர்' என்றுசொல்ல, இராமாநுசரும் 'என் னிடத்தில் ஆசாரியகிருபை யுண்டானால் இம்மூன்றுகுறையையுந் தீர்க்கக்கடவேன்' என்றவளவிலே, அவ்விரல்கள் நிமிர்ந்தன வென் பது,இங்குஅறியவேண்டிய வரலாறு. எம்பாரது திருத்தம்பியாரான சிறியகோவிந்தப்பெருமாளுக்கு ஒருகுமாரர் அவதரிக்க, அக்குழந் தைக்குப் பராங்குசநம்பி யென்று நம்மாழ்வார்திருநாமத்தைச சாத் தியும், விசிஷ்டாத்வைதபாஷ்யஞ் செய்தும் மற்றைக்குறைகளை இராமாநுசர் தீர்த்தனர்.

பிதாமஹர் - தந்தையின் தந்தை.

ஸோமயாஜீ - ஸோமமெனப்படுங் கொடியின் சாற்றை உப யோகித்துச் செய்யும் ஸோமயாகத்தைச செய்தவர்.

ஸந்நிதி - திருமுன்பு.

திருவரங்கம் பெரியகோயிலினுள்ளே பெரியபெருமாள்திரு முன்பே உள்ள இரண்டுதூண்கள், திருமணத்தூணெனப்படும்; மங் களகரமான தூண்க ளென்றபடி: ஆமோத ஸ்தம்ப மென்பர்.

பக்கம்—எ.

ஸ்ரீரங்கநாச்சியார் - திருவரங்கத்திற் கோயில்கொண்டெழுந் தருளியிருக்கின்ற திருமகளாரது திருநாமம்; ஸ்ரீரங்கநாதனது தேவியார். நாச்சி - நாயகீ என்ற வடசொல்லின் சிதைவு.

அடிசில் - உணவு: அடு என்ற பகுதியினடியாப் பிறந்த பெ யர்; அடுதல் - சமைத்தல்.

தமதுகுழந்தைகளின் சிறியகையால் அளாவப்பட்ட உணவா னது சுவையால் அமிருதத்தினும் மிகஇனியது என்பது, திருக்குற ளின்பொருள். கூழ்என்றது - இங்கு,உணவுப்பொதுவாய்நின்றது; இழிந்தஉணவெனக்கொண்டு, தம்மக்கள் கையால்அளைந்த கூழும் அமிழ்தினுமினியதா மெனினும் அமையும்.

புதர ஸ்வீகாரம் - புத்திரனாக அங்கீகரித்தல்.

வான் இட்ட கீர்த்தி-தேவலோகத்திலும் பரவிய புகழ், வளர்- மேன்மேல் மிக்குவளரப்பெற்ற, கூரத்தாழ்வான் - கூரத்தாழ்வா னென்னும் ஆசாரியர், மகிழ - திருவுள்ளமுகக்கும்படி, வந்த-(அவ ரது குமாரராய்த்) திருவவதரித்தவரும், தேன் இட்ட தார் நம்பெ ருமாள் குமாரர் -தேன்துளிக்கின்ற மாலையைத் தரித்த திருவரங்க நாதனது குமாரருமாகிய பட்ட ரென்க. கீர்த்தி வானுலகத்திற்

பரவியமை கூறவே, இவ்வுலகத்துப்பரவியமை தானே பெறப்படும். வந்த பட்டர், குமாரர் பட்டர் என இவையும். தேன் இட்ட தார் - வண்டுகள் இடைவிடாதுமொய்க்கின்ற மாலை யெனினுமாம். 'நம் பெருமாள்' என்ற பெயர் - உயர்சசிறசொல்; "நம்பெருமாள் நம் மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை, யென்ப ரவரவர்த மேற்றத்தால்" என்ற உபதேசரத்தினமாலையைக் காண்க.

கருவிலே தொடங்கி - கர்ப்பம்முதலாக.

பாத்ரம் - இடம், கொள்கலம்.

துழாய் = துளஸீ: வடசொற்சிதைவு

அங்குரித்தல் - முளைத்தல் பரிமளம் - நறுமணம்.

லோகஅதீதம்-உலகத்தாரது ஞானவெல்லையினும்மேம்பட்டது.

இ உலகம் மூன்றும் உடன் நிறைய-இந்தமூன்றுஉலகங்களும் ஒருங்குநிறையும்படி, சிறு மா மேனி நிமிர்த்த - சிறியதும் பெருமையுள்ளதுமாகிய தனதுதிருமேனியை வளரும்படி பண்ணின, என் செம் தாமரை கண் திரு குறளன் - எனதுதலைவனும் செந்தாமரைமலர்போன்ற திருககண்களையுடைய வனுமான ஸ்ரீவாமன மூர்த்தியினுடைய, நறு மா விரை நாள் மலர் அடி கீழ் - பரிமளமுள்ளதும் சிறந்ததும் தேனையுடையதுமாகிய அன்றலர்ந்ததாமரைமலர்போன்ற திருவடிகளின்கீழே, புகுதல்-அடிமைசெய்துசேர்தலானது.— அவன் அடியார் சிறு மா மனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரிய அன்றி பாவியேனுக்கு உறுமோ - அப்பெருமானுக்கு அடியார்களும் சிறுமையையும் பெருமையையும் ஒருங்கேயுடைய மகாபுருஷர்களுமாய் என்னை அடிமைகொண்டவர்கள் இவ்வுலகத்திலே திரியாநிற்கையில் அவர்கட்கு அடிமைப்படுத லன்றித் தீவினையேனை எனக்குச் சிறக்குமோ? என்பது. திருவாய்மொழிப்பாசுரத்தின் பொருள்.

எம்பெருமானடியார்க்குஅடிமைப்படுதல் விசேஷமே யன்றி, எம்பெருமானுக்கு அடிமைப்படுதல்மாத்திரம் விசேஷமன்று என்பது கருத்து. அதனை, வாமனனடியாரான பாகவதர் இங்கு அண்மையிலிருக்கும்பொழுது வாமனன்திருவடிகளிற்புகுதல் சிறவாதென்று வெளியிட்டார். 'பாகவதசேஷத்வத்தின் எல்லையாகிறது, பாகவதசேஷத்வத்தளவும் வருகையிறே.' அவனடியார் சிறுமாமனிசராயென்னையாண்டா ரிங்கேதிரிய.அவர்களைததவிர்ந்து.இவ்வுலக மூன்றும் உடன்நிறையச் சிறுமாமேனிநிமிர்த்த என்செந்தாமரைக் கட்டிருக்குறளனது நறுமாவிரைநாண் மலரடிக்கீழ்ப் புகுதல் பாவியேனுக்குஉறுமோ என்று அந்வயங்காண்க. பாகவதர்க்கு அடிமை பூணுதலின்சிறப்பை யுணர்த்தும் பதிகத்தி லுள்ள செய்யுள், இது. "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி, பாவினின்னிசை பாடித்திரிவனே" என்று மதுரகவியாழ்வார் அருளிச்செய்வதும இதுபற்றியே.

'ஒருகாலத்திலே போசளதேசத்தவரான அம்மணியாழ்வானென்பவர் பட்டர்வைபவத்தைக் கேள்வியுற்றுத் தாம்உய்வுபெறும் வழியை அவர்பக்கல் கேட்டுணர அவாக்கொண்டு பலகாதவழிகடந்து ஸ்ரீரங்கத்துக்குவந்து பட்டர்திருவடிகளிலே தண்டன்சமர்ப்பித்து 'அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதோர் அர்த்தத்தை அருளிச்செய்யவேண்டும்' என்று விஜ்ஞாபிக்க, பட்டர் திருவாய்மொழியிலே பாகவதர்க்கு அடிமைபூணுதலின்சிறப்பையுணர்த்தும் "நெடுமாற்கடிமை" என்ற திருப்பதிகம்முழுவதுக்கும் பொருளருளிச்செய்து, 'எம்பெருமான்மகிமையை எவ்வளவுஅறிந்தாலும், அது, அவனைப்பாதியளவேஅறிந்ததாம்;அவனடியார்களின் மகிமையுணர்ந்தாலே அவனை முழுதும் அறிந்ததாகிறது' என்று அருளிசெய்ய, அவர் 'பலபடிசொல்லியென்? மறந்துவிடுவேன்; இவ்வளவேஅமையும்'என்று அதனையே கடைப்பிடித்துச்சென்று,அங்ஙனம் அடியார்க்குஅடிமைசெய்தலையே சிறியதொழிலாகக்கொண்டு உய்வுபெற்றார்' என்பதை, பட்டர்வைபவம் (முழுப்புத்தகம்) - ருசு, ருஎ-ஆம் பக்கங்களிற் காண்க.

'பாவியேனுக்கு' என்றது, பணிவுதோன்றத் தம்மைத்தாழ்த்தியுரைத்தது; நைச்யாநுஸந்தாநம். உடனே திரிவிக்கிரமமூர்த்தியாய் வளர்ந்து எல்லாவுலகங்களையும் அளந்து தன்வசப்படுத்திக்கொள்ளுதல் தோன்ற, 'இவ்வுலகமூன்றுமுடன்நிறையச் சிறுமாமேனி நிமிர்த்த திருக்குறளன்' என்றார். ஓரடியால் மண்ணுலகத்தையும் மற்றோரடியால் விண்ணுலகத்தையும் அளந்தபோது, நிலவுலகத்தையளந்த திருவடியின்கீழ் அதன்கீழுலகங்களும் அடங்கின. 'செந்தாமரைக்கண் திருக்குறளன்' என்றது, வடிவழகில் ஈடுபாடு. மனிசர் - மனிதர், மநுஜர்.

பக்கம்—அ.

பாசுரம் - பாட்டு. உபநயநம் - பூணூல்தரிக்குஞ் சடங்கு.

சிறியாச்சான் - ஸ்ரீபாஷ்யகாரர்திருவடிகளில் ஆசிரயித்த அடியார்களில் ஒருவர்.

யஜ்ஞமூர்த்தியென்கிற மாயாவாதசன்னியாசி, ஸ்ரீபாஷ்யகாரருடனே சமயவாதஞ்செய்து, பதினெட்டாவதுநாளில் தோற்று, அவர்க்குஅடிமைப்பட்டு, ஸ்ரீவைஷ்ணவசன்னியாசியாகி, 'அருளாளப்பெருமாளெம்பெருமானார்'என்று அவரால் திருநாமம் இடப்பெற்று, 'ஞானசாரம்,' 'பிரமேயசாரம்' என்ற பிரபந்தங்களைச் செய்தருளினர். தட்டு - தடை.

முதலியாண்டான்-தொண்டைநாட்டிற் பசசைவாரணப்பெருமாள்கோவிலென்கிற புருஷமங்கலத்தில் வாதூலகோத்திரத்திற் கந்தாடைக்குலதீபமாய் அவதரித்தவர்; சக்ராம்சமும், ராமாம்சமுமானவர். ஸ்ரீபாஷ்யகாரரது தமக்கையாரான பூமிதேவியாண்டாள்

இவர்க்குத் தாயாராதலால், இவர் பாஷ்யகாரர்க்கு மருமான்; அவரது மிக்க அன்புக்கு இடமான அந்தரங்கசிஷ்யர்: ஆதலால், அவரது திருவடிநிலைகள் இவர்பேரையிட்டு 'முதலியாண்டான்' என்று வழங்கப்படும். தாசரதி, யாதூலதேசிகர், ஸ்ரீவைஷ்ணவதாஸர், இராமாநுசன்பொன்னடி என்பன - இவரது வேறு திருநாமங்கள்.

அந்நபாநாதிகள் - சோறு தண்ணீர் முதலியன.

ஈடுபடுதல் - மிகவும் ஆழ்ந்து பக்திசெய்தல்.

பரமபதம்-எல்லாவிடங்களினுஞ்சிறந்த இடம்; ஸ்ரீவைகுண்டம்.

நித்திய ஸூரிகள் - பரமபதத்தில் எந்நாளும் வாழ்கின்ற ஆதிசேஷன், கருடன், சேனைமுதலியார் முதலானவர்கள்; இவர், நித்யரெனவும் படுவர்.

பகவத்பக்தி - எம்பெருமானிடத்துச் செய்யும் பக்தி.

நித்ய முக்தர்கள் - நித்தியரும் முக்தரும் முக்தர் - முந்தி இவ்வுலகங்களிலே யிருந்து பிறகு வீடுபெற்றவர்.

இசைவு - உடன்பாடு.

ஸர்வஜ்ஞ பட்டன் - எல்லாமறிந்த புலவன்.

பக்கம்—௯௯.

பரிஜநம் - ஏவல்செய்வோர். விருது - வெற்றி.

காளம் ஒருவகைவாத்தியம்; ஊது குழல்.

சிவிகை - பல்லக்கு. தியங்கி - கலங்கி, திகைத்து.

மௌநம் - பேசாமை. அஜ்ஞன் - அறியாதவன்.

சம்பிரமம் - சிறப்பு, ஆடம்பரம். ஏசி - இகழ்ந்து.

'பறப்பதன் குட்டி தவழுமோ?''—பறப்பதாகிய பறவையினது குஞ்சு தத்தவழும்பருவமென்பதொன்றில்லாதவாறுபோல, பேரறிவுடையாரது குழந்தைக்குப் பேதைமையுடையதான இளம்பருவமென்பதொன்றில்லை யென்க. இப்பழமொழியும், 'விளையும்பயிர் முளையிலே தெரியுமன்றோ?' என்னும் பழமொழியும் - உபமானத்தைமாத்திரஞ் சொல்லி அதுகொண்டு உபமேயத்தைப் பெறவைத்தலால், பிறிதுமொழிதலணி. தண்டிகை - பல்லக்கு.

பக்கம்—௧0.

பிள்ளையுறங்காவில்லிதாஸர்-ஸ்ரீபாஷ்யகாரரது திருவடிகளில் ஆசிரயித்த சாத்தாதமுதலிகளில் ஒருவர்; இரவிலுறங்காமல் வில்லுங்கையுமாய் ஸ்ரீபாஷ்யகாரர்க்குத் திருமேனிக்காவல்செய்யுஞ் சிறந்த அடியவராதலபற்றி வந்த பெயரென்பர்: இப்பெயர், லக்ஷ்மணதாச ரென்றவாறுமாம்.

பொன்னாச்சியார் - ஸ்ரீபாஷ்யகாரரது சிஷ்யை.

சிறுச் சேவகம் - இளைய வீரச்செயல். ''கல்வி தறுகணிசைமை கொடை யெனச், சொல்லப்பட்ட பெருமித நான்கே'' என்று குறித்த நால்வகைவீரத்தினுட் கல்விவீரம் இது.

மந்திரத்தினம்-த்வயம். ரக்ஷையிட்டு-பாதுகாப்புச்செய்து.

பலநூல்களைக்கற்றறிந்தோம் யாம் என்று (எவனும்)தன்னைத் தானே புகழ்ந்துகொள்ளவேண்டியதில்லை; (எனெனில்),—உலக முழுவதும்பரவுகின்ற கிரணங்களையுடைய சூரியனை,கையிற்பிடித்த ஒருசிறுகுடையும் ஒருசார்தடுக்கும்; (மற்றும்), பலநூல்களைப்படித்தவர்க்குக் கடையாணிபோல ஆதாரமான ஒருசொல், சிலநூல்களைக்கற்றவர்வாயினின்று வெளிவரவுங்கூடும் என்பது,அறநெறிசாரசெய்யுளின் பொருள்.

உலகமுழுவதும் பரவுஞ் சூரியகிரணத்தையும் ஒரு பகுதியிற் படாதபடி கைக்குடை தடுக்கவல்லதாதல் போல, உலக முழுவதும் வாதப்போரிற் பலரைவென்று விளங்கிவருகின்ற ஒரு பண்டிதனது பேசசை ஒருசிறுவன் ஓரளவிலே ஆக்ஷேபித்துமடக்கவுங்கூடும் என்பது. இரண்டாமடியின் கருத்து. இங்ஙனம் அவ்வடியிற்கூறிய உபமானவாக்கியம் உபமேயக்கருத்தை விளக்கியது, **பிறிதுமொழிதலணி.** இதுவும் அடுத்தவாக்கியமும்,முந்தினவாக்கியத்திற்கூறிய விஷயத்திற்கு ஏதுவாய்ச சமர்த்தித்தலால், **தொடர்நிலைச்செய்யுட்குறியணி.** இவ்வாறு இரண்டணி சேர்ந்துவந்தது, **சேர்வையணி.**

அச்சு - சக்கரங்கோக்கின்ற மரம்; அக்ஷமென்ற வடசொல்லின் சிதைவு. அச்சாணி - சக்கரங்கழலாதபடி அச்சின்கடையிற் செருகும் ஆணி. அது மிகப்பெரிய தேர்க்கு இன்றியமையாது ஆதாரவாவதுபோல, நிரம்பக்கற்றபேரறிவினர்க்கு ஆதாரவாகத்தக்க ஒரு சொல் சிற்றறிவினரிடத்தும் ஒரோவிடத்து உண்டாகலாமென்க. (ஜீவகனென்னும் ராஜகுமாரன் இளமையில் தோழருடன் நகர்ப்புறச்சோலையில் விளையாடிக்கொண்டிருக்கையில், மகாபண்டிதனை ஒருமுனியன் வந்து,'குமார! சமீபமாக இவ்விடத்து ஊருண்டோ?' என்று வினவ, ஜீவகனும் புன்சிரிப்புக்கொண்டு 'சிறுபிள்ளைகளாகிய நாங்கள் இங்கு விளையாடுவதைக் கண்டதனால் ஊர் சமீபத்ததே யென்பது சொல்லாமலே விளங்கவில்லையோ?' என்றுசொல்ல, அதுகேட்டு அத்துறவி மனமுவந்தன னென்பது, இங்குஉணரத்தக்கது.)

கற்றேம் யாம் - செருக்குப்பற்றிவந்த உயர்வுப்பன்மை. ஆகவே, 'தன்' என்ற ஒருமையோடு வழுவாகாது, பன்மையொருமை மயக்கத்தின்பாற்படும். காத்தல் - தடுத்தல்; ("செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான்" என்றவிடத்துப் போல.) உள - உளது என்பதன் விகாரம். ஓர்சொல் என்ற எழுவாய்க்கு ஏற்ப 'உளதாம்'என்று பாடமிருத்தல் தகுதி. ஓர் சொல் - ஒப்பற்ற சொற்கள் எனக் கொண்டால், 'உளவாம்' என்றது அமையும்.

("கடலேயனையம்யாம் கல்வியா லென்னும், அடலேறனைய செருக்காழ்த்தி - விடலே,முனிக்கரசுகையான் முகந்து முழங்கும், பனிக்கடலுமுண்ணப்படும்," "உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க், கச்சாணி யன்னா ருடைத்து", "கற்றது கைம் மண்ணளவு கல்லாதுலகளவென்று, உற்றகலைமடந்தை யோதுகின்றாள் - மெத்த, வெறும்பந்தயங் கூறவேண்டாம் புலவீர், எறும்புந் தன்கையா லெண்சாண்"என்பன, இங்கு ஒப்புநோக்கத்தக்கவை.)

பாலப்பிராயத்தர் - இளம்பருவத்தினர்.

ஆளவந்தார்ஸ்தோத்ரம்-ஆளவந்தார் என்ற பூர்வாசாரியர் பகவத்விஷயமாக வடமொழியில் அருளிச்செய்த ஸ்தோத்திரப்பிரபந்தம்; இது, ஸ்தோத்ரரத்ந மெனப்படும்.

பக்கம்—கக.

தரிசனம் - மதம்.

சாஸ்த்ர உக்தமாக - சாஸ்திரங்களிற் சொல்லியபடி.

அன்று + நாள் = அற்றைநாள்; அன்றைத்தினம்.

சந்தைசொல்லுதல் - மாணாக்கர் இருமுறைகூறுமாறு ஆசிரியர் மூலபாடத்தை ஒருமுறை பகுத்துப்பகுத்து உருச்சொல்லுதல்.

வர்ண ஸ்வர உச்சாரண முறைமை - எழுத்துக்களை ஸ்வரமுட்பட உச்சரிக்கின்ற ஒழுங்கு.

அணுவளவும் - மிகச்சிறிதும்.

இருமுதுகுரவர் - இரண்டுபெரியபெரியோர்; தாய்தந்தையர்.

ஒண்ணுது=ஒன்றாது: மரூஉ.

ஏக சந்தை க்ராஹி - ஒருமுறைசொன்னவளவிலே கிரகித்துக் கொள்பவர்.

பஞ்ச ஸம்ஸ்கார பூர்வகமாக - தாபம் புண்ட்ரம் நாமம் மந்த்ரம் யாகம் என்ற ஐந்து ஸம்ஸ்காரங்களை முன்னிட்டுக்கொண்டு. தாபம் - சங்கசக்ரமுத்திரைகளையிடுதல்; இலச்சினை யெனவும்படும். புண்ட்ரம் - பன்னிரண்டுதிருமண்காப்பிடுதல். நாமம் - அடிமைப் பெயரிடுதல். மந்திரம் - சிறப்புடையமந்திரங்களை உபதேசித்தல். யாகம் - திருவாராதநக்கிரமம் அருளுதல். இவற்றின் விவரங்களைக் கேட்டுஉணர்க.

பக்கம்—க௨.

உபய வேதாந்த ப்ரவர்த்தகர்-வடமொழிவேதாந்தமாகிய உபநிஷத்துக்கள் வியாசசூத்திரங்கள், தென்மொழி வேதாந்தமாகிய திவ்வியப்பிரபந்தங்கள் இவற்றின் பொருளை வெளியிட்டுப் பரவச் செய்யும் ஆசிரியர்.

சேவித்தல் - தரிசித்தல், தொழுதல்.

வளையஇட்ட திருத்திரையின் அகத்தே - சூழஇட்ட திரைச் சீலையி னுள்ளே.

உரிமை - இங்கு, தந்தைதாயரென்னும் முறைமை.

முனிந்து - கோபக்குறிகாட்டி.

அருளப்பாடு - அருள்செய்யப்படுதல்; இது, வருதற்குறிப்பை யுணர்த்துஞ்சொல்லாய் வைஷ்ணவசம்பிரதாயத்தில் வழங்கும்.

செல்வக்குமாரர் - அருமைப்பிள்ளை.

தண்டனிடுதல் - கைவிடப்பட்ட தடி விழுமாறுபோல உடம்பு தரையிற்படும்படி கீழேவிழுந்துவணங்குதல்; ஸாஷ்டாங்கநமஸ்காரஞ்செய்தல். தண்டசப்தம் வடமொழியில் ஆண்பாற்சொல் லாதலால், அக்குறிப்புத் தோன்ற 'தண்டன்' என்று தமிழில் வழங்கப்படுகின்றது. அன்றி, தண்டம் என்ற அஃறிணைப்பெயர் 'தண்டன்' என மகரனகரவீற்றுப்போலிபெறுதற்கு ஏலாமையுணர்க: இணைக்குறிலடுத்த தன் றாதலால்.

பக்கம்—கரு.

ஸாங்கோபாங்கமாக - அங்கங்கள் உபாங்கங்கள் இவற்றுடன்; குறைவற என்றபடி.

சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்ற ஆறும், வேதங்களின் அங்கங்களாம். மீமாம்ஸை, ந்யாயம், இதிஹாஸபுராணம், தர்மசாஸ்திரம் என்பன - வேதங்கட்கு உபாங்கமாம். இப்பதினான்கையும் வித்யாஸ்தாந மென்பர்.

ஸகல வித்யா பாரங் கதர்-எல்லாவித்தைகளுமாகிய கடலின் அக்கரையை அடைந்தவர்: கல்விக்கரைகண்டவர்; தேர்ந்தவர்.

பருவம் - காலம், வயது.

யான் எனது என்னும் செருக்கு - தானல்லாத உடம்பை யானென்றும், தன்னோடு இயைபில்லாத பொருளை என்னுடையதென்றுங் கருதி அவற்றினிடத்துப் பற்றுச்செய்தற்கு ஏதுவான மயக்கம். இவை, முறையே அகங்கார மமகார மெனப்படும். அகமாகிய உடம்பினிடத்து உண்டான பற்றை 'அகப்பற்று' என்றும், புறமாகிய பொருளினிடத்து உண்டான பற்றை 'புறப்பற்று' என்றுங் கூறுவர். எம்பெருமானுக்கு அடிமையான தனது ஆத்மாவை அங்ஙனமன்றி ஸ்வதந்திரமென்று கருதுதலும், எம்பெருமானுடையனவான உலகத்துப்பொருள்களை என்னுடையனவென்று அபிமானித்தலும் குற்றமாம்.

'முன்பு' என்ற இடைச்சொல் முன்னிடத்தையுணர்த்திப் பெயர்ச்சொல்தன்மைப்பட்டமைபற்றி, 'திரு' என்ற அடைமொழியினால் அடுக்கப்பட்டது.

விஜ்ஞாபிக்க - பணிவோடுசொல்ல.

பெரியநம்பி-மகாபூர்ணரெனவும்படுவர்; இவர், ஆளவந்தாரது சிஷ்யர்; ஸ்ரீபாஷ்யகாரரது பஞ்சஆசாரியரி லொருவர்: ஆளவந்தா

ரது நியமனப்படி பாஷ்யகாரர்க்குப் பஞ்சஸம்ஸ்காரபூர்வமாக மந்திரோபதேசஞ்செய்தனர்.

உசிதம் - தகுதி; (இதன் எதிர்மொழி, அநுசிதம்.)

இசையாது - உடன்படாமல்.

மமகாரமில்லாதவ ராதலால், தமதுகுடும்பத்தை 'ஈசுவரகுடும்பம்' என்றார்; எல்லாம் எம்பெருமானுடையன வென்பது கருத்து.

கரைய - மனமுருக, இரங்க.

பக்கம்—கச.

புதல்வர் - பிள்ளைகள்.

பகவத்சந்நிதியில் - பகவானிடத்தில்.

கடவீர் - கடமையுடையீர்.

உதக தாரா பூர்வமாக - மந்திரஞ்சொல்லித் தீர்த்தங்கொண்டு தாரைவார்த்துக்கொடுத்தலை முன்னிட்டு.

வேதாந்த உபந்யாஸ வைபவம்-வேதாந்தமுபந்யஸிக்கிற சிறப்பு.

உய்யும்படி - நற்கதிபெறும்படி; உய்தல் - ஈடேறுதல்.

வடமொழிமறைமுடிவு - ஸம்ஸ்கிருதவேதாந்தம். தென்மொழி மறைமுடிவு - தமிழ்வேதாந்தம்.

ஆசார்யஆதிபத்யம் - ஆசாரியராகவீற்றிருக்குந் தலைமை.

பட்ட அபிஷேகம் - மங்களஸ்நானஞ்செய்வித்துப் பட்டங் கட்டுதல். யுவராஜ பட்டாபிஷேகம் - இளவரசுபட்டங்கட்டுதல்.

திருப்பரியட்டம்-சிறந்தஆடை;இங்கு.தாம்உடுத்துக்களைந்தது.

வரிசை - சிறப்பு. நியமநம - கட்டளை.

பக்கம்—கரு.

ப்ரஹ்ம ரதம் - பிராமணர்களாற் சுமக்கப்படும் வாகனம.

வலம்வந்து - பிரதக்ஷிணமாகவந்து.

திவ்விய சிங்காதனம் - சிங்கந்தாங்குவதுபோலச் சித்திரவேலை செய்யப்பெற்ற சிறந்த பீடம்.

புண்ணிய தீர்த்தம் - பரிசுத்திகரமான தீர்த்தம்.

களி கூர்தல் - மகிழ்ச்சி மிகுதல். மகா விபவம் - மிக்க சிறப்பு.

திரு நாடு - எல்லாநாடுகளினுஞ் சிறந்த நாடு; பரம பதம்.

நிகழ்ச்சி - செய்தி.

மாதவ ஸூரி-மாதவனென்னும் பெயருள்ள அந்தணர். ஸூரி-புலவருமாம்.

பயின்று - பழகி; பயில் - பகுதி.

ஸமய வாதம் - மதவிஷயமான சொற்போர்.

பாண்டித்யம் - புலமை. வேதாந்தி - வேதாந்தம்வல்லவர்.

ஆறு சாஸ்திரங்கள் - சிக்ஷை முதலியன; ஆறுவகைப்பட்ட மதங்களைப்பற்றிய நூல்களுமாம்.

பெருமிதம் - மிக்கசிறப்பு. மிதம் - அளவு; அதின்மேம்பட்டது, பெருமிதம். 'எல்லாரோடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக நிற்றல், பெருமித மெனப்படும்' என்பது, தொல்காப்பியவுரை.

வீறு-வேறொருவர்க்கில்லாத சிறப்பு; மிக்கசிறப்பு. அதனுடன் இருத்தல், வீற்றிருத்தல். புடை - பக்கம்.

பக்கம்—௧௬.

வாதப்போர் - சொற்போர்.

மாயாவாத மதம் - உண்மையாகவுள்ள பரப்ரஹ்மமாகிய பொருளொன்றே மாயையாற் பிரபஞ்சமாகக்காணப்படுகின்றதென்று துணிந்து கூறுஞ் சமயம்.

நிர்வகித்தல் - சரிவரநடத்துதல்.

சரம கைங்கர்யம் - இறுதிச்சடங்கு; உயிர்நீத்தபின்பு செய்யுஞ் சடங்கு. ஆகுலம் - கலக்கம்.

பெருமாள் - இராமபிரான். திருச்செவிசார்த்த - கேட்க.

இதிஹாஸஜ்ஞர் - இதிஹாஸமுணர்ந்தவர்கள். இதிஹாஸம் - ராமாயண பாரதங்கள்.

வடமொழியிலே முதலில்தோன்றிய காவிய மாதலால், வால்மீகிராமாயணம் 'ஆதிகாவ்யம்' எனப்படும்.

குச லவர்கள் - குசனும், லவனும். இராமபத்தினியான சீதாபிராட்டி கருவுற்றிருக்கையில் இராமபிரானால் வனத்திற்குஅனுப்பப்பட்டு அங்கு வால்மீகியாசிரமத்தில் இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றனளாக, வால்மீகிமாமுனிவர் அக்குமாரரில் மூத்தவனுக்கு 'குசம்'என்னுந் தருப்பைநுனியாலும் இளையவனுக்கு 'லவம்' என்னுந் தருப்பையினடியாலும் முனிபத்தினிகள்கையைக்கொண்டு தடவிக் காப்பிட்டுக் குசனும் லவனு மென நாமகரணஞ்செய்தனர். இவர்களைப் பட்டர்க்கும் ஸ்ரீராமப்பிள்ளைக்கும் உவமைகூறிய இவ்வாக்கியத்தி லுள்ள நயம், ஊன்றியுணரற்பாலது.

கானஞ்செய்தல் - இராகதாளங்களமையப் பாடுதல்.

பௌத்திரர் - புத்திரனது புத்ரர்.

சாரீரம் - குரல், கண்டத்தொனி.

இன் இசை - இனிமையான ராகம். அநந்தரம் - பின்பு.

பக்கம்—௧௭.

தீர்த்தப்பிரஸாதங்கள் - தீர்த்தமும் பிரஸாதமும். பிரஸாதம்-திருத்துழாய் முதலியன.

திருத்தி - திருந்தச்செய்து, சீர்திருத்தி.

தரிசனப் பிரவர்த்தகன் - மதத்தைப் பரவச்செய்பவன்.

கிலேசம் - துன்பம்.

பிரதிவாதிகள் - எதிர்வாதஞ்செய்பவர். மஸ்தகம் - தலை.

வேதஆதி ப்ரமாணம்-வேதம்முதலிய அளவைகள். பிரமாணம்-ஒன்றை நிச்சயித்தற்கு உரிய ஸாதநம். (இதுகொண்டு சாதிக்கப் படும் பொருள், பிரமேய மெனப்படும்.)

வேதாந்த் கர்ஜநம் - வேதாந்தவாதமாகிய முழக்கம்.

இங்குக் குறித்தது—"ப்ரமாணநகநிர்பிண்ண வாதிமத்தேப மஸ்தகம் - ப்ராஜதேநிகமாந்கர்ஜந் ஸ்ரீபராசரகேஸரீ" என்ற சுலோகம். உருவகவணி. 'மதயானைகளுடைய' என்று இருத்தல் வேண்டும்.

முறையே சதுர்வேதஸாரமாக நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம், திருவாசிரியம், திருவாய்மொழி, பெரியதிருவந்தாதி என்ற நான்கு தமிழ்த்திவ்யப்பிரபந்தஙகட்கும் அங்கமாகப் பெரியதிருமொழி, திருக்குறந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்ற ஆறு பிரபந்தங்களைத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்ய என்பது, உபதேசரத்தினமாலைப்பாசுரப்பகுதியின் பொருள்.

பக்கம்—கஅ.

திரு ஓலக்கம் - சிறந்த சபை.

பலகாலும் - பலமுறை. பாச்க - விஸ்தரமாக.

மை வண்ணம் - கறுத்தநிறமுடையதும், நறு - இயற்கைத்திவ்யபரிமளம்வீசுவதும், குஞ்சி - நுனிசுருண்டிருப்பதுமான, குழல்-திருக்குழற்கற்றை, பின் தாழ - பின்னே தழைந்திருக்கவும்,—மகரம் சேர் குழை - சுறுமீனின்வடிவுதோன்றச சித்திரவேலைசெய்யப்பெற்ற மகரகுண்டலங்கள், இரு பாடு - இரண்டுபக்கத்திலும், இலங்கி ஆட-பிரகாசித்துக்கொண்டுஅசையவும்,—எய் வண்ணம் வெம் சிலையே துணை ஆ - அம்பெய்யுமியல்பினதான வெவ்விய வில்லையே துணையாக(க்கைக்கொண்டு), இங்கே-இவ்விடத்திலே, இருவர் ஆய் வந்தார் - தாமும்தமதுதம்பியுமாக வந்து, என் முன்னே நின்றார் - எனதுஎதிரிலே நின்றார்; கை வண்ணம் - (அவரது) திருக்கைகளின் தோற்றம், தாமரை - செந்தாமரைமலர்போலும்; வாய்-வாயும், கமலம் போலும் - செந்தாமரைமலர்போலும்; கண் இணையும் - இரண்டுதிருக்கண்களும், அரவிந்தம் - செந்தாமரைமலர்போலும்; அடியும்-திருவடிகளும், அஃதே-அம்மலரேபோலும்; அவ்வண்ணத்து அவர் நிலைமை - அப்படிப்பட்ட தோற்றத்தையுடைய அவரது வடிவழகையும் வரவையும் நின்றநிலையையும், கண்டும் - பார்த்தும், தோழீ-தோழியே! நாம் அவரை தேவர் என்று அஞ்சினோம்-நாம் அவரைத் தேவரென்றுகருதித் திகைப்புற்றோம் என்பது, திருநெடுந்தாண்டகப் பாசுரத்தின் பொருள்.

இது, தோழியைநோக்கித் தலைவி கூறியது. இராமபிரான் தலைமகனாக ஜாநகி தலைமகளாகக் கொள்ளுதல் சாலும்.

குழல் - மயிர்முடி. 'இருவராய்வந்தார்'என்பதற்கு - தெய்வத் தன்மையும் மனிதத்தன்மையுங் கலந்தவராய் வந்தன ரென்றும், மேன்மையும் நீர்மையு மாகிய இரண்டுஇயல்புகளையு முடையராய் வந்தனரென்றும்உரைக்கலாம். 'ஆய்'என்றதை'ஆக'எனஎச்சத்திரி பாக்கி, மூன்றுமவரொருவருமின்றி நானும் அவருமாக இருவருமே யாயிருக்கும்படி தனித்துவந்தன ரென்றும் உரைப்பர். மூன்றுமடி யில்,அப்பெருமானுடைய சௌந்தரியமாகிய பெருங்கடலிலே தான் அகப்பட்ட சுழிகளைச சொல்லுகிறாள். "கண்ணும் வாயும் கைத்தல மும்அடியிணையும் கமலவண்ணம்"என்றார் முன்னும். வேறுஒப்புமை கிடையாமையால், எல்லாவற்றுக்கும் தாமரையே கூறப்பட்டது. 'அஃதே'என்றதில்,இதுவும் ஏற்றஒப்புமையன் றென்ற உபேக்ஷைக் குறிப்புத் தோன்றும். 'அவ்வண்ணத்து அவர்' என்றது - சொல்லு தற்கரிய தோற்றத்தையுடைய அவ ரென்றபடி. இங்கு, 'நாம்' என் றது, தனித்தன்மைப்பன்மை; இகழ்ச்சிக் குறிப்புமாம் 'தேவரெ ன்று அஞ்சினேமே' என்றது - அஞ்சவேண்டாதஇடத்தில் அச்சங் கொண்டதனால் உடனே கைப்பற்றுதுவிட்டேனே யென்று இரங் கியவாறு. 'தோழீ' என்ற விளியினால், அவரியல்பையும் எனதியல் பையும் அறிந்த நீ உடனிருந்தனையாயின் எனது அச்சத்தைத் தவி ர்த்திருப்பை யென்றபடி.

அதி விஸ்தரமாக - மிகவும் விரிவாக. (சொற்களின் விரிவை 'விஸ்தரம்'என்றும், மற்ற இடம்முதலியவற்றின்விரிவை'விஸ்தாரம்' என்றுங் கூறுகின்ற வடமொழிநுட்பம, உணரத்தக்கது.)

அருளிச்செய்தல் - கூறியருளுதல்.

பஞ்ச ஆசாரியர்-ஐந்து ஆசிரியர். "திருமாலையாண்டான் திருக் கோட்டிநம்பி திருவரங்கப், பெருமாளரையர் திருமலைநம்பி பெ ரியநம்பி" என்ற ஐவரும், இராமாநுஜாசாரியர்க்குஆசிரியர். (இவர் களில், பெரியநம்பி, இவர்க்கு 'ராமாநுஜன்' என்ற திருநாமமும் திருமந்திரமும் த்வய சரமசலோகங்களும் உட்படப் பஞ்சஸம்ஸ் காரஞ்செய்தருளி, முதலாயிரம் இயற்பா என்ற ஈராயிரமூலத்தை ஓதுவித்து, த்வயார்த்தத்தை அருளிச்செய்தனர். திருக்கோட்டி யூர்நம்பி, திருமந்திரார்த்தத்தையும் சரமசுலோகார்த்தத்தையும் அருளிச்செய்து, 'எம்பெருமானார்' என்ற திருநாமத்தைச் சாத்தி யருளினர். திருமாலையாண்டான்,திவ்வியப்பிரபந்தவியாக்கியானம் அருளிசசெய்து, 'சடகோபன்பொன்னடி' என்ற திருநாமத்தைச் சாத்தியருளினர். திருவரங்கப்பெருமாளரையர், பெரியதிருமொழி மூலமும் திருவாய்மொழிமூலமும் கண்ணிநுண்சிறுத்தாம்புவியாக் கியானமும் சரமபர்வார்த்தவிசேஷமும் அருளிச்செய்து,'லக்ஷ்மண முனி' என்ற திருநாமஞ் சாத்தியருளினர். பெரியதிருமலைநம்பி,

ஸ்ரீராமாயணவியாக்கியானம் அருளிச்செய்து, 'கோயிலண்ணன்' என்ற திருநாமஞ் சாத்தியருளினர்.)

நன்குமதித்தல் - கௌரவித்தல்.

ஒற்றெழுந்து நீங்கலாக உயிரும்உயிர்மெய்யுமாகிய எழுத்துக்களுள் முப்பத்திரண்டு சேர்ந்தது, ஒரு கிரந்தமெனப்படும்.

தர்க்கம் - நியாயவாதம்.

ஒப்பு உயர்வு அற்ற - தனக்குஒப்பாவதும் தன்னின்மேம்படுவதும் வேறொன்றுஇல்லையாகப்பெற்ற.

வாத சக்தி - வாதஞ்செய்யுந் திறமை.

ஸர்வஜ்ஞதை - எல்லாமறிந்திருக்குந்தன்மை.

பக்கம்—கக.

திரு வெண் கொற்றக் குடை - வெற்றிக்குஅறிகுறியாகிய வெண்ணிறமான சிறந்த குடை. மகாநாகம் - பெரும்பாம்பு.

திருமாற்கு - திருமகளோடுகூடியுள்ள எம்பெருமானுக்கு,— அரவு - ஆதிசேஷன்,—சென்றால் குடை ஆம் - (அவன்) உலாவியருளப்புக்கால் (தான் மழைவெயில்படாதபடி) குடையாயிருக்கும்; இருந்தால் சிங்காதனம் ஆம்-வீற்றிருக்குமிடத்துத் திவ்வியசிங்காசனமாம்; நின்றால் மர அடி ஆம் - நிற்குமிடத்துப் பாதுகையாம்; நீள் கடலுள் என்றும் புணை ஆம் - பெரிய கடலிலே (யோகநித்திரை செய்தற்கு) எக்காலத்திலும் தெப்பமாம்; மணி விளக்கு ஆம்-(ஏதேனுமொன்றை விளக்கிட்டுக்காணவிரும்பியபோது தனது ஆயிரந் தலைகளிலுமுள்ள மாணிக்கங்களால்) இரத்தினதீபமாம்; பூ பட்டு ஆம் - (சாத்தியருளுதற்குத்) திவ்வியபீதாம்பரமாம்; புல்கும் அணை ஆம் - சயனித்தற்குத் திருப்பள்ளிமெத்தையாம் என்பது, முதல் திருவந்தாதிப்பாசுரத்தின் பொருள். இச்செய்யுளில் இறுதியில் நின்ற 'திருமாற்கு அரவு' என்ற சொற்கள் முன்னர்ப்பலவிடத்தும் சேர்ந்து கடைநிலைத்தீவகவணியின்பாற்படும்.

பொய்கையாழ்வார் - முதலாழ்வார்மூவரில் முதல்வர்; காஞ்சீபுரத்தில் திருவெஃகாவென்னுந்தலத்தின் வடபுறத்திலுள்ள பொற்றாமரைப்பொய்கையில் ஒருதாமரைமலரில் உதித்தவர்; பாஞ்சஜந்யமென்னுந் திருமாலின்சங்கத்தினது அம்சமானவர்; பொய்கையில் அவதரித்தமைபற்றி, பொய்கையாழ்வாரென்று திருநாமமாயிற்று: பொய்கை - குளம். 'ஸ்ரீ' என்றது - 'திரு' என்பதுபோல, மேன்மை விளக்கும்அடைமொழி.

ஸ்ரீமத் - (எப்பொழுதும்) திருமகளுடன்கூடின, நாராயணன்- திருமால். நாராயண என்ற பெயர் - நார அயந என்றுபிரிந்து, சிருஷ்டிப்பொருள்கட்கெல்லாம் இருப்பிடமானவனென்றும், பிரளயப்பெருங்கடலைத் தனக்குஇடமாகக்கொண்டவனென்றும், மற்றுஞ்சிலவகையாகவும் பொருள்படும்.

ஸகல வித கைங்கரியம் - பலவகையான அடிமைத்தொழில்.

பிரளயகாலத்தில் அழியாமற் சேஷித்து [மிச்சப்பட்டு]ச் சிருஷ்டிப்பொருள்கட்கெல்லாம்முதலாதலால் 'ஆதிசேஷன்' என்றும், அந்தம்[அழிவு] இல்லாத நித்தியனாதலால் 'அநந்தன்' என்றும் பெயர். அனந்த + ஆழ்வான் = அனந்தாழ்வான்: 'மராடி,' 'குளாம்பல்' என்றாற்போன்ற மரூஉ முடிபு; தமிழ்மொழித்தொடர் சிறுபான்மை வடமொழித்தீர்க்கசந்திபெற்ற தெனினும் அமையும்.

உலாச் செல்லுதல் - உல்லாசமாகச் செல்லுதல்.

ஸ்தாபிக்க-நிலைநிறுத்த முற்றுஉணர்வு-அனைத்தையும்அறிதல்.

வெள்கி - வெட்கமுற்று. க்ருதார்த்தர் - பேறுபெற்றவர்.

ப்ரவசநம் - சொல்லிவெளியிடுதல். கோஷ்டீ - சபை.

பக்கம்—௨0.

யாத்ரிகன் - யாத்திரைசெய்பவன். நிகர் - சமானம்.

உபய காவேரி மத்தி-காவேரியின் இரண்டுபிரிவாகிய வடதிருக்காவேரி தென்திருக்காவேரி என்பவற்றின் நடுவிடம். உபயம் - இரண்டு. காவேரீ என்ற பெயர்-கவேரனென்னும் அரசனுக்கு மகளாகத்தோன்றியவ ளென்று பொருள்படும். மத்யம் - நடு.

வேதியன் - வேதத்தை ஓதுதற்கும் ஓதுவித்தற்கும் உரியவன், பிராமணன். 'மறையவன்' என்பதும் இது.

ஈடு - ஒப்பு. எடுப்பு - மேல். "ஈடுமெடுப்புமி லீசன்" என்பது, திருவாய்மொழி.

தர்க்கம் - நியாயசாஸ்திரம். வியாகரணம் - இலக்கணநூல். பிரமாணங்கள்கொண்டு ஆராய்ந்து பொருளைவெளியிடுவது, வடமொழியில்'மீமாம்ஸா'எனப்படும். அது - பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என இருதிறத்தது. வேதத்தின் முற்பகுதியாகிய கர்மகாண்டத்தை முக்கியமாகக்கொண்டு உணர்த்துவது, பூர்வமீமாம்சை; இது, ஜைமினிமிதம்: இதுவே, இங்கு 'மீமாம்சை' எனப்பட்டது. வேதத்தின் பிற்பகுதியாகிய உபநிஷத்துக்களை முக்கியமாகக் கொண்டு உணர்த்துவது. உத்தரமீமாம்சை; இது, வியாஸமதம்: இதுவே, இங்கு 'வேதாந்தம்'எனப்பட்டது. வேத அந்தம் - வேதத்தின் முடிவு, வேதத்தின் தேர்ந்தகருத்து.

அகம் - மனம். மறைவலாளன் - வேதம்வல்லவன்.

பக்கம்—௨௧.

நாகரிகன் - சதுரப்பாடுடையவன்.

பூஸுரன் - பூமியில் தேவன்போலக் கொண்டாடப்படுபவன்; அந்தணன்.

கழிவு இரக்கம் - நடந்தசெயலைக்குறித்து அநுதபித்தல்; பச்சாத்தாபம்.

திருத்திப்பணிகொண்டு-சீர்திருந்தச்செய்து அடிமைகொண்டு.

தரிசனத்தவர் - மதத்திற்சேர்ந்தவர்.

விடை கொள்ளுதல் - அநுமதிபெற்றுச்செல்லுதல்.

பிரபத்திமார்க்கத்தைப் பிரவர்த்திப்பித்தும் ஸ்ரீபாஷ்யம்முதலியவற்றை இயற்றியும் மற்றும் பலவாறாகவும் ஸ்ரீவைஷ்ணவவிசிஷ்டாத்வைதமதத்தை ராமாநுஜாசாரியர் போற்றி வளர்த்ததனால், இச்சமயத்துக்கு 'ராமாநுஜஸித்தாந்தம்' என்றும், 'எம்பெருமானார் தரிசனம்' என்றும்பெயராயிற்று. "எம்பெருமானார்தரிசனமென்றே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார் - அம்புவியோர், இந்தத் தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த, அந்தச் செயலை யறிகைக்கா" என்ற உபதேசரத்தினமாலையைக் காண்க. இவர் வெகுசிரமப்பட்டுத் திருக்கோட்டியூர்நம்பியிடம் உபதேசம்பெற்ற அதிரகசியமான திருமந்திரார்த்தத்தை உடனே உலகமனைத்தும் உய்யவேண்டுமென்று இயல்பாயெழுந்தபரமகிருபையாற் பலர்க்குஞ் சொல்லிப் பகிரங்கப்படுத்தியமை குறித்து மிகவுமுகந்த அத்திருக்கோட்டிநம்பி 'இத்தரிசனம், இதுவரை பரமவைதிகஸித்தாந்தமென்றுபெயர்பெற்றிருந்தது: இன்றுமுதல் 'எம்பெருமானார்தரிசனம்' என்னுங்கள்' என்று யாவர்க்கும் அருளிச்செய்ய, பிறகு நம்பெருமாளும் அங்ஙனமே கட்டளையிட்டருளினர்.

வாசி - வேறுபாடு, சிறப்பு; ('வாசியற', 'கைவாசி' என்பர்.)

பக்கம்—௨௨.

ஸ்ரீரங்கராஜ குமாரர் திருவரங்கப்பெருமாளுற் புத்திரஸ்வீகாரஞ்செய்தருளப்பெற்றவர்.

கொடி துவசம் சாமரம் - சமரமென்னும மானின் வெள்ளை மயிராற் செய்யப்பட்டதோர் இராசசின்னம்.

ஆலவட்டம் - ஒருவகைப் பெருவிசிறி; தாலவ்ருந்தமென்னும் வடசொல்லின் சிதைவுபோலும்.

அநந்தாழ்வான் - ஸ்ரீபாஷ்யகாரரால் அருளாளப்பெருமாளெம் பெருமானார்திருவடிகளில் ஆசிரியிப்பித்தருளப்பெற்றவர். அங்ஙனம் இவர் ஆசிரயித்தபோது, அருளாளப்பெருமாளெம்பெருமானார் 'குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாற்போல உடையவர் செய்தார்; நீர், எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்று அருளிச்செய்ததனால், இவர் உடையவர்சிஷ்யரெனப்படுவர். உடையவர்திருவுள்ளத்தின்படி, புஷ்பமண்டபமான பெரியதிருமலைக்குச் சென்று, 'ராமாநுஜன்' என்றபெயரால் திருநந்தவனம்வைத்து, திருவேங்கடமுடையானுக்குப் புஷ்பகைங்கரியஞ்செய்தவரிவர்.

சடக்கென - விரைவாக. அந்தோ - இரக்கக்குறிப்பிடைச்சொல். சுகுமாரர் - மென்மையானவர்.

நீவிரென்றபொருளில் தேவரீரென்றல் சம்பிரதாயம்; தேவர்போலச்சிறந்தநீர் என்று பொருள்காண்க.

'எழுந்தருளிற்று' என்ற இறந்தகாலத்தொழிற்பெயர், வினைமுற்றின்தன்மையடைந்தது ; உயர்த்தற்பொருளில் உயர்திணைக்கு அஃறிணைவந்த திணைவழுவமைதியும், முன்னிலைக்குப் படர்க்கை வந்த இடவழுவமைதியு மெனினுமாம்.

நியமித்தல் - கட்டளையிடுதல். குடி - குலம்.

பிரபந்நகுலம் - எம்பெருமானைச்சரணமடைதலாகிய பிரபத்தி மார்க்கத்தை யனுஷ்டிக்கின்ற அடியார்களின் வருக்கம்.

சங்கேதநாமம் - குழூஉக்குறியாகிய பெயர்.

பாங்குஆன - பிரியமான, இனிமையான.

கிருதயுகத்திலே ஸநத்குமாரர் சத்தியலோகத்திலிருந்து ஆநந்தமய திவ்விய விமானத்துடன் எழுந்தருள்வித்துக்கொண்டுவந்து திருநாராயணப்பெருமாளைப் பிரதிஷ்டிப்பித்த இட மாதலால் 'நாராயணாத்ரி' என்றும் 'திருநாராயணபுரம்' என்றும், த்வாபரயுகத்திலே பலராமன் கிருஷ்ணன் முதலிய யதுகுலத்தவர்களால் எம்பெருமான் ஆராதிக்கப்பட்ட இடமாதல்பற்றி 'யதுகிரி' என்றும்'யாதவாத்ரி' என்றும் பெயர்களாயின. அங்கு மூலமூர்த்தி 'திருநாராயணப்பெருமாள்'எனவும், உத்ஸவமூர்த்தி 'ராமபிரியர்' எனவும்,பிராட்டி'யதுகிரிநாச்சியார்'எனவும் படுவர். ராம ப்ரியர்-பலராமர்க்குப் பிரியமானவர். கலியுகத்திலே யதிராஜரான ஸ்ரீபாஷ்யகாரர் மேற்கேஎழுந்தருளியபொழுது காடுகெடுத்து நாடாக்கி, காலக்கிரமத்திலே புற்றுமூடிக்கிடந்த திருநாராயணப்பெருமாளைக் கண்டு பிரதிஷ்டைசெய்து, டில்லியரசனுடைய நவாபுவினால் எடுத்துக்கொண்டு செல்லப்பெற்று அவன்மகளது விளையாட்டுப்படிமையாயிருந்த ராமப்பிரியரை மிகமுயன்று கொணர்ந்து பிரதிஷ்டைசெய்து விசேஷமாக நித்தியநைமித்திகஉத்ஸவங்கள் நடப்பித்து மிகஈடுபட்டு 'இத்திருநாராயணபுரத்திலே நித்தியவாஸம்பண்ணுமவர்கட்கு நமக்குண்டான பரமபதம் உண்டாம்' என்று பேரபிமானத்துடன் அருளிச்செய்தன ராதலால், அத்தலம்'யதிசைலம்' எனப்படும். ஆனது பற்றி, 'எம்பெருமானார் திருவுள்ளத்திற்கு மிகப்பாங்கான யதுகிரி' எனலாயிற்று. திருநாராயணப்பெருமாளது நியமனத்தின்படி ராமப்பிரியரை எழுந்தருள்வித்தற்காக டில்லியரசனது அரண்மனையிலகத்தே எழுந்தருளியபொழுது ராமப்பிரியர் அனைவருங்காணக் கிண்கிணிசதங்கை யோசையுடனே எழுந்தோடிவந்து ஸ்ரீபாஷ்யகாரரது மடியிலே இருக்க, அவர் அளவற்ற ஆனந்தத்துடனே அணைத்துக்கொண்டு'என்செல்வப்பிள்ளையோ!'என்றுசொல்லியதனால், ராமப்பிரியர்க்கு 'செல்வப்பிள்ளை' என்றும் 'ஸம்பத்குமாரர்' என்றும் திருநாமமாயின.

வரவு ஏற்க - வரவைக் கொண்டாட.

புருஷகாரமாகின்ற பிராட்டியை முதலிற் சேவித்துப் பிறகு பெருமாளைச் சேவித்தல், சம்பிரதாயம்.

பெருமாள்-பெருமையுடையவன்; (பெண்பால்-பெருமாட்டி.)

பக்கம்—உ௩.

ஸ்ரீபாஷ்யகாரர் ஜீர்ணோத்தாரணஞ்செய்து திருநாராயணபுரத்திற் பன்னிரண்டுவருஷகாலம் எழுந்தருளியிருந்து பிறகு திருவரங்கத்தைநோக்கி மீளுமளவில் திருநாராயணபுரத்து அடியார்கள் அவர்பிரிவுக்கு வருந்தினராக, பாஷ்யகாரர் தம்மைப்போல ஒருவிக்கிரகத்தையுண்டாக்கி அதில் தமதுதிவ்வியசக்தியை ஏறிட்டு அப்படிமையை அவர்கட்குக் கொடுத்தருள, அதனை அவர்கள் அங்குப் பிரதிஷ்டைசெய்து திருவாராதனம்புரிவாராயினர். இத்திருவுருவம், 'தானுகந்தவுருவம்' எனப்படும். இப்படிவமே இங்கு 'அர்ச்சாவிக்கிரகரூபியாகிய எம்பெருமானார்' எனப்பட்டது. அர்ச்சாவிக்கிரகம் - பூஜைசெய்யப்படுகின்ற வடிவம்.

அணி அரங்கன் - அழகிய ரங்கநாதன்.

தனித் தலைவர் - ஒப்பற்ற தலைவர்.

பரவாதி மதஹஸ்தி பஞ்சாநநர் - பிறசமயவாதிகளாகிய மதயானைகளை வெருட்டுதலிற் சிங்கம்போன்றவர். ஹஸ்தம்-கை, துதிக்கை: அக்கையையுடையது, ஹஸ்தீ என்று யானைக்கும், பஞ்ச ஆநநம் - பரந்த முகமுள்ளது என்று சிங்கத்திற்கும் காரணக்குறி.

தூர்ய கோஷம் - வாத்திய முழக்கம்.

மணிப் பல்லக்கு - இரத்தினங்கள்பதித்த பல்லக்கு.

அறுதொழிலாளர் - ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறுதொழில்களை யுடையவர்; அந்தணர். மற்றைச்சாதியார்க்கும் வெவ்வேறுவகை ஆறுதொழில்கள் உள்ளனவாயினும், சிறப்பினால், இப்பெயர் பிராமணர்க்குவழங்கும்.

இயலாது - முடியாது. ப்ரசிஷ்யர் - சிஷ்யரது சிஷ்யர்.

வாசல் - வாயில் மரூஉ. நாலாறு - சில பல என்றபடி.

முதற்குலத்தவர் - நால்வகைவருணத்துள் முதல்வருணத்தார்.

செவிஏற்றல்-கேட்டல். காலஹரணம்-பொழுதுபோக்குதல்.

அந்தணாளர் - அம் தண் ஆளர்: அழகிய குளிர்ச்சியான அருளை ஆள்பவர்; பிராமணர். தநவாந் - செல்வமுடையவர்.

தேசாந்தரிகள் - வேறுதேசத்தவர்; அந்தரம் - வேறு.

பக்கம்—உ௪.

விப்ர வாக்யம் - அந்தணரது வார்த்தை.

விரகு - உபாயம், தந்திரம். பரிகரம் - உடன்கொணர்ந்த குடை கொடி முதலிய வரிசைகள்; பரிவாரமுமாம்.

மகததேசத்தரசனான பிருகத்ரதன் மைந்தனில்லாக்குறையாற் சண்டகௌசிகமுனிவனிடம் வேண்டிப் பெற்றதொரு மாங்

கனியைத் தன்மனைவியரிருவர்க்கும் பகிர்ந்துகொடுத்ததனால், அவ்விருவரிடத்தும் பாதிபாதியாகக் குழந்தைபிறந்தது; அவ்வுடற்பிளவுகளைக் கிராமதேவதையாகிய ஜரையென்பவள் பொருத்திப் பிழைப்பித்து அதனால் ஜராசந்தனென்றுபெயரிட்டனள். பிறகு வளர்ந்து பலபராக்கிரமங்களிற் சிறந்து பலஅரசரைக் கொன்றும் வென்று சிறைவைத்து மிருந்த அச்சராசந்தன், தனது மருமகனாகிய கம்சனைக் கிருஷ்ணன் கொன்றமைபற்றி அப்பெருமான்மீது பகைத்து எதிர்த்துப் பொருது பலமுறை தோற்றுப் பின்னும் கறுக்கொண்டு பெருஞ்சேனைதிரட்டலாயினன். பின்னர்த் தருமபுத்திரன் இராஜசூயயாகஞ்செய்யமுயன்றசமயத்திற் கண்ணபிரான் வீமனைக்கொண்டு சராசந்தனைக் கொல்விக்கக்கருதி வீமார்ச்சுனர்களையழைத்துக்கொண்டு செல்லும்போது, சராசந்தன்நெடுநாளாகச்சேர்த்து வைத்திருக்கின்ற மிகப்பெரியசேனையிலுள்ள அளவிறந்த சிறந்த பெரும்போர்வீரர்களோடெல்லாம் போர்செய்து அவர்களனைவரையுந்தொலைத்துப் பின்புஅவனையெதிர்த்துக் கொல்வதென்றால் அதிககாலதாமதமாகுமாதலால் அங்ஙனம் ஆகாமல் அவனைநேரிலணுகித் துவந்துவயுத்தத்திலேயவனைத்தொலைத்திடவேண்டுமென்னும் நோக்கத்தினால் மூவரும் அந்தணவடிவங்கொண்டு சென்று அரண்மனையினுள்ளே தடையின்றிப் புக்கு யுத்தபிக்ஷைகேட்க, அவன் அதற்குஇணங்கி வீமனோடு பொருது மாண்டனன் என்ற வரலாறு, இங்குஒப்புமைகுறிக்கப்பட்டது. ("அந்தணர்படிவந் தாங்கி ஆடமரிரந்துபெற்று, வெந்திறல்விளையும் வெம்போர் வீமனைவிளப்பினல்லால், மைந்துவீற்றிருந்ததிண்டோண்மகதர்கோன் கடலந்தானை, சிந்திடப்பொருது வெல்லுந்திறத்தினர் யாவ ரென்றான்" என்ற பாகவதம், இங்குக் காணத்தக்கது.)

வாசுதேவன் - வசுதேவனது குமாரன்.

கோலம் - வடிவம், வேடம்.

தண்டம் - கோல். கமண்டலம் - ஜலபாத்ரம். இவை, துறவிக்கு உரியன. பிக்ஷுகர் - அந்நபிக்ஷைவாங்கியே யுண்ணக்கடவரான சந்யாசிகள். அவர்களுரிய வேஷமென்க.

போஜநஅர்த்திகள் - உணவுவேண்டியவர். விரவி - கலந்து.

கா பிக்ஷா - யாது பிக்ஷை? தர்க்க பிக்ஷா - வாதமாகிய பிக்ஷை.

விடை இறுத்தல் - உத்தரஞ்சொல்லுதல்.

தீர்த்த வாஸி - புண்ணியதீர்த்தங்களினருகில் வசிப்பவன்.

பக்கம்—உரு.

தரம் - தகுதி, திறமை.

பொரும் ஆறு - போர்செய்யும் விதம். நிகழ்த்த - நடத்த.

மாயி சித்தாந்தம்-மாயையையுடைய மதம்; மாயாவாதசமயம். 'தமதுகொள்கை' என்றது, விசிஷ்டாத்வைதசித்தாந்தத்தை.

வாசி - வேறுபாடு.

'உறங்கும்பெருமாள் அவர் உலாவும்பெருமாள் நீர்'—"பீதக வாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து," "ஆசார்யஸ்ஸஹரிஸ் ஸாக்ஷாத்சரரூபீ நஸம்ஶயஃ" என்றபடி எம்பெருமான் தானே ஆசாரியவடிவமாய் வந்தருளின னென்க.

பரபரப்பு - அதிவிரைவு. ஆட்கொள்ளுதல் - அடிமையாகக் கொள்ளுதல். மந்திர மந்திரார்த்தங்கள்-மந்திரங்களும், மந்திரங்களின் அர்த்தங்களும்.

பர ப்ரஹ்ம ஸ்வரூபம்-அனைத்தினும்மேம்பட்ட தான பரமாத்மாவின் தன்மை. சரண ஆகதி-அடைக்கலம் புகுதல். முக்தி-(பற்றுக்களை)விட்டுஅடையும்இடம், வீடு. கர்மம் - ஊழ்வினை. அர்த்த பஞ்சகம் - ஐந்து அர்த்தங்கள்.

பக்கம்—௨௬.

திருமகள் கொழுநன் - இலக்குமியின் கணவன்.

மாயாவாத பரமாக - மாயாவாதமத விஷயமாக.

யோஜித்து - பொருத்தி.

தான் அவனாக நினைதல் - ஜீவாத்மாவாகிய தான் அப்பரமாத்மாவெனக் கருதுதல்.

விசிஷ்டாத்வைதம் - பரமாத்மா வேறு, ஜீவாத்மா வேறு. ஆயினும், உடம்பினகத்துஉயிர்போல ஜீவாத்மாவினகத்துப் பரமாத்மா அந்தராத்மாவாயிருந்து இயக்குதலால் பிரஹ்மத்துக்கு ஜீவன்கள் சரீரமாதல்பற்றி ஒற்றுமைநயம்அமைகின்றதென்று கூறுஞ் சமயம்.

தான் அவனுக்கு அடிமை - ஜீவாத்மாவாகிய தான் பரமாத்மாவாகிய எம்பெருமானுக்குத் தொண்டன். "தாள்வணங்காத், தானவனாகமிடந்தானுக்காளென்றுதன்னையெண்ணாத், தானவனாக நினைந்திருப்பார்க்கென்றுந்தானவனே" என்றதிருவேங்கடத்தந்தாதியைக் காண்க. பரமாத்மா நியாமகனும் தாரகனுமாய்த் தலைவனாக, ஜீவாத்மா நியாம்யமும் தார்யமுமாய் அடிமையா மென்க.

ஆழ்வார்களருளிச்செயலான திவ்யப்ரபந்தங்கள் - பொய்கையாழ்வார் முதலிய பன்னிரண்டுஆழ்வார்களால் அருளோடுசெய்யப்பட்டவையான இருபத்துநான்கு சிறந்த பிரபந்தங்களின் வடிவமாகிய நாலாயிரம்பாசுரங்கள். எம்பெருமானருளடியாக ஆழ்வார்கள் தங்களருளாற்செய்தவை யாதலால், 'அருளிச்செயல்' என்று அவற்றிற்குஒருபெயர். அருளி - இறந்தகாலவினையெச்சம்; அருள்கொண்டு என்றபடி.

நம்பெருமாள் - ஸ்ரீரங்கநாதன். அணிகலம் - ஆபரணம்.

பொன் பட்டுஆடை - பொன்னினால்தொழில்செய்யப்பட்ட பட்டுவஸ்திரம்; பீதாம்பரம். ஸ்ரீமாந் - ஐசுவரியமுடையவர்.

'அருள்வதே' என்ற ஏகாரம், வியப்புத்தோன்ற நிற்கும்.

ஸௌந்தர்யம் - அழகு. ஸௌகுமார்யம் - மென்மை.

அகங்காரி - யானென்னுஞ்செருக்குடையான், தானெம்பெருமானுக்குஅடிமையென்றுகருதாமல் தானே கடவு ளென்பவன்.

அடியேன் - அடிமைப்பண்பினடியாப்பிறந்த தன்மையொருமைப்பெயர். ஸௌலப்யம் - எளிமை.

பாகவத ஆராதநம் - எம்பெருமானடியார்களை (அப்பெருமானாகக்கொண்டு) வழிபடுதல்.

பக்கம்—உஎ

விரகர் - அறிவின் திறமுடையவர். நிர்வாஹம் - நிர்வகித்தல்.

நீத்து - விட்டு. சுற்றத்தவர் - உறவினர்.

தகைய - தடுக்க. கூறுஇட்டு - பங்காக்கி.

தொடர்பு - சம்பந்தம். ஆசிரமம் - நிலை.

'நிகமாந்த யோகி' என்ற திருநாமம்-வேதாந்தம்வல்ல துறவியென்று பொருள்படும்; வேதாந்திமுனிவர்.

இங்கன் - இயங்கனம்: விகாரம்.

பக்கம்—உஅ.

ஆதரம் - அன்பு. பூரித்து - நிறைத்து, தேக்கி.

சந்திரபுஷ்கரிணி - திருவரங்கம்பெரியகோயிலில் ரங்கநாதன் பள்ளிகொண்டிருக்குமிடத்துக்குப் பின்புறத்தே யுள்ளதொரு புண்ணியதீர்த்தம்; க்ஷயரோகமடைந்து அழியும்படி தக்ஷமுனிவனாற்சாபமடைந்த சந்திரன் தவஞ்செய்து அச்சாபநிவிருத்திபெறுதற்கு இடமான குளம். புஷ்கரம் - தாமரை; அதனையுடையது, புஷ்கரிணி.

கண்வளர்தல் - துயிலுதல், பள்ளிகொள்ளுதல்.

கஜேந்திர ஆழ்வான் - கஜேந்திரனாகிய பக்தன். கஜ இந்திரன் - யானைத் தலைவன்; சிறந்த யானை யென்க: சிறப்புப்பற்றி வந்த உயர்திணை; "யானையுளரசன்," "நாகாதிபன்" என்றாற்போல. இந்திரத்யும்நனென்னும் பாண்டிநாட்டரசனது சாபவடிவான யானை, நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக்கொண்டு திருமாலைப் பூசித்துவருகையில் ஒருநாள் பெரியதொரு தாமரைத் தடாகத்திற் பூப்பறித்தற்குஇறங்கியபொழுது, ஹூஹூவென்னுங் கந்தருவனது சாபவடிவான முதலையினாற் கவ்வப்பட்டு, 'ஆதிமூலமே!' என்றுகூவியழைக்க, திருமால் கருடாரூடனாய் எழுந்தருளிச் சக்கராயுதத்தைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை விடுவித்துப் பாதுகாத்தனனென்பது, இங்குக்குறித்த கதை.

ஆதி மூலம் - முதற்பொருள்கட்கெல்லாம் முதலான பொருள்;"முதலாவார் மூவரே அம்மூவருள்ளும், முதலாவான் மூரிநீர்வண்ணன்" என்றார் பெரியாரும்.

ஐம்பொறி - மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் பஞ்சேந்திரியங்கள்; பிறவித்துன்பமாகிய கடலுக்கு இவை முதலைகள்.

பிராதஸ்ஸ்நாநம் காவேரியிலும், மாத்தியான்னிகஸ்நாநம் சந்திரபுஷ்கரிணியிலுஞ் செய்வர்.

பொய்கை - மானிடராக்காத நீர்நிலை; ஸரஸ்.

அறிதுயில் அமர்தல் - எல்லாச்செய்திகளையும்அறிந்துகொண்டே தூங்குகின்றவன்போலிருத்தல்; யோகநித்திரை செய்தல். இவ்வுறக்கம் - 'விழிதுயில்', 'பொய்த்துயில்', 'துயிலாத்துயில்'எனவும் படும். அமர்தல் - பொருந்துதல்.

பக்கம்—உசு.

பள்ளிகொள்ளுதல் - படுக்கைகொள்ளுதல். தாய் குழந்தைக்குப் பால்கொடுத்து அதன்முகமலர்ச்சிகாண்கைக்குப் பாங்காகச் சாயுமாறுபோல, ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு இராச்சியத்தைக்கொடுத்து அவரதுபொலிவைப்பார்ப்பவனாய்த் தென்னிலங்கைத்திசை நோக்கித் திருக்கண்வளர்கின்றன னென்க.

பக்தபராதீநன் - ஸ்வாதீநனன்றி அடியார்கட்குஅதீநனாயிருப்பவன்.

சேனாபதியாழ்வான் - எம்பெருமானடியார்களின் திரளுக்குத் தலைவரும், சேனைமுதலியாரெனப்படுபவரும், கையிற்பிரம்புகொண்டு பகைவென்று பாதுகாவல்செய்பவரு மாகிய விஷ்வக்ஸேநர்.

பெரியதிருவடி - கருடன். (சிறியதிருவடி - அநுமான்.) இராமாவதாரத்தில்மாத்திரம் வாகனமாயும் தொண்டுசெய்தும் வழிபடுதல்பற்றி அநுமானைச் சிறியதிருவடியென்றும், எப்பொழுதுமே வாகனமாயும்தொண்டுசெய்தும்உதவுதல்பற்றிக் கருடனைப்பெரிய திருவடியென்றும் கூறுதல் சம்பிரதாயம். திருவடி - திருவடித்தொண்ட னென்றவாறு. "சிறைப்பறவை புறங்காப்ப" என்னும்படி கருடாழ்வான் தனது சிறகுகள்கொண்டு வீசி அசுரர் அரக்கர் முதலிய கொடியவர்களை யழித்து எம்பெருமானுக்குப் பாதுகாவல் செய்த லுணர்க. "மேலாற் பரந்த வெயில் காப்பான் வினதைசிறுவன் சிறகென்னும்,மேலாப்பின்கீழ் வருவான்"என்றதுங் காண்க.

ஆய்த்து = ஆயிற்று.

இத் தத்துவம் - இப் பரம்பொருள்; திருமால்.

ஸர்வ ஈச்வரன் - அனைத்துக்குந் தலைவன்.

பிராட்டி - திருமகள்;பிரான் என்பதன் பெண்பால்.

புருஷகாரம் - தகவுரைகூறியுதவுந் துணை.

பற்ற - கொள்ள. அடைய.

நம்-நம்மைஅடிமைபூணுதற்குஉரிய,திரு உடை-திருமகளோடு எப்பொழுதும் கூடியுள்ள, அடிகள்தம் - பெருமானுடைய, நலம் கழல் - சிறந்த திருவடிகளை, வணங்கி - வணங்கவே என்பது, திருவாய்மொழிப்பாசுரப்பகுதியின்பொருள். 'நம்'என்றது - 'திரு'என்பதனோடும், 'அடிகள்'என்பதனோடும் இயைதற்குஉரியது. அடிகள்

—"பாதா:."நலங் கழல் - சரணாகதருடையகுற்றங்களைப்பாராதே அவரைக்கைக்கொள்ளுந் திருவடிகள். வணங்கி - எச்சத்திரிபு.

'கண்டீரே'என்ற எகாரம் - வினா.

'நிழல்'என்றது, ஆதரவு என்றபடி.

இன்றிஅமையாது - இல்லாமல்முடியாது: அவசியம்.

அவள்முன்னாகவே-அவளைமுன்னிட்டுக்கொண்டேயென்றபடி.

பற்றுதல் - எம்பெருமானைச் சரணமடைதல்.

**பக்கம்—௩௦.**

முந்தை வினை அகல - பழமையான கருமங்கள் நீங்கும்படி, முன் அருளும் - முன்நின்று அருள்செய்கின்ற, ஆரியனால்-(எனது) ஆசாரியர்மூலமாக, நான்—, எந்தை எதிராசன் இன் அருள் சேர்ந்து - எமக்கெல்லாந்தலைவரான ஸ்ரீபாஷ்யகாரரது இனிமையான திருவருளைப் பெற்று, அந்தம் இல் சீர் பொன் பாவைதன் அருளால் - அளவற்ற புகழையுடைய பொன்மயமானபதுமைபோலழகியதிருமகளின் கருணையினால், பொன் அரங்கர் தாள் பணிந்து - அழகிய ஸ்ரீரங்கநாதருடைய திருவடிகளைச் சரணமடைந்து, நல்பால் அடைந்து உய்ந்தேன் - நல்வழிப்பட்டு உய்வுபெற்றேன் என்பது, விவரணமாலைப்பாசுரத்தின் பொருள். 'ஆரியன்' என்றது, ஸ்வாசாரியரை. எந்தை-எம்பெருமானார். எதிராசர்=யதிராஜர்: சந்யாசிகட்குத் தலைவர். அந்தம் - அழிவுமாம். சீர் - நற்குணநற்செய்கைகளெனினுமாம். பால்-இயல்பு, உரிமை. நற்பால் அடைந்து உய்ந்தேன் - நற்கதியாகிய முத்தியைப் பெற்று வாழ்ந்தேனென்றலுமாம்; தேற்றம்பற்றி வந்த இறந்தகாலம்: பால் - இடம். விவரணமாலை, வாதிகேசரி அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்தது. இவர்க்குஆசாரியர் - பெரியவாச்சான்பிள்ளையும், அவர்குமாரரான நயினாராச்சான்பிள்ளையும்.

குரு இன் அருளால் - ஆசாரியருடைய இனிமையான கிருபாகடாக்ஷத்தினால், செய்யவளை திரு தாள் வணங்கி - திருமகளைத் திருவடிதொழுது,—செய்ய வளை குலம் சூழ் அரங்க ஈசன் - கழனிகளிலுள்ள சங்கினங்கள் சூழப்பெற்ற திருவரங்கத்துக்கு நாதனும், அளைக்கும் புவிக்கும் அமுதுசெய்ய சிறிது அங்காந்த செம் வாய் முகுந்தன் - வெண்ணெயையும் பூமியையும் உண்ணுதற்குச் சிறிது திறந்த சிவந்த வாயையுடைய முகுந்தனென்னும்ஒருதிருநாமமுள்ளவனுமான திருமாலினது,செய்ய வளைக்கும் சிலம்பு அணி பாதங்கள் - செவ்வியையுடைய வளைந்துள்ள சிலம்பென்னும் ஆபரணத்தை யணிந்த திருவடிகளை, சேர்ந்தனம் - அடைந்தோம் என்பது, திருவரங்கத்தந்தாதிச்செய்யுளின் பொருள்.

நல்லாசிரியரையடுத்து அவரபிமானத்தை அவரருளாற்பெற்று அதுமூலமாகவுண்டான பிராட்டிபுருஷகாரபலத்தாற் பெருமாள்

திருவடியிலே சரண்புகுந்தோ மென்றார். ஈற்றுஏகாரம் - தேற்ற வகையால், 'இனி எமக்கு ஒருகுறையுமில்லை' என்ற பொருளைத் தொனிப்பிக்கும். 'சேர்ந்தனம்' என்ற தன்மைப்பன்மை - தன்குலத்து முன்னோரையும், பின்னோரையும், தனது அடியார்களையும் உளப்படுத்தும். வணங்கி, சேர்ந்தனம் என இயையும்.

செய்யவள் - செந்நிறமுடையவள். குரு - அஜ்ஞானமாகிய அகவிருளை யழிப்பவன்; கு - இருள், ரு - ஒழிப்பவன். இன் அருள்- பண்புத்தொகை. இன் - சாரியையுமாம். இரண்டாமடியில், 'செய்ய'-குறிப்புப்பெயரெச்சம்; வயலை'செய்' என்பது, கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுட் பன்றிநாட்டிலிருந்து வந்த திசைச்சொல். 'செய்ய வளைக்குலஞ் சூழ்'என்றஅடைமொழி,நீர்வளமிகுதியையுணர்த்தும். பெரியோர்உண்ணுதல்,அமுதுசெய்தலெனப்படும்;உயர்வுச் சொல். வெண்ணெயுண்ண வாய்திறந்தது, கிருஷ்ணாவதாரத்தில். 'புவி' என்ற சிறப்புப்பெயர், பொதுப்பொருளின்மேலதாய், உலகமென்றவாறும். அதனையுண்ண வாய்திறந்தது, பிரளயகாலத்தில். அநகாந்த. அங்கா - பகுதி. முகுந்தன், மு - முத்தியின்பத்தையும், கு - நிலவுலகவின்பத்தையும், தன் - (தன்அடியார்க்குக்) கொடுப்பவன். மூன்றாமடியில், 'செய்ய'-தெரிநிலைவினையெச்சம்; நான்காமடியில், செவ்வியுணர்த்துகின்ற செம்மையென்னும் பண்பின்மேற் பிறந்த குறிப்புப்பெயரெச்சம். சிலம்புவது சிலம்பு எனக் காரணக் குறி; நூபுரம், பாததண்டை: சிலம்புதல் - ஒலித்தல்.

திருவரங்கத்தந்தாதி,பிள்ளைப்பெருமாளையங்கார்அருளிச்செய்தது; வந்தஎழுத்துத்தொடரே மீண்டும்வந்து பொருள்வேறுபடுவதாகிய யமகமென்னுஞ் சொல்லணியை யுடையது.

என் நீர்மை கண்டு - (தன்னைப்பிரிந்தால் ஒருகணமும்ஆற்றமாட்டாத) எனதுஇயல்பை அறிந்துவைத்தும், இரங்கி - (என்பக்கல்) இரக்கங்கொண்டு, இது தகாது என்னாத-இந்தப்பிரிவு தகுதியன் றென்று கருதாது விட்டுப்பிரிந்த, என் நீலமுகில்வண்ணற்கு - நீலமேகம்போன்றதிருநிறமுடையனான என்தலைவனுக்கு என்பது, திருவாய்மொழிப்பாசுரப்பகுதியின் பொருள். நீர்மை - மென்மை.

கேட்டு - பிறர்சொல்லக்கேட்டு.

பசலை - (எனதுஉடம்பிற்) பசப்புநிறமானது,—காதலர் தொடு உழி தொடு உழி நீங்கி-(எனது) தலைவர்(எனதுஉடம்பிலே)தொட்ட தொட்ட இடமெல்லாம் நீங்கி, விடு உழி விடு உழி பரத்தலான் - (அவர் அவ்வுடம்பில்)விட்ட விட்ட இடத்திலெல்லாம் பரவுதலால், —ஊர் உண் கேணி - ஊரார்நீர்பருகுங்குளத்திலே, உண் துறை - (ஜனங்கள்இறங்கி) நீருண்ணுந்துறையில், தொக்க - கூடியுள்ள, பாசி - பாசியை, அற்று - போன்றதாம் என்பது, குறுந்தொகைச் செய்யுளின் பொருள்.

பசலையாவது - பிரிவாற்றாமையால் வருவதொரு நிறவேறு பாடு. மேற்பாசிபரந்தகுளத்திலே இறங்கி நீருண்பார் கைவைத்து ஒதுக்குமிடத்தில்மாத்திரம் பாசி நீங்க மற்றஇடங்களிற் பாசி பரவு மியல்பு, பசலைக்கு உவமைகுறிக்கப்பட்டது. ஊர்-ஊரிலுள்ளார்க்கு இடவாகுபெயர். சிறுகுளத்தை 'கேணி' என்பது, அருவாநாட்டி லிருந்துவந்த திசைச்சொல். தொக்க, தொகு - பகுதி. பசுமையை யுடையது பாசி யெனக் காரணக்குறி; பண்புப்பகுதி ஈறுபோய் ஆதிநீண்டது: இ - பெயர்விகுதி. அற்று-'அன்' என்ற உவமவிடைச் சொல்லடியாப் பிறந்த குறிப்புமுற்று; று - ஒன்றன்பால்விகுதி. மூன்றுமடியிலும் நான்காமடியிலும் அடுக்குக்கள், தொறுப்பொருளன. ஏ - தேற்றம்; இரக்கமும், அசையுமாம்.

பக்கம்—௯௧.

சங்கை - சந்தேகம், ஆக்ஷேபம்.

பரிவது இல் - துன்பமென்பதில்லாத, ஈசனை - ஸர்வேச்வரனை ஸ்ரீமந்நாராயணனை, பாடி - ஸாமகாநத்தாற் பாடி. விரிவது மேவல் - பெருகியதிருவருட்பெருக்கிற் சேர்தற்கு, உறுவீர் - உறுதியாகமுயல்பவர்களே! பிரி வகை இன்றி - (அவனை எப்பொழுதும்) விட்டுப்பிரித லில்லாமல், நல் நீர் தூய் - சுத்தஜலத்தைக்கொண்டு தெளித்து, புரிவதுவும் - விருப்பத்தோடு சமர்ப்பிப்பதும், புகை பூவே - (எளிய) புகையும் பூவுமேயாம் என்றது, திருவாய்மொழிப் பாசுரத்தின் பொருள். பக்தியோகஞ்செய்யமுயன்று அதில்அருமையைக்கருதி வருந்துகின்றவர்களை நோக்கி, கிடைக்கிற பத்திர புஷ்பதீர்த்தாதிகளைக்கொண்டு எம்பெருமான் எளிதில்ஆராதிக்கத் தக்கவ னென்பதை இங்ஙனம்அருளிச்செய்தார்.

பரிவது - பக்ஷபாதஞ்செய்வது எனினுமாம். 'ஈசனை' என்றது- நீங்கள் சிலவற்றைக்கொடுத்து அவனுக்கு ஒன்றும் ஆகவேண்டுவ தில்லை: இயல்பிலே அவன் எல்லாஐசுவரியங்களும்நிறைந்த பரிபூர்ண னென்ற குறிப்பு. 'நன்னீர்' என்றது, ஏலக்காய்முதலிய வாசனைத்திரவியங்களின் சேர்க்கை யில்லாத கேவலஜலம்மாத்திரமும் அமையு மென்றபடி. பொருள்கொடுத்துக்கொள்ளவேண்டாத எளிமைய தென்பது தோன்ற, இது முதலிற்கூறப்பட்டது. 'தூய்' என்றதனால், முறைப்படிதிருமஞ்சனஞ்செய்தலின்றிக் கண்டபடி தெளித்தாலும் போது மென்றவாறும். அடியார்பக்கல்அருள்செய்தற்கு ஏதேனுமொரு வியாஜத்தையே வேண்டிநிற்கின்றனன் கருணாநிதியான எம்பெருமா னென்பது கருத்து.

அகில் புகை - அகிற்கட்டையைப் புகைக்கின்ற புகை.

கருமுகைப்பூ - சிறுசண்பகப்பூ.

விசேஷித்து - சிறப்பித்து, அடைமொழிகொடுத்து.

விவரணம் - வகுத்துஉரைத்தல்.

கண்டகாரிகா புஷ்பம் - கண்டங்கத்தரிப்பூவை, தேவாய-பகவானுக்கு, ந நிவேதயேத் - உபயோகியாதிருக்கக்கடவன் என்பது, வடமொழிமேற்கோளின் பொருள். 'கண்டகாரிகா' என்ற பெயர்-முட்களையடைந்துள்ளதென்று உறுப்புப்பொருள்பெறும்.

பகவத் அர்ச்சனை - எம்பெருமானைப் பூசித்தல்.

சாஸ்திரம் - இங்கே, ஸ்ரீபாஞ்சராத்திரம்.

'காணும்'என்றது, தேற்றப்பொருள்தோன்ற நின்றது.

பக்கம்—ருஉ.

கள் ஆர் துழாயும் - தேன்பொருந்திய திருத்துழாயும், கணவலரும் - காக்கணம்பூவும், கூவிளையும் - வில்வபத்திரமும்,முள் ஆர் முளரியும் - முட்கள்நிறைந்த (நாளத்தையுடைய) தாமரையின் மலரும், ஆம்பலும் - ஆம்பற்பூவும் ஆகிய இவைகளை, முன் கண்டக்கால் - (எங்கேயாவது)எதிரிற்காணப்பெற்றால், புள் ஆய் ஓர் ஏனம் ஆய் புக்கு இடந்தான் பொன் அடிக்கு என்று உள்ளாதார் - அன்னப்பறவையாயவதரித்தவனும் வராகாவதாரஞ்செய்து (பிரளய வெள்ளத்திற்) புகுந்து (பூமியைக் கோட்டாற்) குத்தியெடுத்துவந்தவனுமான எம்பெருமானுடைய அழகியதிருவடிகளில் அருச்சித்தற்கு (இவைதகுவன) என்று நினையாதவர்களுடைய, உள்ளத்தை-மனத்தை, உள்ளம் ஆ கொள்ளோம் - ஒருமனமாக நினையோம் யாம் என்பது, பெரியதிருமொழிப்பாசுரத்தின் பொருள்.

திருத்துழாயின் மேன்மை தோன்ற, அதற்கு 'கள்ளார்' என்ற சிறந்தஅடைமொழி கொடுத்து அதனை முதலிலெடுத்தினர்; அதற்கு மேன்மை - முளைக்கும்போதே பரிமளத்துடன் தோன்றுதல். 'கணவிரமும்' என்ற பாடம், அலரிப்பூவுமென்று பொருள்படும். தாமாகத்தேடிச்சென்றுபறித்து அருச்சியாமற்போனாலும், தன்னடைவிலேகண்டவிடத்து நினைத்தலாயினுஞ்செய்யலாகாதோ வென்றற்கு, 'முன் கண்டக்கால்' எனப்பட்டது. ஆராதநோபகரண சௌகரியத்தை முன்னிரண்டடிகளில்அருளிச்செய்து, மூன்றாமடியில் எம்பெருமானது சௌலப்பியத்தை வெளியிடுவார், சிறந்ததொருபறவையாய் இழிந்ததொருவிலங்குமானவனென்றார்.முன்னொருகாலத்திற் பிரமனிடத்தினின்று வேதங்களைக் கவர்ந்துகொண்டு கடலினுட்சென்ற சோமுகாசுரனைத் திருமால் மத்ஸ்யாவதாரஞ்செய்து கொன்றபின்பு அன்னப்பறவைவடிவங்கொண்டு அவ்வேதங்களைப் பிரமனுக்குக்கூறியருளினனென்பதும், ஒருகாலத்திற் பூமியைப்பாயாகச் சுருட்டியெடுத்துக்கொண்டு கடலில்மூழ்கின இரணியாக்கனென்னும்அசுரனைத் திருமால் வராகாவதாரஞ்செய்து கொன்று பூமியைக் கோரதந்தத்தாற் குத்தியெடுத்துக்கொண்டுவந்து பழையபடி விரித்தருளினனென்பதும், இங்குக் குறித்த வரலாறுகள். 'பொன்னடிக்கென்று உள்ளாதார்' என்றத

ஞல், அருச்சனைசெய்யாவிட்டாலும் செய்யநினைத்தல் தானும் போது மென்பது தோன்றும். 'கொள்ளோம்' என்ற பன்மை, மற்றை ஆழ்வார்களையும் உளப்படுத்தியது.

தளம் - இலை. உபகரணம் - கருவி; ஸாதநமான பொருள்.

அப்ராக்ருத வஸ்து-பிரகிருதிசம்பந்தமில்லாத பொருள்; பரம் பொருள். ப்ராக்ருத வஸ்து - பிரகிருதிசம்பந்தமுடைய பொருள்; இப்பிரபஞ்சத்துப்பொருள்.

அல்லா - ஆணும்பெண்ணுமல்லாத, பயனற்ற, அலி - நபும்ஸகம். படி - தன்மை. சூந்யம் - இல்பொருள்.

ஸ்த்ரீ பும் நபும்ஸக ஆதி ஸர்வ வஸ்து விலக்ஷணன் - பெண்பாலும் ஆண்பாலும் அலிப்பாலும் முதலியனவாகவுள்ள எல்லாப் பொருள்களினும் மேம்பட்டவன்.

பக்கம்—௩௩.

புருஷ உத்தமன் - ஆடவரிற் சிறந்தவன்; உத்தம புருஷன்.

தன்மை சுட்டலும் உரித்து - (ஒருவர்க்குப் பாலையமும் திணையையமும் நிகழ்ந்தவிடத்து அங்ஙனம்ஐயமுறுதலேயன்றி அவர்க்கு அப்பொருள்களின்) உண்மைத்தன்மையைக் கருதுதலும் உரியது; (அப்பொழுது), அன்மை கிளவி - ஒருபொருள்மற்றைப்பொருளன்றாந்தன்மையை யுணர்த்துஞ் சொற்கள், வேறு இடத்தான - ஐயத்துக்கு வேறாய்த் துணிந்து தழுவிக்கொண்ட பொருளின்மேலனவாம், என மொழிப - என்று சொல்வர் (ஆசிரியர்) என்பது,தொல்காப்பியசூத்திரத்தின் பொருள்.

உதாரணம்:—'ஆண்மகனோ? பெண்மகளோ?' என்று ஆண்பால்பெண்பால்களில் ஐயம்நிகழ்ந்தபொழுது, துணிந்தபொருள் ஆண்மகனாயின் 'பெண்மகளல்லன்' என்றும், துணிந்தபொருள் பெண்மகளாயின் 'ஆண்மகனல்லள்' என்றும்,துணிந்தபொருளின் மேல் மற்றொன்றல்லாததன்மையை வைத்துக் கூறுக. 'ஒன்றோ? பலவோ?' என்று ஒருமைப்பால்பன்மைப்பால்களில் ஐயம்நிகழ்ந்தபொழுது, துணிந்தபொருள் ஒன்றாயின் 'பலவன்று'என்றும்,துணிந்தபொருள் பலவாயின் 'ஒன்றல்ல' என்றும், துணிந்தபொருளின் மேல் மற்றொன்றல்லாததன்மையை வைத்துக் கூறுக. இவை, பாலையம். இனி, 'குற்றியோ? மகனோ?' என்று உயர்திணை அஃறிணைகளில் ஐயம்நிகழ்ந்தபொழுது, துணிந்தபொருள் குற்றியாயின்'மகனன்று' என்றும், துணிந்தபொருள் மகனாயின் 'குற்றியல்லன்' என்றும், துணிந்தபொருளின்மேல் மற்றொன்றல்லாததன்மையை வைத்துக் கூறுக. இது, திணையையம். 'பெண்மகளல்லன்' என்ற முற்று, ஒருசொல்லாய் 'ஆண்மகன்' என்றதனோடு முடியும்; மற்றையவற்றிற்கும் இவ்வாறே கண்டுகொள்க.

நன்னூற்சூத்திரத்துப் பகுதியின் பொருள் - திணைப்பொருளிலும் பாற்பொருளிலும் சந்தேகந்தோன்றியவிடத்து, உண்மையாகத்துணிந்தபொருளின்மேல் அல்லாததன்மையைவைத்துச் சொல்வர் அறிவுடையாரென்பதாம். உதாரணம் முற்கூறியனவே.

திருவுள்ளம்பற்றி - மனத்திற்கொண்டு.

இ - இந்த[எனக்குஅருகிற்காட்சியளிக்கின்ற],சிறந்த—,வான்சுடரே-பெரிய ஒளிமயமாயுள்ள எம்பெருமானே!—பிறந்த ஆறும்-(நீ கண்ணனாய்த)திருவவதரித்தவிதமும், வளர்ந்த ஆறும் - (அங்கு) வளர்ந்தருளியவிதமும், பெரிய பாரதம் கைசெய்து ஐவர்க்கு திறங்கள் காட்டியிட்டு செய்து போன மாயங்களும் - மகாபாரதயுத்தத்திலே படைவகுத்துப் பஞ்சபாண்டவர்க்கு(அயர்வெல்லும்)உபாயங்களைக்காண்பித்து உதவிசெய்து(பிறகுதன்னுடைசசோதிக்கு)எழுந்தருளிய அற்புதச்செயல்களும், நிறம்தன் ஊடு புக்கு எனது ஆவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற-(எனது)நெஞ்சினுள்ளே புகுந்து எனதுஉயிரை மேல்மேல்உருகச்செய்து கவர்கின்றனை; உன்னை சேர்வது என்றுகொல் - (உனது ஸ்வரூபத்தை நிரந்தராநுபவஞ் செய்யும்படி யான்) உன்னைச்சேர்வது எப்பொழுதோ? என்பது, திருவாய்மொழிப்பாசுரத்தின் பொருள்.

பிறந்தஆறு - ஊழ்வினைக்கு உட்படாதவனாதலாற் பிறப்பிறப்பில்லாதமுழு முதற்கடவுளானஎம்பெருமான் அடியார்களைப்பாதுகாத்தற்பொருட்டுச் சாதாரணமநுஷ்யனாய்ப் பிறந்த வகை. வளர்ந்தஆறு - தன் காலின்கீழும் கையிலும் அகப்பட்டுப் பகைவர்பலர் அழியும்படியும் ஆயர்கள்ஆதரிக்கின்ற வெண்ணெய்முதலியன தனக்குஉணவாம்படியும் வளர்ந்த வகை.'ப்ரதிகூலர் மண்ணுண்ணவும், தான் நெய்யுண்ணவும், அநுகூலர் கண்ணுண்ணவுமிறே வளர்ந்தருளிற்று!' என்பது, நம்பிள்ளையீடு. பிறந்தவாறும் வளர்ந்தவாறும் - "ஒருத்திமகனாய்ப் பிறந் தோரிரவில், ஒருத்திமகனா யொளித்து வளர", "தந்தைகாலில்விலங்கற வந்துதோன்றிய தோன்றல்," "தாயர்மகிழ வொன்னார்தளரத் தளர்நடைநடந்த" என்றாற்போல்வன காண்க. 'திறங்கள்காட்டியிட்டு - தூதுபோயும், ஸாரத்யம்பண்ணியும், 'ஆயுதமெடேன்' என்று ஆயுதமெடுத்ததும், பகலை இரவாக்கியும்,எதிரிகளுயிர்நிலைகளைக்காட்டிக்கொடுக்கைதொடக்கமானவற்றையெல்லாஞ் சொல்லுகிறது' என்பது, நம்பிள்ளையீடு. கை - படைவகுப்பு. ஐவர் - தொகைக்குறிப்பு. செய்து - துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலநங்களாகிய திருவவதாரகாரியங்களை முடியச்செய்து. நிறம்-மார்பு; நெஞ்சுக்கு இலக்கணை:இடவாகுபெயர். தன் - சாரியை. உண்கின்ற - பலவின்பால்முற்று.

பக்கம்—௱௪.

தண்டகாரணியத்தில் வைஜயந்தமென்றநகரத்திலே இருந்து

அரசாண்டுவந்தவனும், திமித்துவசனென்னும் மறுபெயருள்ளவனு மான சம்பராசுரன், தேவர்களைவென்று அவர்களுலகத்தைக் கவர்ந்துகொள்ள, அரசிழந்த இந்திரன் தசரதனைச் சரணமடைய, அவர் சென்று பொருது அவனைக்கொன்று இந்திரனுக்கு அரசளித்தன ரென்பது, இங்குஅறியவேண்டிய கதை.

சங்காரம் - ஸம்ஹாரம்: அழித்தல்.

ஏக வீரன் - தனிவீரன்; ஒப்பற்ற வீரன்.

தசரத னென்ற பெயர் - பத்துத்திக்கிலுஞ் செல்லவல்ல தேருடையா னென்று பொருள்படும். 'சக்ரவர்த்தீ' என்ற வடசொல் லுக்கு - ஆஜ்ஞாசக்கரத்தை உலகமுழுவதுஞ் செலுத்துபவ னென்பது, அவயவப்பொருள்.

ஆண்புலிகள் - வீரரான புருஷசிரேஷ்ட ரென்றபடி.

இக்ஷ்வாகு - சூரியகுலத்தில் மநுவின் குமாரன்.

இங்கு 'அயோத்யை' என்றதற்கு, அதன் காரணப்பொருளில் நோக்கு; எவராலும் எதிர்த்துப்போர்செய்யமுடியாத இட மென்பது, அதன் உறுப்புப்பொருள்.

நான்குயுகங்களுள், திரேதாயுகம் - இரண்டாவது; தருமம் மூன்றுகால்களுன்றி நின்றது. துவாபரயுகம் - மூன்றாவது; தருமம் இரண்டுகால்களூன்றி நின்றது. கலியுகம் - நான்காவது; தருமம் ஒருகாலூன்றி நிற்பது.

'சாதுவான ஒருகிழவன்' என்றது, வசுதேவரை. 'வயோதிக னை ஓரிடையன்' என்றது, நந்தகோபரை. வயோதிகன் - வயஸ் அதிகன்; பிராயம்முதிர்ந்தவன்.

வடமதுரையில் தேவகியை வசுதேவர் விவாகஞ்செய்துகொண்டபோது அவளுக்குஉடன்பிறந்தமுறையாகிற கம்சன் கலியாண ரதத்தில் அந்த மணமக்களை யேற்றித் தான் அந்தரதத்தை நடத்தினன்; அப்போது ஆகாயவாணி கம்சனை விளித்து 'இவளுடைய எட்டாம்பிள்ளை உன்னைக் கொல்லும்' என்றது; உடனே உடன் பிறந்தவளைத் துணிக்கத்துணிந்த கம்சன் வசுதேவரால் நல்வார்த்தை சொல்லப்பட்டுத் தேவகியைக் கொல்லாதுவிட்டு அவளையும் வசுதேவரையும் தளையிட்டுச் சிறைவைத்துப் பின்பு அவள்வயிற்றிற் பிறக்கிற பிள்ளைகளையெல்லாங் கொல்லலானன். இங்ஙனஞ்செய்துவருகையில் கிருஷ்ணனாகியகுழந்தை அவதரித்தவுடனே சொன்னபடி தந்தைதாயர் அக்குழந்தையை எடுத்துக்கொண்டுபோய்க் கோகுலத்திலுள்ள நந்தகோபகிருகத்தில் யசோதையின் படுக்கையில் விட்டு, அங்கு மாயையினம்சமாய்ப்பிறந்திருந்த பெண்குழந்தையை எடுத்துவந்து கம்சனிடத்திற் கொடுத்துவிட்டனர். அதுமுதல் கிருஷ்ணன் கோகுலமென்னுந் திருவாய்ப்பாடியில் வளரலாயின னென்று அறிக. கம்சன் முன்பு திருமாலாற்கொல்லப்பட்ட கால

நேமியென்றஅசுரனது அம்சமாயிருத்தலும். அவனே 'பழம்பகை' என்றதற்குக் காரணம். சிறைக்கூடம் - சிறைச்சாலை. தன்னைக் கொல்லப்பிறந்த தேவகீபுத்திரன் ஒளித்துவளர்தலை யுணர்ந்த கம்சன் அக்குழந்தையை நாடிக்கொல்லும்படி மிகப்பலஅசுரர்களை ஏவ, அவர்கள் மரம்முதலிய பல அஃறிணைப்பொருள்களில் ஆவேசித்து முயல்வாராயினர்.

கோகுலம் - இடைச்சேரி. பிருந்தாவநம் - கண்ணன் அவதரித்த வடமதுரைக்குச் சிறிதுதூரத்தில் யமுநாநதிதீரத்தி லுள்ள இடம். கண்ணன்வளர்ந்தஇடமான கோகுலத்தி லுள்ள நந்தகோபர் முதலான இடையர்கள் அங்குப் பூதனைவந்துஇறந்தது, சகடு மாறிவீழ்ந்தது, இரட்டைமருதமரம்முறிந்தது முதலியவற்றை உற்பாதமென்றுகொண்டு அஞ்சி அவ்விடத்தைவிட்டுப் பிருந்தாவனத்திற்சென்று குடியேறினர். நெருஞ்சிற்காடாகிய அந்தப்பிருந்தாவனம், கண்ணன் குளிர்ந்ததிருவுள்ளத்தோடு அநுக்கிரகித்ததனால், மிகச்செழித்தது. பின்பு கண்ணன் நெடுநாள் அங்கு வளர்ந்தனன். ப்ருந்தா வநம் - நெருஞ்சிக் காடு.

துடுக்கன் - விரைவுடையான்.

பாம்பின் வாயிலும் விழும் துணிவுடையான்—பெரிய மலைப்பாம்புவடிவமாய் வாய்விரித்துக்கிடந்த அகாசுரனுடைய வாயினுள்ளே கண்ணபிரான் புகுந்து பெருவடிவங்கொண்டு அதனுடலைக் கீண்டெழுந்ததும், யமுநாநதியில் ஓர்மடுவில் இருந்துகொண்டு தன்விஷத்தினால் நீரைக்கெடுத்துவந்த காளியனென்னும் பாம்பின் மீது கண்ணன் குதித்து அதனைத் துவைத்து ஒடுக்கித் துரத்தியதும் காண்க. விரகு - வகை.

திருவாய்மலர்தல் - சொல்லுதல்; உயர்ச்சிச்சொல்.

'கல் எடுத்துக் கல்மாரி காத்தாய் என்றும்' என்பதற்கு - கோவர்த்தனமலையையெடுத்து(க் குடையாகப்பிடித்து இந்திரன்பெய்வித்த)கல்மழையைத்தடுத்து(ப் பசுக்களையும் கன்றுகளையும் இடையர்களையும்) பாதுகாத்தருளியவனே! என்றும் என்பது, பொருள். இதற்குப் பலவகை விசேஷார்த்தம்:— 'கோவர்த்தனமலைக்குப் பூஜைசெய்தோம், அதனால் உடனே பெருந்தீங்குவிளைவதாயிற்று; அதனைக் கண்ணன் முயன்று தடுத்து நம்மைக்காத்தருளினன்' என்று இடையர்கள் உட்கொண்டு அம்மலையைக்குறித்துக் குற்றங் குறைகூறுதிருக்குமாறு, அவர்களாராதித்த மலையைக்கொண்டே பாதுகாத்தனன் என்பதும்; திரிலோகாதிபத்யத்திலே நியமிக்கப் பட்டவனான தேவேந்திரன் தானே அவ்வுலகத்தில் ஒருசார் நிரபராதியாயுள்ள சிலஉயிர்கட்கு நலிவுசெய்யப்புக்கவிடத்து எம்பெருமான் தான் அருள்கொண்டு பாதுகாத்தனன் என்பதும்; 'மலையெடுத்து' என்னாது 'கல்லெடுத்து' என்றதனால், ஒருகல்லையெடுப்பது

போலச் சிரமமின்றி மலைமுழுவதையும் எளிதிலெடுத்தன னென்று தோன்றும் என்பதும் முதலியன. 'காணும்' என்றது, வாக்கியால ங்காரத்தோடு தேற்றம். இன்னகருவியைக்கொண்டு இன்னகாரி யத்தைச செய்தல்வேண்டு மென்னுங் கட்டுபா டில்லை ஸர்வசக்த னென எம்பெருமானுக்கு என்பது, இங்குப் போந்த பொருள்.

விபீஷணன் - இராவணன் தம்பி; சீதையைவிட்டிடும்படி இரா வணனுக்குத் தான் நல்லறிவுசொல்லியும் அவன் கேளாமையால், அவனை விட்டு வந்து இராமபிரானைச் சரணமடைந்தனன்.

அபயம் அளித்தல் - அஞ்சவேண்டா வென்றுசொல்லிப் பாது காத்தல்.

பக்கம்—ஈடு.

அபய ப்ரதாந ப்ரகரணம்-அபயமளித்தலைக்கூறுகின்ற இடம்.

பூர்வபக்ஷம் - ஆக்ஷேபம். சித்தாந்தம் - தேர்ந்தபொருள்.

ஸ்ரீரங்கவிமானத்திற் பள்ளிகொண்டருளுந் திருமால்,ஆதியிற் சத்தியலோகத்துப் பிரமனது திருவாராதனத்திருவுருவமா யிருந் தனர். பின்பு இக்ஷ்வாகுமகாராஜன் பிரமனைக்குறித்துத் தவஞ்செ ய்து அந்த ரங்கநாதனைத் தான் பெற்றுத் திருவயோத்திக்கு எழுந் தருளப்பண்ணிக்கொண்டுவந்து பிரதிஷ்டித்துத் திருவாராதனஞ் செய்தனன். அப்பெருமானே இக்ஷ்வாகுமுதல் இராமபிரான்வரை யிலுள்ள இரவிகுலமன்னவரெல்லார்க்கும் குலதெய்வமாகிவிளங் கினர். பிறகு இராமபிரான் அப்பெருமானை விபீஷணாழ்வானிடங் கொடுத்து ஆராதித்துவரும்படி நியமித்து அனுப்ப, அவ்வரக்கர்பெ ருமான் அவ்வாதிதேவனை அவ்விமானத்துடனே எழுந்தருளப்பண் ணிக்கொண்டு இலங்கைநோக்கிச்செல்லும்போது இடைவழியில் உபயகாவேரிமத்தியிலே பெருமான் புடைபெயராது விமானத்துட னே நிலைநின்றருளினர். அங்ஙனம் திருமால் திருவுள்ளமுவந்து தங்கிய இடமே ஸ்ரீரங்கம்.

தச அவதாரம் - மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாம நன், பரசுராமன், தசரதராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்ற பத்துத்திருவவதாரங்கள்.

சிறியாத்தான் - ஸ்ரீபாஷ்யகாரரது திருவடிகளில் ஆசிரயித்த வர்களில் ஒருவர்.

சக்கரவர்த்தித் திருமகன்-தசரதசக்கரவர்த்தியின் திருக்குமா ரன், இராமபிரான்.

ஏற்றம்-உயர்வு. நீர்மை-அடியார்க்குஎளியனாயிருக்குந்தன்மை.

பாண்டவர்கள், வனவாச அஜ்ஞாதவாசஞ் செய்துமுடித்த பின்பு, துரியோதனனிடத்திலிருந்து சமாதானத்திலேயே இராச் சியத்தைப் பெறும் விருப்பினராய்க் கண்ணபிரானைத் தூதனுப்ப, அப்பெருமான் சென்று பேசி அவனது எதிர்மறைக்கருத்தைத்

தெரிந்துகொண்டு மீண்டன னென்பதும்; இராமபிரான் தனது சிறியதாயான கைகேயிக்குத் தனதுதந்தை கொடுத்திருந்த இரண்டுவரங்களை நிறைவேற்றுதலினிமித்தம் அக்கைகேயியின்சொல்லால் அவள்மகனான பரதனுக்கு உரியதாம்படி இராச்சியத்தைத் தான் கைவிட்டுப் பதினான்குவருடம் வனவாசஞ்செய்ய உடன்பட்டு, மனைவியாகிய சீதையோடும், தன்னைவிட்டுப்பிரியாத தம்பியான இலக்குமணனோடும் புறப்பட்டுச் சென்றன னென்பதும் இங்கு அறியத்தக்கன.

அபிஷிக்த க்ஷத்ரியர் - பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்ற அரசர். (யதுவும் யதுகுலத்தாரும் யயாதிசாபத்தாலே அபிஷேகப்பிராப்தியற்றுச சிற்றரசராயினமை, இங்கு உணரத்தக்கது. சந்திரகுலத்து யயாதியின் புத்திரரைவருள் தந்தையின்அநுக்கிரகத்தாற் பட்டாபிஷேகஞ்செய்யப்பெற்ற பூருவின் குலத்தவர், பாண்டவர்; அவன் சாபத்தால் அபிஷேகமிழந்த மற்றைநான்குபுத்திரரில் யதுவின் குலத்தி லவதரித்தவர், கண்ணபிரான்.)

ஈரஆடை - ஈரவஸ்திரம்.

பக்கம்—௩௬.

உத்ப்ரேக்ஷை - இயல்பாகவுள்ள ஒருபொருளினிடத்துக் கவி தனதுகற்பனையை ஏற்றிக்கூறுதல்; தற்குறிப்பேற்றம்.

சொல் செறிவு - ஓசை நெகிழ்ச்சிபெறாது கட்டாயிருப்பது; இது, குணவலங்காரம்பத்தி லொன்று.

பொருள் பொலிவு - பொருளின் அழகு.

ஆசு கவி-விரைவிலியற்றுஞ் செய்யுள்; பொருள் அடி பா அணி முதலியன கொடுத்து மற்றொருவர் 'பாடுக' என்றவுடனே பாடுங் கவி; இது, கவியின் வகை நான்கனுள் ஒன்று: (மற்றவை - மதுர கவி, சித்ரகவி, விஸ்தாரகவி.)

இங்குக் குறித்த சுலோகம்—"த்வம்மேஹம்மே குதஸ்தத் ததபிதவகுதோ வேதமூலப்ரமாணத், ஏதச்சாநாதிஸித்தா தநுபவ விபவாத் தர்ஹிஸாக்ரோஶஏவ-க்வாக்ரோஶ: கஸ்ய கீதாதிஷு மம விதித: கோத்ரஸாக்ஷீ ஸுதீஸ்ஸ்யாத், ஹந்தத்வத்பக்ஷபாதீஸ இதி ந்ருகலஹே ம்ருக்யமத்யஸ்தவத் த்வம்" என்பது.

தொன்று தொட்டு - பழமை தொடங்கி. தொன்று - தொன்மை: தொல் - பகுதி, று - பண்புப்பெயர்விகுதி.

கீதை - பகவத்கீதை; மகாபாரதயுத்தத்தின் தொடக்கத்தில் அருச்சுனனுக்குக் கண்ணன் தத்துவமுபதேசித்தது; மகாபாரதத்துப் பீஷ்மபர்வத்திற் பதினெட்டுஅத்தியாயவடிவமாயுள்ளது.

பிரமாணஞ்செய்பவர் நீராடி ஈரவஸ்திரத்தையும் துளசிமாலையையுந் தரித்தல், மரபு.

பகவத் விஷய வைபவம் - எம்பெருமான்விஷயமான மகிமை.

ஈடேறுதல் - உய்வுபெறுதல். தஞ்சம் - ரக்ஷகம்.

பக்கம்—௯எ.

வெள்ளம் - ஒரு பெருந்தொகை. ஜாக்ரதை - விழிப்பு.
பிரகிருதி - உலகவியல்பு. அம்புஅறாத்தூணி - அம்புப்புட்டில்.
அடைகாத்தல் - பறவைகள் குஞ்சுபொரிக்குமளவும் முட்டையைக் காத்தல்.
குறிக்கொண்டு - கருத்தூன்றி. மதிள் — மதில்: போலி.
'நடையாடும் மதிள்கள் போலே' என்றது, இல்பொருளுவமை; சூழ்ந்துவந்து பாதுகாவல்செய்தற்கு ஒப்புமை.
ஜகத் ரக்ஷண ஜாகரூகர் - உலகத்தைப் பாதுகாத்தலிற் கண் விழிப்புள்ளவர்.
ஊறுபடுதல் - துன்பமடைதல். பாலிப்பது - பாதுகாப்பது.

பக்கம்—௯அ.

விழிப்புற்று - விழிப்புஉற்று. இலக்குஆகி - விஷயமாய்.
தொண்டர் குழாம் - அடியார்களின் கூட்டம்.
ஆர - திருப்தியடைய.
ஆகாரம் - வடிவம். இங்கிதம் - குறிப்பு. முடி - கிரீடம்.
தேவ ஆதிதேவன் - எல்லாத்தேவர்கட்கும் முதல்தேவன்.
புகல்இடம் - சரணமடையுமிடம். அடிஒற்றி - அநுசரித்து.
பொன் ஆய - பொன்மயமான, மா மதில் - பெரியமதில்கள், ஆர் - பொருந்திய. அரங்கர் - திருவரங்கத்து நாதரது, கதிர் ஆரும் நீள் முடி சேர்ந்த கை போது - ஒளிநிறைந்த நீண்ட கிரீடத்தைப் பொருந்திய தாமரைமலர்போன்ற (வலத்) திருக்கையானது, எ கடவுளர்க்கும் அதிராசன் ஆனமை காண்மின் என்றே சொல்லும்- எல்லாத்தேவர்கட்கும் தான் தலைவனானதன்மையைப் பாருங்களென்று தெரிவிக்கும்; பொன் தாள் ஆர் திரு கரம் - (அப்பெருமானது) அழகியதிருவடிகளை நோக்கிய (இடத்)திருக்கை, இதுவே சதுராননன் முதல் எல்லா உயிர்க்கும் சரண் என்னும் - 'இத் திருவடியே பிரமன்முதலிய எல்லாவுயிர்கட்கும் புகலிடம்' என்று தெரிவிக்கும் என்பது. திருவரங்கத்துமாலைச்செய்யுளின் பொருள். மற்று - அசை; வினைமாற்றுமாம்.
கதிர்ஆரும்-சூரியன்போன்ற எனினுமாம். 'கைப்போது சொல்லும்' - பேசாதது பேசுவதுபோலச்சொல்லப்பட்ட மரபுவழுவமைதி; [நன் - பொது - ௫௮.] பொன் தாள் - பொன்னாபரணமணிந்த தாளுமாம். சதுர்ஆநநன் - நான்முகன்.

பக்கம்—௯௯.

நியதி - கடமை. பகவத் ஆஜ்ஞை - பகவானுடைய கட்டளை.
அஷ்ட அக்ஷரம் - எட்டெழுத்து.

பக்கம்—௰.

வான் திகழும் - ஆகாயத்தையளாவி வளர்ந்து விளங்குகின்ற, சோலை - சோலைகளையும், மதிள் - மதில்களையுமுடைய, அரங்கர் - திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானது,வள் புகழ் மேல் - சிறந்த புகழைக்குறித்து, ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும் - சிறந்த தமிழ்வேதரூபமான ஆயிரம்பாசுரங்களாகிய குழந்தையை, ஈன்ற - பெற்ற, முதல் தாய் - முந்தின தாய்,சடகோபன் - நம்மாழ்வார்; மொய்ம்பால் வளர்த்த இதம் தாய் - (தன்)வலிமையால் (அக்குழந்தையை) வளர்த்த இனிய செவிலித்தாய், இராமாநுசன் - ஸ்ரீ பாஷ்யகாரர் என்பது, முதல்தனியனின் பொருள்.

'ஈன்றதாய் சடகோபன், வளர்த்ததாய் இராமாநுசன்' என்பதற்கு ஏற்ப, தமிழ்மறைகளாயிரத்தை 'குழந்தை' என்றது, ஏகதேசவுருவகவணி. மற்றைஅநேகதிருப்பதியெம்பெருமான்களின் புகழ் திருவாய்மொழியிலிருக்கவும் அதனை 'அரங்கர்புகழ்மேல்' என்றது, எம்பெருமான்களில் நம்பெருமாளுக்கு உள்ள தலைமை பற்றி யென்க. சட கோபன் - (குழந்தைகளைப் பிறந்தவுடனே அஜ்ஞாநத்துக்கு உள்ளாக்குகின்ற) சடமென்ற வாயுவைத் தம்பக்கல் நெருங்கவொண்ணாதபடி கோபித்துஓட்டியவர்.

அர்த்தங்கள்ஐந்து - மூலபுத்தகத்தின் ௨௫-ஆம் பக்கம்பார்க்க.

குருகையர் கோன் - திருக்குருகூரிலுள்ளார்க்குத் தலைவரான நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்ட, யாழின் இசை வேதத்து இயல் - வீணைகானத்துக்குஒத்த பண்ணமைதியையுடைய வேத சாரமும் இயற்றமிழிலக்கணம்நிரம்பியதுமான திருவாய்மொழியானது,—மிக்க இறை நிலையும்-(அனைத்தினும்)மேம்பட்ட பரமாத்மாவின் நிலைமையையும், மெய் ஆம் உயிர் நிலையும் - சத்தியமான ஜீவாத்மாவின் நிலைமையையும், தக்க நெறியும் - (அந்தஜீவாத்மா பரமாத்மாவைச்சேர்தற்குத்)தக்க உபாயத்தையும், தடை ஆகி தொக்கு இயலும் ஊழ்வினையும் - (அவ்வுபாயம்கைகூடுதற்குத்) தடையாய்த் திரண்டுபொருந்திய கருமத்தையும், வாழ்வினையும் - (ஜீவாத்மா பரமாத்மாவை யடைதலா லாகும்) பேரின்பவாழ்வையும், ஓதும் - சொல்லும் என்பது, இரண்டாவதுதனியனின் பொருள்.

இறை-இறைவன்; நாராயணன். குருகை - ஆழ்வார்திருநகரி. 'யாழினிசைவேதத்தியல்'என்றது, திருவாய்மொழி ஸாமவேதஸாரமென்பதும் தோன்ற நின்றது.

## அரிசமயதீபம்.

“இந்திரைபுடவியெனுமனைவியரோ
டெம்பிரான்திருவரங்கேசன்
செந்திருக்கரத்தால்தழீஇத் தனக்கினிய
சிறுவனாய்விரும்பி நஞ்செல்வம்
முந்தியவரிசையிவனதென்றருளால
மொழிந்தனன் பட்டருமுனியும
உந்தியம்புயத்திலுதித்தசேய்வானிற்
குயர்ந்துளானெனப்புவிக்குயர்ந்தான்

பரிவினமபெருமான் பின்னருஞ் சுதனும்
பட்டனுக்காயுவைப்பலித்தான்
உரியவிஞ்சையினையிலக்குவமுனிவோ
னுதவின னுலகெலாம்பரவுந
தெரிசனமுதன்மையளித்தனன்புகழும்
பாரெனுமுனிவரன் திருமா
லரிவரகுமரனைபட்டனுமபா
ரடிபணிந்திடவினிதமர் ந்தான்.”

---

## வாழித்திருநாமம்.

“தென்னரங்கர் மைந்தனெனச் சிறக்கவந்தோன் ‚
திருநெடுந்தாண்டகப்பொருளைச செப்புமவன் ‹
அன்னவயற் பூதூர னடிபணிந்தோன் வாழியே
அனவரத மெமபாருக் காட்செய்வோன் வாழியே
மன்னுதிருக் கூரனார் வளமுரைப்போன் வாழியே
வைகாசி யனுடத்தில் வந்துதித்தோன் வாழியே
பன்னுகலை நால்வேதப் பயன்தெரிவோன் வாழியே
பராசரனாஞ் சீர்பட்டன் பாருலகில் வாழியே.”